டிராஃபிக் மற்றும் அனைத்து வாகன சட்டப்பிரச்சனைகளுக்கும்
VINOTHKUMAR LICENSED PARALEGAL 647.667.6034 WWW.TRAFFICKUMAR.CA TK LEGALS

28 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059 Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca info@vlambaram.com
web: vlambaram.com tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3 (Eglinton & Markham) Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 28 | பாலம்: 09 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 01, 2018

# நிதியாண்டின் துண்டுவிழும் தொகை $11.7 பில்லியன்

ஒன்ராரியோ மாகாண அரசின் 2018-2019 ஆம் நிதியாண்டின் துண்டுவிழும் தொகை தற்போதைய லிபரல் அரசு சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தில் கூறியவாறு $6.7 பில்லியனாக இருக்கமாட்டாது. அது $11.7 பில்லியனாக இருக்கும் என ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகர் (Ontario Auditor General) Bonnie Lysyk 2018 ஏப்பிரல் 25இல் வெளியிட்ட தனது 27 பக்கங்களைக் கொண்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கதலீன் வின் ஐ முதல்வராகக் கொண்ட ஒன்ராரியோ நாடாளுமன்றத்தின் லிபரல் கட்சியைச் சேர்ந்த அரசின் நிதி அமைச்சர் Charles Sousa கடந்த 2018 மார்ச் 28இல் சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தில் 2018-2019ஆம் நிதியாண்டில் $6.7 பில்லியனும், 2019-2020ஆம் நிதியாண்டில் $6.6 பில்லியனும், 2020-2021ஆம் நிதியாண்டில் $6.5 பில்லியனும் துண்டுவிழும் எனத் தெரிவித்திருந்தார். ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தை பரிசோதனை செய்த ஒன்ராரியோவின் நிதிக் கண்காணிப்பு (Ontario's fiscal watchdog) அதிகாரியான ஒன்ராரியோ அரசின் கணக்கு பரிசோதகர் Bonnie Lysyk இந்த வரவு செலவுத்திட்டத்தின் ஒன்ராரியோ அரசின் செலவுகள் குறைவாக மதிக்கப்பட்டு (understated) அரசாங்கத்திற்கு அதிக வருவாய் கிடைப்பது மாதிரி ஒரு மாயை (Perception) உருவாக்கப்பட்டுள்ளது எனத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்தச் செலவினங்களைச் சரியாக மதிப்பீடு செய்தால் 2018-2019ஆம் நிதியாண்டில் $11.7 பில்லியனும், 2019-2020 ஆம் நிதியாண்டில் $12.2 பில்லியனும், 2020-2021 ஆம் நிதியாண்டில் $12.5 பில்லியனும் துண்டு விழும் என அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


Ontario Auditor General, Bonnie Lysyk

ஒன்ராரியோ அரசியல் சட்டப்படி ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகர் ஒவ்வொரு மாகாணத் தேர்தலின் முன்னரும் ஒன்ராரியோ அரசின் கணக்குகளைப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அதன்படியே Bonnie Lysykஉம் ஒன்ராரியோ அரசின் நிதிநிலைமை தொடர்பாக 2018ஆம் ஆண்டின் தேர்தலுக்கு முந்தைய இந்த அறிக்கையை அடுத்த மாகாண நாடாளுமன்றத் தேர்தலுக்கு ஆறு கிழமைக்கு முன்னர் வெளியிட்டுள்ளார். லிபரல் கட்சி யின் முன்னாள் முதல்வர் Dalton McGuinty தமக்கு முந்தைய பழைமைவாதக் கட்சி அரசு துண்டுவிழும் தொகையைத் தேர்தலிற்கு முன்னர் குறைத்துக் காட்டியது எனக் குற்றம் சாட்டி அது இனிமேல் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தை அமல்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகரின் அறிக்கையின்படி ஒன்ராரியோ அரசு மூன்று இடங்களில் கணக்குகளை சரியாகக் காட்டத் தவறியுள்ளது. முதலாவதாக ஒன்ராரியோ மக்களின் மின்சாரக் கட்டணத்தை 25%ஆல் குறைப்பதாகக் கூறிக்கொண்டு அரசு நீண்டகாலக் கடனை எடுத்தது. ஆனால் இதற்கான மேலதிக வட்டி மற்றும் அடமானச் செலவுகளைத் தனது வரவு செலவுத்திட்டத்தின் கணக்கில் காட்டவில்லை. அவை முற்றுமுழுதாக அரசுக்குச் சொந்தமான Ontario Power Generationஇன் செலவாகும் எனப் புதிய ஒரு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அச்செலவினங்களை வரவு செலவுத்திட்டத்தில் காட்டுவதில் இருந்து தவிர்த்து விட்டது. இதனால் இவ்வாறு செலவினங்களைக் குறைத்துக் காட்டியது சட்டப்படி சரியாக இருந்தாலும் கனேடிய பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின்படி (Canadian Public Sector Accounting Standards) தவறாகும்.

மற்றைய இரண்டு விடயங்களும், அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் முற்றுமுழுதாகக் கொண்டிராத 'ஒன்ராரியோ பொதுச்சேவை ஊழியர் சங்க ஓய்வூதியத்திட்டம்' (Ontario Public Service Employees Union Pension

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam Cell: 416-726-8055 Bus: 416-321-6969 HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
குமார் ஜெகசோதி Tel. 905.883.8812 Cell: 416.451.0565
Kumar Jegasothy Sales Consultant 11552 Yonge Street Richmond Hill, ON L4E 3N7 www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING... CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR 416.888.7877

TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692 888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah 416-889-1083 kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE இப்போது 2 இடங்களில்
Dr. Iru Vijayanathan, BDS, FAGD, MFDS, RCPS(Glasg.) DENTAL SURGEON
Wisdom Tooth Extraction. Root Canal. Gum Treatment. Tooth Filling. Dental Implant. Dentures.
3150 Eglinton Ave. East, Unit #5 Markham & Eglinton Tel: 416-264-3232
3351 Markham Road., #129 Markham & Steeles Tel: 416-609-2022

Sothihomes
Sothi Anandakumar
Email: info@sothihomes.guru Buy-Sell-Invest
Cell: (647) 408-1859 USA: (609) 423-6907
www.sothihomes.guru

Custom Cabinets & Bath. All kinds of Countertops
Royal KITCHEN
120 Whitmore Road, Unit 3&4 Vaughan, ON. L4L 5Z1
For Free Estimates Call: Tharma Tharmalingam 905-264-0090 | 416-728-6510

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

JENA GULASINGHAM 416.702.2030 jenahomelife@gmail.com
This Special Offer Valid Only This Year
Buy a Home with Me & Listing Commission FREE FREE FREE
HomeLife/Future Realty Inc.


SOLD
Detached Home -Stouffville
$150,000 + Upgrade BR:4+2 WR:4
Fin. Basement. Financing Available
$686,700
27 Sagewood Ave. Courtice.
Detached. BR:4+1 WR:3
Financing Available
$550,000
STOP Renting & Buy This
Brand New Townhouse, Whitby
BR:3 WR:3 Maint. Fee $140
4 BIG REASONS
to Call Thas to Sell Your Home
I Have More Buyers (Over 300)
Mortgage is Guaranteed to my Buyers
(No Mortgage Broker Fee)
Priced $80,000 Below Market Value
Vaughan. Detached 2-storey
BR:4+2 WR:6 Finished
Walk Out Basement
$639,900
End Unit Townhouse in
Scarborough. BR:3+1 WR: 2
Finished Basement
$129,900
Financing Available
Residential Vacant Land in Town of
Lindsay. Almost .65 Acres. Municipal
Water/Sewer, Build Your Dream Home
I Sell Homes For More Money
I Sell Homes Faster
(30 Days Guarantee)
Over 60 Tenants in My Waiting List
Need Rental Properties
Guaranteed Rental in One Week
$989,000
Brand New Home in Scarborough
$88 Spent on Upgrade BR:4 WR:4
Financing Available
RE/MAX
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
16 Years of Business Experience
Top Negotiator!
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.soldbythas.com


குளிர் காலம் ஆரம்பமாகிவிட்டது...
Unique HVAC Inc.
Heating & Cooling
50% கழிவு விலையில் உங்களது Heating
உபகரணங்களின் தரத்தையும் பாதுகாப்பையும்
உறுதிப்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பம்!!!
ONLY!!!
$39.99
WATER TANK
Six Months
Free Rental
RENTAL
Starting From:
$ 17.99 per month
WHAT WE DO:
∆ BBQ Gas Line.
∆ Fire Place.
∆ Humidifier.
∆ Air Cleaners.
∆ Air Conditioners.
∆ Furnaces.
∆ Natural Gas Dryer.
∆ Electrical Services.
∆ Water Heaters - Tank/ Tankless.
Purchase an Air Conditioner and Furnace together SAVE BIG!!!
COMBO SPECIAL Starting at: $3100
FURNACE BY ITSELF Starting at: $2199
உங்களது உபகரணங்கள் ஒன்ராரியோ மாகாண அரசால் அங்கீகரிக்கப்பட்ட
தகுதிவாய்ந்த தொழில் நுட்ப வல்லுனர்களால் சரிபார்க்கப்பட்டதா?
தொடர்புகளுக்கு:
Vino 647.989.4217
Kapilan 647.981.5224
Thano 416.543.5125
www.uniquehvacinc.com
uniquehvac.inc@gmail.com
www.facebook.com/uniquehvacinc

# வடக்கின் அடுத்த முதலமைச்சர் யார்?

**- விகிர்தன் -**

எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலில் சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட மாட்டார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. முதலில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் இதனை ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் இதனைக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், யாரை முதலமைச்சர் வேட்பாளராக நியமிப்பது என்பது குறித்து அவர்கள் தெரியப்படுத்தவில்லை. தேர்தல் நாள் அறிவிக்கப்பட்டதும், பொருத்தமான சந்தர்ப்பத்தில் அது குறித்து அறிவிக்கப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமந்திரன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில், விக்னேஸ்வரன் தான் இரண்டு வருடங்கள் மட்டுமே வடமாகாண முதலமைச்சராக இருப்பதாகவும் பின்னர் மாவை சேனாதிராஜா முதலமைச்சராக இருக்க வேண்டும் என்றும் முன்னர் கூறியதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கெல்லாம் பின்னர் பதிலளிப்பதாக கூறிவிட்டு இந்தியாவிற்கு ஆன்மீகப் பயணமொன்றை மேற்கொண்ட விக்னேஸ்வரன் நாடு திரும்பியதும் பதிலளித்துள்ளார். வாரம் ஒருமுறை அவரே எழுதி வெளியிடும் கேள்வி பதில் வடிவ அறிக்கையில் அவர் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். தன்னை மீண்டும் தமிழரசுக் கட்சி நிறுத்தாவிட்டாலும், மக்களின் நன்மை கருதி



கொள்கை ரீதியாக தம்முடன் உடன்படும் வேறு ஒரு கட்சிக்கூடாக தேர்தலில் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக நிற்கப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதிய கட்சி ஒன்றை தொடங்குமாறு பலரும் ஆலோசனை வழங்கி வருகின்றார்கள் என்றும், கொள்கை ரீதியாக உடன்படும் அனைவருடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதற்கான காலம் கனிந்துள்ளதா என்பது தனக்குத் தெரியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு தாயகம், இறைமை, சுய நிர்ணயம் என்ற அடிப்படை கொள்கைகளுக்காகவே கடந்த மாகாணசபைத் தேர்தலில் மக்களிடம் வாக்குக் கேட்டோம். மக்களும் எமக்கு அமோக வெற்றியை பெற்றுத்தந்து தன்னையும் முதலமைச் சராக்கினர் எனக் குறிப்பிட்டுள்ள அவர் இக்கொள்கையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலகியிருப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

2013ஆம் ஆண்டு வட மாகாண சபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படலாம் என்றே எதிர்பார்ப்பிருந்தது. அத்துடன் ஊடகவியலாளர் வித்தியாதரனின் பெயரும் அடிப்பட்டது. வித்தியாதரன் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுவதை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் விரும்பவில்லை. அதுமட்டுமன்றி, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால் மாவை சேனாதிராஜா களமிறங்கலாம் என்றே கட்சிக்குள் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், முன்னாள் நீதியரசரான விக்னேஸ்வரன் அழைத்துவரப்பட்டு முன்னிறுத்தப்பட்டார்.

அவரை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனே கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார். தமிழரசுக் கட்சிக்குள் இதற்கு எதிர்ப்புகள் கிளம்பின. அனைவரையும் அழைத்து விக்னேஸ்வரனே பொருத்தமானவர் என விளக்கினார். கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தனித் தனியாக சந்தித்து விளக்கமளித்தார். இறுதியில் விக்னேஸ்வரனே நிறுத்தப்பட்டு அவரே முதலமைச்சரானார்.

இன்று விக்னேஸ்வரனுக்கும் சம்பந்தனுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)



# நாமும் நமது இல்லமும் - 510

## ஆதனம் வாங்கும் வெளிநாட்டவர்களுக்கான வரி

ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397
416.321.6969



ஒன்ராரியோ அரசினால் கடந்த வருடம் (2017) நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டவர்களுக்கான மேலதிக ஆதன நிலமாற்று வரியின் தாக்கம் தெரிய வந்துள்ளது. ஒன்ராரியோ மாகாண அரசினாலும் ரொறன்ரோ உள்ளூராட்சி அரசினாலும் ஆதன மாற்று வரி அறவிடப்படுகின்றது. இவ்வரியானது வாங்கிய விலைக்கேற்ப மாறுபடும். விலை கூடிய ஆதனத்திற்கு அதிகமாக இருக்கும் இந்த வரியின் பெறுமதி ஒன்ராரியோ முழுவதும் ஒரேமாதிரியானதாகவே காணப்படுகின்றது. இதற்கு மேலாக ரொறன்ரோ பகுதியில் (முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களைத் தவிர்த்து) மேலதிக ஆதன மாற்றுவரியும் அறவிடப்படுகின்றது. ரொறன்ரோவினால் அறவிடப்படும் வரிக்கு முதல் தடவை வாங்குபவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஒன்ராரியோ எந்தப் பகுதியிலாவது முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களுக்கு $4,000 வரையான வரி மீளளிப்பும் வழங்கப்படுகின்றது. முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களை ஊக்குவிப்பதற்காக இதனை அரசு நடைமுறைப்படுத்தியது.

விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதன் ஓர் அங்கமாக ஆதனம் வாங்கும் வெளிநாட்டவர்களுக்கு புதிய வரி அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது ஒன்ராரியோவின் சனத்தொகை 9.3 மில்லியன் என அழைக்கப்படும் வரையறுக்கப்பட்ட பகுதியில் (Greater Golden Shoe Area) வெளிநாட்டவர்கள் வீடு, மனை வாங்கும்போது மேலதிக 15% வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. (உதாரணமாக $800,000 இற்கு ஆதனம் வாங்கும்



போது இந்த மேலதிக ஆதன மாற்றுவரி $120,000 செலுத்த வேண்டியுள்ளது.)
ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (GTA) 2017 ஏப்பிரலில் இருந்து விலை இறங்கி வருவதனைக் காணலாம். 2017இல் சராசரி ஆதன விலை $920,000 இற்கு சற்று அதிகமாகக் காணப்பட்டது. இவ் ஆண்டு மார்ச் இல் $785,000 ஆகக் குறைந்துள்ளது. ஏறக்குறைய 14% இறக்கமாகக் கொள்ளலாம். வெளிநாட்டவர்களின் வாங்கும்திறனும் கணிசமான அளவு குறைந்துள்ளது. அத்துடன் கடந்த வருடத்திலும், இந்த வருட ஆரம்பத்திலும் மொத்தமாக 0.75% அளவிலான கனடிய வட்டிவீதமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (கனடிய மத்தியவங்கியின் வட்டிவீதம் 1.25% ஆக உள்ளது) இதனால் உள்ளூர் வாங்குனர்களுக்கும் இறுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் அதிகமான முதல்தடவை வாங்குபவர்களும், வெளிநாட்டவர்களும் அடுக்குமாடி மனையில் முதலிடுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இருந்தபோதிலும், அதிகளவிலான வெளிநாட்டுப் பணம் கனடாவிற்குள் தொடர்ந்து இருப்பதாக பொருளாதார ஆய்வாளர்கள் கணக்கிடுகின்றார்கள். ஏற்கனவே அதிகரிக்கப்பட்ட வட்டிவீதம் மாதாந்த கட்டுப்பணத்தில் மேலதிக இறுக்கமான நிலைமையை பலரிற்கு ஏற்படுத்தியுள்ளது. மேலும் அண்மைக்காலங்களில் (2017) முதல் தடவையாக வாங்கியவர்களின் வாடகைப்பணம், ஆதனத்தின் மாதாந்த செலவிற்கு போதுமானதாக இல்லை. இந்நிலைமை நியாயமான முதலீட்டு கொள்கைக்கு முரணானது. 2017 இல் GTA பகுதியில் ஏறக்குறைய 50% ஆன வாங்குனர்கள் முதலீட்டாளர்களாகக் காணப்பட்டார்கள். வட்டி அதிகரிப்பு இவர்களிற்கு மேலதிக பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆதனவிலை அதிகரிப்பை கட்டுப்படுத்த மேலதிக ஆதனத்தை நிர்மானிப்பதற்காக மூன்று அரசுகளும் சேர்ந்து திட்டங்களை வகுக்க வேண்டும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். புதிய வரவாளர்களை மத்திய அரசு ஊக்குவிக்கின்றது. இவர்களின் வருகையால் மேலதிக ஆதனம் தேவைப்படுகிறது. இந்நிலைமை குறிப்பிட்ட காலம் தொடரும் என்பது இன்றைய நிலைமை.

யூன் 07, 2018இல் நடைபெறும் ஒன்ராரியோ அரசின் தேர்தலில் ஒன்ராரியோ பழமைவாதக்கட்சி (PC) ஆட்சி அமைத்தால் வெளிநாட்டவர்கள் மீதான ஆதன மாற்றுவரியை நீக்க இருப்பதாக ஆதன தலைவர் Doug Ford தெரிவித்துள்ளார். மேலும் ரொறன்ரோ பெரும்பாகத்தில் அதிக ஆதனங்கள் நிர்மாணம் செய்வதற்கான புதிய முறைகளைத் தான் பதவிக்கு வந்து நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் NDP இன் தலைவர், தமது கட்சி ஆட்சி அமைத்தால் Speculation Taxஐ உள்ளூர், வெளிநாட்டு வாங்குபவர்கள் மீது கொண்டு வர இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். ஆதன வியாபாரமும் இன்றைய அரசினால் பேசுபொருளாகக் காணப்படுகின்றது.




# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



**மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...**

WIN UP TO
$100,000
Everyone Who Funds A Mortgage With US Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**
**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232




# சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைமை பறிபோகுமா?

- ஆதித்தன் -

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்று கொண்டுவரப்படவுள்ளதாக தெற்கு அரசியல் மட்டத்தில் பேசப்பட்டு வருகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டவரப்பட்ட போது அதற்கு எதிராக சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வாக்களித்ததையடுத்தே சம்பந்தனுக்கு எதிரான இந்த நிலைப்பாட்டை மஹிந்த தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியினர் வெளிப்படுத்தி வருகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்பட்ட நாளிலிருந்தே சம்பந்தனை எதிர்க்கட்சிப் பதவியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தாலும் கடந்த ஒரு வாரமாக அதன் தொனி சற்று குறைந்துள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் ஆதரவாளர்கள் இதனைக் கூறிக் கொண்டிருக்கையில், மஹிந்த ராஜபக்ஸ இதில் தற்போது அதிக அக்கறையினை வெளிப்படுத்தவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அண்மையில் சம்பந்தன் குறித்து கருத்து வெளியிட்டுள்ள மஹிந்த ராஜபக்ஸ அவரை எதிர்க் கட்சி தலைமையிலிருந்து நீக்க வேண்டிய தேவை குறித்து தாம் அக்கறை கொள்ளவில்லை என்றும், வவுனியா நகரசபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்க முடியாமல் போனதை சுட்டிக்காட்டி தமிழ் மக்களே இப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பை நிராகரிக்க ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவித்திருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஸ சம்பந்தன் விவகாரத்தை புறமொதுக்கிவிட்டு, தற்போது அரசாங்கத்தை கவிழ்ப்பது தொடர்பான கருத்துக்களையே அதிகம் வெளியிட்டு வருகின்றார். பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ளச் செல்லும் சமயங்களில் கருத்து வெளியிடும் அவர் அரசாங்கத்தை கலைத்துவிட்டு உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்கின்ற கோரிக்கையை வெளிப்படுத்தி வருகின்றார்.

அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால், நாட்டின் பொருளாதாரம் சீர்கெட்டுள்ளதாகவும், முறையான நிர்வாகம் இல்லாத காரணத்தினால், விலைவாசி உயர்வடைந்து மக்கள் அவதிப்படுவதாகவும், நாட்டின் வளங்கள் வெளியாருக்கு தாரைவார்க்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துவரும் அவர், இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு பொதுத் தேர்தலே எனக் கூறுகின்றார்.



இவ்வாறு, மஹிந்த சம்பந்தன் தொடர்பில் தற்போது அதிகம் பேசாவிட்டாலும், அவரது ஆதரவாளர்கள் பேசுவதை நிறுத்தவில்லை. எவ்வாறாயினும் வெகுவிரைவில் சம்பந்தனின் எதிரக்கட்சித் தலைமைக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படும் என்று அவர்கள் கூறி வருகின்றனர். எனினும், கூட்டு எதிரணி உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்துக்களுக்கும், கட்சியின் கருத்திற்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது.

தம்மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதனை எதிர்கொள்எத் தாம் தயாராகவுள்ளதாக சம்பந்தன் கூறுகின்றார். ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக தெரிவானவர்கள். அக்கட்சி தேசிய அரசாங்கத்தின் ஒரு பங்காளிக் கட்சியாகவுள்ளது. சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து முழுமையாக வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தால் மாத்திரமே எதிர்க்கட்சித் தலைவர் பதவி அவர்களுக்குக் கிடைக்கும் எனவும், வேறு வழியில் அதனைப் பெறமுடியாது என்றும் கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

இதேவேளை, சம்பந்தனுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டால் தங்கள் கட்சி அவரைப் பாதுகாக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க இவ்விடயம் குறித்து கருத்து தெரிவிக்கையில், "அரசியல் நோக்கங்களுக்காகவே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குக் கூட்டு எதிர்க்கட்சியினர் முயற்சி செய்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். ஆரம்பத்தில் அரசை வீழ்த்துவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதனை நாம் தவிடுபொடியாக்கினோம்.

இந்த நிலையில் எதிர்க்கட்சி தலைவர் பதவியின்மீது கூட்டு எதிர்க்கட்சியின் அவதானம் திரும்பியுள்ளது. கூட்டு எதிர்க்கட்சியால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோர முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து சம்பந்தனை அகற்றும் முயற்சி வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் இல்லை என்றே கூற வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஓர் எதிர்க் கட்சியாக செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. அரசாங்கத்திற்கு ஆதரவாகவே கூட்டமைப்பு நடந்துகொள்வதாகவும், ஓர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து காண்டு தேசியப் பிரச்சினைகள் குறித்து சம்பந்தன் பேசுவதில்லை என்றும், தமிழர் பிரச்சினைகள் குறித்து மட்டுமே அவர் பேசுவதாகவும் கூட விமர்சிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பேராதரவினால் தெரிவு செய்யப்பட்ட கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்பு. தமிழர்களின் பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டிய பொறுப்பு அக்கட்சிக்கே உள்ளது. வேறு எவருமே பேச முன்வரமாட்டார்கள். இந்நிலையில் தேசியப் பிரச்சினைகளை விடவும் நீண்ட காலமாக தீர்க்கப்படாமலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய கடமை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு உள்ளது. இதனை தவறென்று யாரும் விமர்சிக்க முடியாது.

அடுத்தது, எதிர்க்கட்சி அரசாங்கத்தின் எதிரிக் கட்சியாக செயற்பட வேண்டும் என்கின்ற கருத்து மிக முட்டாள்தனமானது. ஆளும் தரப்பினரின் நல்ல தீர்மானங்களுக்கு ஆதரவளிப்பதும், தவறான விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும்தான் எதிர்க்கட்சியின் கடமை. அரசாங்கம் கொண்டுவரும் அனைத்து தீர்மானங்களையும் எதிர்த்துக் கொண்டிருப்பது எதிர்க் கட்சியின் வேலையல்ல. ஒரு நாட்டின் எதிர்க்கட்சியை மாற்று அரசாங்கம்

(தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 24

## கனடாவின் 150ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கட்டுரை.



குரு அரவிந்தன்

கனடாவில் உள்ள முதற்குடி மக்களின் சுகாதார வசதிகள் மிகக் குறைவாகவே இருப்பதை அவதானிக்க முடிகின்றது. றொக்கி மலைப்பகுதியில் உள்ள றிசேவ் பகுதிகளில் இந்தநிலை காணப்படுகின்றது. அனேகமான முதற்குடி மக்களுக்குக் கல்வி அறிவு போதாததால் அவர்களின் புரிந்துணர்வும் மிகக் குறைவாகவே இருக்கின்றது. அவர்களுக்குப் போதிய கல்வி அறிவு கொடுக்கப்பட்டால் பிரச்சனை தரும் பல விடயங்களை இலகுவில் தீர்த்து வைக்கக் கல்வி அறிவு அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். குறிப்பாக றிசேவ் பகுதிகளில் உள்ள வீடுகளில் நெருப்பு அல்லது புகை காரணமாக பலர் மூச்சுத் திணறி இறந்திருக்கிறார்கள். இப்படியான சம்பவங்கள் நடக்கும்போது அவற்றைத் தவிர்ப்பதற்காக முன்கூட்டியே எச்சரிக்கை செய்யக்கூடிய அலாரங்களைக் கட்டாயப்படுத்தி அரசு அறிமுகம் செய்தாலும் அதற்கான மின்கலன்கள் அதாவது பற்றிகள் மாற்றப்படாததால் இப்படியான அனர்த்தங்கள் மீண்டும் அடிக்கடி ஏற்படுகின்றன. சில றிசேவ் பகுதிகளில் உள்ளவர்கள் அரச ஊழியர்களுடன் ஒத்துழைக்க மறுப்பதும் ஒரு காரணமாகும். இதைவிட தொற்று நோய்கள் ஏற்படும் போதும் பழைய நம்பிக்கை காரணமாக அவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதில்லை. அதற்குப் பதிலாக தங்கள் பாரம்பரிய மூலிகை மருந்துகளையே கொடுக்கிறார்கள். பழமை வாதிகளின் இந்த செய்கையால், அடுத்த தலைமுறையினர்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். சென்ற மாதம் இப்படியான ஒரு சம்பவம் றொக்கி மலைப் பகுதியில் உள்ள மோழி றிசேவ் பகுதியில் நடைபெற்றது.

எங்கள் பயணத்தின்போது, றொக்கி மலைத்தொடர் பகுதியில் உள்ள மோழி றிசேவ் பகுதியைக் கடந்துதான் பன்வ் (Banff) மலைத்தொடர் பகுதிக்குச் செல்ல வேண்டி இருந்தது. றொக்கி மலைத்தொடரின் கிழக்குப் பகுதியில் இந்த இடம் அமைந்திருக்கிறது. இயற்கை வளம் நிரம்பிய இப்பகுதிக்கு ஊடாகத்தான் நெடுஞ்சாலை செல்கின்றது. கல்ஹரி விமான நிலையத்தில் இருந்தே வண்டியை வாடகைக்கு எடுத்திருந்ததால், விரும்பிய இடங்களுக்குச் செல்லவும், விரும்பிய இடங்களில் தங்கவும் கூடியதான வசதி இருந்தது. கல்ஹரியில் இருந்து சுமார் 60 மைல் தூரத்தில் மேற்கே உள்ள ஸ்ரோனி நகோடா முதற்குடி மக்கள் வாழும் பகுதி இருக்கின்றது. போகும்போது இப்பகுதியில் இருந்த உணவு விடுதியில் உணவருந்தி, அந்த இடங்களைப் பார்த்துவிட்டுச் சென்றோம். அப்போது அங்கே வந்திருந்த சில முதற்குடி மக்களுடன் உரையாட முடிந்தது. சென்ற மாதம் இப்பகுதியில் பரவிய இன்புளுவன்ஸா காய்ச்சல் காரணமாகப் பல சிறார்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகச் செய்திகள் வந்திருந்தன. ஏற்கனவே தெரிந்த இடம் என்பதால் அச்செய்தியில் கவனம் செலுத்தினேன். அந்தச் செய்தியின்படி கல்ஹரியில் உள்ள அல்பேட்டா சிறுவர் வைத்தியசாலைக்கு நோயுற்ற சிறுவர்களைக் கொண்டு சென்றதாகத் தெரிய வந்தது. மோழி றிசேவ் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் குழந்தை ஒன்று இறந்ததைத் தொடர்ந்து பொலீஸார் விசாரணைக்குச் சென்றபோது அங்கே உள்ள வீடொன்றில் பல சிறுவர்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. அந்தக் குழந்தை இறந்ததற்கு என்ன காரணம் என்பது இதுவரை கண்டறியப் படவில்லை. அவசரமாக அந்தச் சிறுவர்கள் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டாலும் அதில் இன்னுமொரு குழந்தை ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தெரிகின்றது. அந்த வீட்டில் இருந்த அனேகமான பிள்ளைகள் மூச்சு விடக் கஸ்டப்பட்டதால்தான் அவர்களை வைத்தியசாலைக்கு அவசரமாகக் கொண்டுசெல்ல வேண்டி வந்தது. ஒரு வீட்டிற்குள் எப்படி 14 சிறார்கள் இருந்தார்கள், ஏன் அவர்கள் அந்த வீட்டில் இருந்தார்கள் என்பதைப் பற்றி விசாரணைகள் நடைபெறுகின்றன.

இப்படியான அவசர நிலை ஏற்படும்போது போதிய அளவு அம்புலன்ஸ் வண்டிகள் இல்லாதது பெரும் குறையாகச் சுட்டிக் காட்டப்பட்டது. அப்பகுதியில் வாழும் மூன்று முதற்குடி இனத்தவரில் ஒன்றான ஸ்டான்லி முதற்குடி இனத்தின் மக்கள் தலைவர் 'பாதிக்கப்பட்ட குடும்பத்தின் எதிர்கால நன்மை கருதி தவறான செய்திகளை வெளியிட வேண்டாம்' என்று கேட்டுக் கொண்டார். மேலும் அப்பகுதி மக்களுக்கான மருத்துவ தேவைகள் இன்னும் முன்னேற்றம் காண வேண்டும், குறிப்பாக வைத்திய வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் அப்போது வலியுறுத்தினார். மோழி றிசேவ் பகுதியில் உள்ள, நோயால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளை அம்புலன்ஸ் வண்டியில் ஏற்றிச் செல்ல முயன்றபோது றிசேவ் பகுதியில் வாழும் முதற்குடி மக்களில் சிலர் பாதையை மறித்து சுகாதார ஊழியர்கள் தங்கள் கடமையைச் செய்ய முடியாமல் தடுத்ததாகவும் தெரிகின்றது. போதிய அளவு அம்புலன்ஸ் வண்டிகள் இல்லாததும் இதற்கு ஒரு காரணமாகும். அதனால் பொலிஸாரையும், அப்பகுதி பாதுகாவலரையும் அங்கே அழைக்க வேண்டி வந்தது.



அவர்கள் அப்படி நடந்து கொண்டதற்கு சில காரணங்கள் உண்டு. இப்படித்தான் முதற்குடி மக்களின் பிள்ளைகளுக்குக் கல்வி அறிவு கொடுப்பதாகச் சொல்லி பல வருடங்களுக்கு முன் எண்ணுக் கணக்கற்ற பிள்ளைகள் பெற்றோரிடம் இருந்து பலவந்தமாகப் பிரிக்கப்பட்டனர். அப்படிப் பறித்துக் கொண்டு செல்லப்பட்ட பல பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று இதுவரை பல பெற்றோருக்குத் தெரியாது. தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்த அந்தப் பயம் இப்பொழுதும் முதற்குடி மக்களிடையே இருக்கின்றது. கல்வி அறிவு புகட்டும் நல்ல நோக்கத்திற்காக அந்தப் பிள்ளைகள் கொண்டு செல்லப்பட்டாலும், இடையில் இருந்த சில அதிகாரிகள் செய்த தவறால் அந்தத் திட்டம் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவேதான் கடந்தகால சம்பவங்களுக்காகத் தற்போதைய கனடியப் பிரதமர் முதற்குடி மக்களிடம் மன்னிப்புக் கேட்டிருந்தார்.

அல்பேட்டா ஸ்ரோனி நகோடா முதற்குடி மக்கள் றொக்கி மலைப் பகுதியில் உள்ள றிசேவ் பகுதியில் வாழ்கிறார்கள். மலையக மக்கள் என்று அழைக்கப்படும் முதற்குடி இனத்தைச் சேர்ந்த சுமார் மூன்று இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்த றிசேவ் பகுதியில் வாழ்கிறார்கள். றொக்கி மலைப்பகுதியில் வாழும் இவர்களை ஸ்ரோனி நகோடா, மவுண்டின் ஸ்ரோனிஸ், றொக்கி மவுண்டின் ஸ்ரோனிஸ், வரியேஸ் ஆப்த றொக்கீஸ் என்றெல்லாம் பல பெயர்கள் சொல்லி அடையாளப்படுத்துவர். அதபாஸ்கா நதியின் தென் பகுதி தொடக்கம் மொன்ரானா பகுதிவரை இவர்கள் பரந்து வாழ்கிறார்கள். இங்கே உள்ள சில பகுதிகளில் வாழ்பவர்கள் மொழி பண்பாட்டு விடயங்களில் மாறுபட்டவர்களாக இருக்கிறார்கள். சில பகுதியினர் வடபிரதேசத்து 'டகோடா' மொழியைப் பேசுகிறார்கள். இவர்களைப் பற்றிய முதல் தகவல் 1640ஆம் ஆண்டு பதிவு செய்யப் பட்டிருக்கின்றது. இவர்கள் பைசன் போன்ற மிருகங்களை வேட்டையாடித் தங்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தனர். வேட்டையாடிய மிருகத்தின் தோல்களை விற்பனை செய்து வந்தனர். 1840ஆம் ஆண்டு இப்பகுதிக்கு வந்த மிஷனரிமார் இவர்களை மெல்ல மெல்ல மதம் மாற்றினர். இப்பகுதியில் உள்ள சுமார் 109 சதுர மைல் பரப்பளவுள்ள நிலத்தில் மோழி இனத்தவர்கள் வாழ்கிறார்கள். பியர்ஸ்பா, வெஸ்லிநேசன் மக்கள் தங்களுக்கும் இப்பகுதி சொந்தம் என்று அரசிடம் முறையிட்டதால் 1948ஆம் ஆண்டு பிக்ஹோன் ஏடன்வலி போன்ற பகுதிகள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டன. வூட்ஸ்ரோனி பகுதி மக்களுக்காக எட்மென்டனுக்கு மேற்கே உள்ள அலெக்ஸ், போல் றிசேவ் பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் பாரம்பரியமாக நடந்து வந்த வேட்டைத் தொழில், மீன்பிடிக்கும் தொழில் போன்றவை தற்போது குறைந்து விவசாயம் செய்வது முக்கிய தொழிலாக இடம் பெறுகின்றது. இதைவிட இப்பகுதியில் உள்ள பியர்ஸ்பா, சினிக்கி, ஸ்ரோனி, வெஸ்லி இனத்தவர்கள் தங்கள் பாரம்பரிய தொழில்களை விட்டு வேறு பல புதிய தொழில்களிலும் ஈடுபடுகின்றார்கள். இப்பகுதியில் உணவுச்சாலைகள், கடைகள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள், பயணிகள் தங்கும் விடுதிகள் போன்றவற்றை இவர்கள் நடத்துகின்றார்கள்.

Build Your Career in Mortgage Lending! Join My Office
MORTGAGE ALLIANCE
MORTGAGE FINANCING SOLUTIONS AVAILABLE FROM MULTIPLE LENDERS
1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704
SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530



# வைகோ ஆற்றாமையில் புலம்புகிறார்!

## சீமான் நேர்காணல்

“பிரபாகரனோடு சீமான் இருக்கும் புகைப் படம் கிராபிக்ஸ். அதைப் பயன்படுத்தி சீமான் உலக நாடுகள் முழுவதிலும் புலி களின் பிரதிநிதி என்றுகூறி பணம் வசூலிக் கிறார். புலிகளோடு தான் வேட்டைக்குப் போனதாகவும் ஆமைக்கறி தின்றதாகவும் பொய் சொல்லி வருகிறார்” என சீமான் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அடுக்கி யுள்ளார் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ. இந்நிலையில் சென்னை போரூ ரில் உள்ள ‘நாம் தமிழர்’ கட்சி அலுவலகத் தில் சீமானை சந்தித்தோம்.

**உங்கள் மீது வைகோ திடீரென கடுமையான விமர்சனம் வைத்திருக் கிறாரே, உங்களுக்குள் என்னதான் பிரச்சினை?**

எனக்கும் அவருக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை. அவருக்கு என்னால் ஏதோ பிரச் சினைபோல, அதனால் விமர்சிக்கிறார். நான் ஆமை கறி சாப்பிடுறேன், சாப்பிடவில்லை. அவருக்கு என்ன வந்தது? அது அவருக்கு அவசியமற்றது. ஆற்றாமையில் புலம்புகிறார். சிறுபிள்ளைத்தனமான விமர்சனம் இது. காங்கிரஸ் கட்சியும் திமுகவும் என் இன மக்களுக்கு துரோகம் செய்த போது, அவர் களை எதிர்த்து வைகோவும் பேசினார். அதனால், அவருக்காக விருதுநகர் தேர்த லில் அவரை ஆதரித்து வேலை பார்த்தவன் நான். ஆனால், இன்று அதே வைகோ திமுக, காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்து கொண்டு, என்னை பொய் சொல்கிறேன் என்கிறார். அதைப் பார்த்து உலகமே சிரிக்கிறது.

**நீங்கள் உலக தமிழர்களிடம் நிதி வசூல் செய்வதாகவும் அதற்காகத் தான் புலிகளின் பிரதிநிதி என்பது போல் காட்டிக்கொள்வதாகவும் கூறியிருக்கிறாரே?**

### சந்திப்பு: கண்ணன்

முப்பது ஆண்டுகளாக அவர் எப்படி வாங்கிக்கொண்டு இருந்தாரோ அதேபோல



த்தான் நாங்களும் வாங்குகிறோம். (வெடித்து சிரிக்கிறார்) யார் யாருக்கு காசு கொடுக் கிறார்கள்? எந்த வழியில் காசு வரும்? யாரிடமிருந்து காசு வருகிறது என்று சொல் லச் சொல்லுங்கள், பார்ப்போம். பொத்தாம் பொதுவாக கோடிக்கணக்கில் பணம் வருகி றது என்கிறார், நான் கூடத் தான் சொல்லு வேன். அப்படியே கொடுத்தாலும் அது இந்திய உளவுத்துறை, இந்திய வருமான வரித்துறை பிரச்சினை. அது வைகோவின் பிரச்சினை இல்லையே.

**‘நாம் தமிழர்’ கட்சியினர் தன்னை அவமரியாதை செய்வதுபோல் தொடர் ந்து மீம்ஸ் போடுகிறார்கள் என்றும் வைகோ சொல்கிறார்?**

சமூக வலைதளங்களில் என்னை விமர் சிக்க சம்பளம் கொடுத்து ஆள் வைத்திருக் கிறார்கள். ஆனால், அதையெல்லாம் நான் பார்க்கவே மாட்டேன். தம்பிகள் காட்டி னாலும் சிரித்துவிட்டுச் சென்றுவிடுவேன். மீம்ஸ்களுக்கெல்லாம் ஒரு மனிதன் முக்கி யத்துவம் கொடுத்தால் காவிரி, ஸ்டெர் லைட் போன்ற பிரச்சினையெல்லாம் என்னா வது? மீம்ஸ் போடுவதை எல்லாம் பார்த்து விட்டு சண்டையிடுகிறார் என்றால், அந்தள வுக்கு வைகோ பிரச்சினையற்று இருக் கிறார் என்று அர்த்தம்.

**சீமான் தேவையில்லாமல் உணர்ச்சி வசப்படுகிறார் என்கிறார்களே? இயல் பிலேயே நீங்கள் இப்படித்தானா?**

இது அர்த்தமற்ற குற்றச்சாட்டு. இப்போது உங்களிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். உணர்ச்சிவசப்பட்டா பேசுகிறேன்? தமிழர் களுக்கு உணர்ச்சியே இருக்கக்கூடாது என்று பலர் நினைக்கிறார்கள். அதனால் நான் மேடைகளில் உணர்ச்சிவசப்படுவது அவர்களுக்கு கோபம் வருகிறது. தமிழர் களுக்கு உணர்ச்சியே வந்துவிடக் கூடாதா?

அடிமை சமூகத்தின் உரிமைக்காக பேசு வதற்கும் அதிகாரத்திலிருப்பவர்கள் பேசுவ தற்கும் வித்தியாசம் இருக்கிறது. அடிமை சமூகத்தின் உரிமைக்காக பேசுபவன் நான். எனவே, ஒரு இலக்கிய, பட்டிமன்ற பேச்சு போல என்னால் பேசமுடியாது. படையை வழிநடத்துபவர்கள் எப்படி உணர்ச்சிவசப் படாமல் பேச முடியும்? நம் இன மக்கள் கொல்லப்பட்ட துயரம், ஆந்திராவில் தமிழர்கள் படுகொலை செய்த கொடூரத்தை எல்லாம் வெறும் செய்தியாக மட்டுமேவா சொல்வது? சாவு வீட்டில் ஏன் சத்தமாக அழுகிறார்கள் என்று கேட்பதுபோலத்தான் இதுவும். என்னிடம் உணர்ச்சி இருக்கிறது. நான் வயப்பட்டு பேசுகிறேன். உங்களிடம் இல்லையென்றால் ஒதுங்கிப்போங்கள்.

**காவிரி தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் தமிழகத் திற்கு 177.25 கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளார்கள். 177.25 டி.எம்.சி பெரிய விஷயமா? இதற்குப்போய் சண்டை யிட்டுக் கொள்ள வேண்டுமா? தமிழகத்துக்கு மழை நீர் மூலம் ஆண்டொன்றுக்கு 4000 டி.எம்.சி. நீர் கிடைக்கிறது. அதில், குறைவாக பயன்படுத்திவிட்டு 2000க்கும் மேற்பட்ட நீரை கடலில் விடுகிறோம். அந்த நீரை சேமிப்பதற்கான திட்டங்களை திராவிட கட்சிகள், கடந்த 50 ஆண்டுகளில் வகுத்திருந்தால் 177.25 டி.எம்.சிக்கு கர்நாடகாவிடம் தமிழ கம் கையேந்தும் நிலை வந்திருக்காது. வளமடைவதற்கு தேவையான நீர்வளம் இருக்கிறது. ஆனால், பொறுப்போடு சேமித்து பயன்பாட்டுக்கு கொண்டு வராததுதான் பிரச்சினை.**

**மேடைகளில் கத்தி பேசுகிறீர்களே. அதனால், தொண்டை வலி ஏற்பட்டு சிரமத்திற்கு ஆளாகியுள்ளீர்களா?**

அதெல்லாம் இல்லாமல் எப்படி இருக்கும்? ரப்பர் மரங்களுக்கு ரணங்கள் ஒன்றும் புதிதல்ல. எங்கள் இனம் சுமந்திருக்கும் காயங்கள், வடுக்களை பார்க்கும்போது இதெல்லாம் ஒன்றுமே இல்லை. இதெல் லாம் ஒரு தியாகமும் இல்லை. பேசுவதில் எங்களுக்கு அப்பன் எல்லாம் இங்கு இருக் கிறார்கள். நாங்கள் கூடுதலாக உண்மை யைப் பேசுகிறோம். அவ்வளவுதான்.

**தமிழகத்தின் இரண்டு பெரிய கட்சி களில் ஒன்றான அதிமுக வாக்கு வங்கி, ஜெயலலிதா மரணம் காரண மாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்தால், சரிந்து வருகிறது. இத எதிர்கால தமிழக அரசியலில் ஏற்படுத்தப்போகும் விளைவுகளை எப்படி பார்க்கிறீர்கள்?**

அதிமுக என்ற ஒரு கட்சி இனி இந்த நாட்டுக்கு தேவையில்லை. அது இருந்தா லும் ஒன்றுதான் அழிந்தாலும் ஒன்றுதான். இப்போது அதிமுக கட்சியை பாஜகதான் இயக்குகிறது. ஒ.பி.எஸ்.ஸே மோடியை சந்தித்துவிட்டுதான் இணைந்ததாக வாக்கு மூலம் கொடுக்கிறார்.

**காவிரி பிரச்சினை பூதாகரமாகிக் கொண்டி ருக்கிறது. இந்தளவுக்கு பிரச்சினை முற்றியதற்கு என்ன காரணம்?**

காவிரி தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் தமிழகத்திற்கு 177.25 கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டுள்ளார்கள். 177.25 டி.எம்.சி பெரிய விஷயமா? இதற்குப்போய் சண்டையிட்டுக்கொள்ள வேண்டுமா? தமிழ கத்துக்கு மழை நீர் மூலம் ஆண்டொன றுக்கு 4000 டி.எம்.சி. நீர் கிடைக்கிறது. அதில், குறைவாக பயன்படுத்திவிட்டு 2000 க்கும் மேற்பட்ட நீரை கடலில் விடுகிறோம். அந்த நீரை சேமிப்பதற்கான திட்டங்களை திராவிட கட்சிகள், கடந்த 50 ஆண்டுகளில் வகுத்திருந்தால் 177.25 டி.எம்.சிக்கு கர்நாட காவிடம் தமிழகம் கையேந்தும் நிலை வந்திருக்காது. வளமடைவதற்கு தேவை யான நீர்வளம் இருக்கிறது. ஆனால், பொறுப்போடு சேமித்து பயன்பாட்டுக்கு கொண்டு வராததுதான் பிரச்சினை.

கோக், பெப்சி, ஸ்டெர்லைட், ஹண்டாய், போர்டு போன்ற நிறுவனங்களுக்கு நிலத் தடி நீரையும் ஆற்று நீரையும் உறிஞ்சக் கொடுத்துவிட்டார்கள். அவர்களுக்கு கடல் நீரை சுத்திகரித்து பயன்படுத்திக்கொள் என்று ஏன் இவர்கள் ஒப்பந்தம் போட வில்லை? ஆனால், மக்களுக்கு குடிக்க கடல்நீரை கொடுக்கிறார்கள். 32 ஆறு- களையும் மண் அள்ளி தின்று நாசம் செய்துவிட்டார்கள்.

திமுக செயல் தலைவர் ஸ்டாலின் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்காக


(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)


28ஆவது ஆண்டு | கனடாவின் மூத்த தமிழ் இதழ் | விளம்பரம் | VLAMBARAM

| | |
|---|---|
| பதிப்பாளர்: | ராஜா மகேந்திரன் |
| ஆசிரியர்: | சத்தியா மகேந்திரன் |
| முகாமையாளர்: | கமல் செல்லையா |
| ஊடகப்பொறுப்பாளர்: | விஜய் செல்லையா |
| தட்டச்சு: | கலா விஜயபாலன் |
| அலுவலக பொறுப்பாளர்: | தாரணி இந்திரராஜ்<br>பிரசாந்தி அருள்தாசன் |
| பதிப்பு: | Canyon Press Inc. |

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com


விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


$599,900
3+2 Bedrooms, 2 W Room
Separate Entrance & Walk-Out Basement With 2 Rooms
$699,000
4 Bedrooms, 2 W Room
Large Rooftop Deck With Stunning Views Of The Ravine And Stream
$739,900
4+2 Bedrooms, 2 W Room
New Air Condition,New Deck, New Gazebo,New Garden Shed
$749,999
3+1 Bedrooms, 2 W Room
Hardwood Floors Throughout, Large Upgraded Windows,
$750,000
3 Bedrooms, 2 W Room
Great Location, Family Friendly Neighbourhood
$750,000
3+2 Bedrooms, 4 W Room
Dark Wood Cabinet Island & Freshly Painted Throughout
$799,000
3 Bedrooms, 2 W Room
Overlooks Greenspace And Located On A Quiet Tree
$799,900
3+1 Bedrooms, 2 W Room
Fantastic Functional Layout With Walk Out From Kitchen
$819,700
4 Bedrooms, 3 W Room
Bsmt Has A Kitchen W/ Pantry, 3 Pc Bath
$849,000
3+3 Bedrooms, 2 W Room
Large Backyard With Brand New Two Tiered Deck
I Pay Your Lawyer Fees!
For Further Information, Call:
Direct 416 - 276-1225
$849,000
3+2 Bedrooms, 2 W Room
Beautifully Finished Basement Apartment
$859,500
3+1 Bedrooms, 3 W Room
Property In Excellent Condition W/ Separate Ent. To Finished Bsmnt
$869,999
3+2 Bedrooms, 2 W Room
Seperate Entrance To Finished Basement
$899,000
4+3 Bedrooms, 2 W Room
Dream Bsmt Apartment W/ Raised Flrs & B/I Closet Organizers
$899,900
3+1 Bedrooms, 2 W Room
New Roof (2014) & Has Been Freshly Painted Professionally
$899,900
3 Bedrooms, 2 W Room
Completely Renovated. Quality Finishes, Immaculate Hardwood Floors.
Sell your home
faster money
All Your Condo Needs
Platinum Club Award
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative
Direct 416 - 276-1225

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியின் ஓர் முதன்மை நிறுவனம்
Learning Today Leading Tomorrow



PC TECHNICIAN COURSE
Weekend Classes
Duration - 40 hours
Ample practicals
Good for beginners
Certificate on completion
Commencement May 12th 2018
Free Toolkit
Fees $ 499

SECOND CAREER
Candidates Welcome

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Work as Childcare Assistant, Childcare Worker Etc.
Immediate Job Opportunities

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Work as Support Worker, Care Giver, Personal Attendant, Etc.
Immediate Job Opportunities

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma
Work as Account Payable, Accounts Receivable, Book Keeper Etc.
Many Jobs are available

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma
Work as Account Payable, Accounts Receivable, Book Keeper Etc.
Jobs available in plenty

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma
Work as Food Preparer, Kitchen Helper, Food Service Counter Attendant

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம் திருப்பி செலுத்தத் தேவையில்லை
● Certain conditions may apply

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible

☎ 416-291-5155 / 416-500-5300 ☎
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# நிதியாண்டின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

Plan) மற்றும் 'ஒன்ராரியோ ஆசிரியர் ஓய்வூதியத்திட்டம்' (Ontario Teacher's Pension Plan) ஆகியவற்றின் வருமானங்களை தனது வரவு செலவுத்திட்டத்தில் காட்டியுள்ளது தவறாகும். 2016ஆம் ஆண்டில் நடைபெற்ற கணக்குப் பரிசோதகரின் ஆய்வு அறிக்கையிலேயே ஒன்ராரியோ அரசுக்கு, சட்டபூர்வமாக அமல்படுத்தக்கூடிய எந்த உரிமையும் இல்லாத இந்த இரண்டு ஓய்வூதியத் திட்டங்களின் சொத்துக்களை தனது வரவு செலவுத்திட்டத்தில் சேர்ப்பது தவறு என ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகர் அறிவுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்கூறிய மூன்று விடயங்களால் ஒன்ராரியோ அரசின் வரவு செலவுத்திட்டத்தின் 2018-2019ஆம் நிதியாண்டின் துண்டுவிழும் தொகை $5.0 பில்லியனால் அதிகரிக்கும் என்று தெரிவித்த Bonnie Lysyk, 2018 யூன் 7இல் ஒன்ராரியோ மக்களால் தெரிவு செய்யப்படும் அரசு ஆரம்பத்திலேயே தமது வருமானக் கணக்கில் $5 பில்லியன் மறைந்து விட்டதை உணருவார்கள் என்றார்.

ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகரின் இவ்அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஒன்ராரியோ அரசின் நிதி அமைச்சர் Charles Sousa தங்களது கணக்காளரின் வரவு செலவுத்திட்ட கணிப்பு முறைக்கும் ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகரின் கணக்கியல் கணிப்பு முறைக்கும் இடையே இருக்கும் இந்த முரண்பாடு கடந்த பல வருடங்களாக இருந்து வருகின்றன எனவும், இவ்விடயத்தில் ஒன்ராரியோ அரசு தமது நிலையை மாற்றமாட்டாது என்றும் கூறினார்.

இவ்அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஒன்ராரியோ பழமைவாதக் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் Vic Fedeli ஒன்ராரியோ அரசு தேர்தலுக்கு மக்களை ஏமாற்றத் தவறாகத் தயாரித்த இந்த வரவு செலவுத்திட்டத்தை நம்பி ஒன்ராரியோ வாக்காளர்கள் ஏமாறமாட்டார்கள் என்றார். இந்த வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களாகிய எம்மை ஏமாற்றியது மட்டும் அல்லாமல் ஒன்ராரியோ மாகாண மக்களையும் இவ் அரசு ஏமாற்றியுள்ளது என்றார். ஒன்ராரியோ பழமைவாதக்கட்சி ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகரின் அறிக்கையை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்கிறது எனவும் Vic Fedeli ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.


புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் இவ் அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த நிதி விவகாரம் தொடர்பான விமர்சகர் John Vanthof, ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகரின் அறிக்கை கனேடிய பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின்படி தயாரித்தது ஆகும். ஓர் அரசு பொதுமக்களின் பணத்தைச் செலவழிப்பது என முடிவு எடுத்தால் அது தெளிவாகவும், விளக்கமாகவும் அரசின் கணக்குப்புத்தகங்களில் காட்டப்பட



வேண்டும் என்றார்.

ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தை 25%ஆல் குறைப்பதற்கு எடுத்த நீண்டகாலக் கடனை வரவு செலவுத் திட்டத்தில் காட்டாதது தவறு என்ற விடயத்துடன் மட்டுமே புதிய ஜனநாயக் கட்சி ஒத்துப்போகிறது. புதிய ஜனநாயகக் கட்சியின் நிதித் திட்டங்களும் ஒன்ராரியோ லிபரல் அரசைப்போலவே ஓய்வூதியத்திட்டங்களின் வருமானத்தை அரசின் வருமானமாகவே கருதப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இதனால் புதிய ஜனநாயகக்கட்சியின் நிதித் திட்டங்களையும் ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகரின் அறிக்கையின்படி ஆராய்ந்தால் $2.6 பில்லியன் மேலதிகமாகத் துண்டுவிழும் என ஊடகவியலாளர் Marieke Walsh தெரிவிக்கிறார்.

ஒன்ராரியோ வர்த்தக சங்கத்தலைவர் Rocco Rossi ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் ஒன்ராரியோ அரசு மேற்கூறிய மூன்று விடயங்கள் தொடர்பாக ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகருடன் கலந்தாலோசித்து ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டும் என்றார். ஒன்ராரியோ அரசு ஒரு பொதுக்கூட்டுத்தாபனமாக இருந்தால் அதன் பங்குதாரர்கள் இவ்வாறு இரண்டு விதமான கணக்கு அறிக்கைகளை ஆதரிக்கமாட்டார்கள். அவர்கள் சரியான கணக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி பொதுக்கூட்டுத்தாபனத்தை நிர்பந்திப்பார்கள். இவ்வாறு ஒன்ராரியோ அரசு ஒன்ராரியோ அரசின் கணக்குப் பரிசோதகருடன் கருத்து வேறுபடுவது ஒன்ராரியோ மக்களுக்கு தாம் தெரிவு செய்த பிரதிநிதிகளில் நம்பிக்கையை இழக்க வைக்கிறது என்றார்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# ஒவ்வொரு உடல் உள்உறுப்பும் பாதித்தால் அது எந்த இடத்தில் வலிகளை ஏற்படுத்தும்

நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)

C - 416.617.5721/H - 416.289.2033 after 7:00pm

### கல்லீரல் பாதித்தால்

1. உடல் முழுவதும் சோர்வு, அடித்துப் போட்டது போன்ற உணர்வு.
2. அனைத்துவிதமான தலைவலிகள். கை, கால் குடைச்சல்.
3. தசைப்பிடிப்பு, உடலில் குத்தல் வலி.
4. தூங்கி எழுந்தவுடன் அடி முதுகில் தாங்க முடியாத வலி.
5. மாதவிடாய் காலங்களில் ஏற்படும் வயிற்று வலிகள்.
6. எலும்பு இணைப்பு திசுக்கள் நழுவுதல். (Disc Prolapse)

### சிறுநீரகம் பாதித்தால்

1. அனைத்து விதமான மூட்டுவலிகள், அடி முதுகுவலி
2. முழங்கால் வலி, முதுகுத்தண்டுவட பிரச்சினை
3. எலும்பு தேய்மானம், குதிக்கால் வலி
4. வீக்கத்துடன் வலி. அதிகநேரம் உட்கார இயலாமை
5. உட்கார்ந்தால் எழ முடியாமை
6. இடுப்பு வலி, தொடை நரம்பு வலி (Sciatica)
7. இரவில் உறங்கும்போது முதுகுவலி

### மண்ணீரல் பாதித்தால்

1. சிறிது தூரம் நடந்தாலும் வலி, சோர்வு
2. உடல் கனமாக இருப்பது போன்ற உணர்வு
3. மல்லாந்த நிலையில் படுக்க முடியாமை
4. வலியால் சரியான நிலையில் படுக்க முடியாமை
5. பின்னங்கால் இழுப்பது போன்ற உணர்வு
6. மரத்துப் போதல், வயிற்று வலி
7. மூட்டுகளில் வீக்கம்

### நுரையீரல் பாதித்தால்

1. உடல் முழுவதும் வீக்கத்துடன் கூடிய வலி
2. பிடிப்பது போன்ற வலி
3. தோளில், தோள்பட்டையில் வலி
4. கழுத்து, கழுத்துப்பிடரி வலி
6. கெண்டைக்கால் பிடிப்பது போன்ற வலி
7. மார்பை பிடிப்பது போன்ற வலி
8. வீக்கம் மட்டும் இருக்கும், வலி இருக்காது
9. கழுத்து எலும்புகளில் வலி
10. அதிக நேரம் நிற்கமுடியாமை
11. கைவிரல், கைகளில் குடைச்சல்



### இதயம் பாதித்தால்

1. முழங்கை வலி, மணிக்கட்டு வலி
2. உடலை சுருள வைக்கும் வலி
3. உடலை அழுத்துவது அல்லது பிசைவது போன்ற வலி, உடலில் மின்சாரவெட்டு போன்ற வலி.
4. முதுகெலும்பில் அதிகமான வலி
5. கையை மேலே தூக்க முடியாமை, கையை விரிக்க முடியாமை, பின்பக்கம் கொண்டு செல்ல முடியாமை
6. மல்லாந்து படுக்க முடியாமல் ஒருக் களித்துப் படுக்க முடியும்
7. சுருட்டி எடுக்கும் வயிற்றுவலி

மேற்குறிப்பிட்ட வலிகள் என்று தொடங்கு கிறதோ அன்றே உடலில் நோய் ஆரம்ப மாகிவிட்டது. அதாவது உள் உறுப்புகள் பாதிக்க ஆரம்பித்து விட்டது என்று பொருள்.


### யோகாசனப் பயிற்சி-பலன்கள்

1. யோகா மனதுக்கு வலிமையும், உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியும் தரவல்லது.
2. யோகா சரீரத்தின் உள் உறுப்புகள் அனைத்தும் சரிவர செயல்பட உதவுகிறது.
3. யோகாசனத்தைக் கற்பதால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியும்.
4. சர்க்கரை நோயை விரட்டுவது யோகா.
5. யோகா வாழ்வில் தன்னம்பிக்கையை ஊட்டும்.
6. மாதவிடாய்க் கோளாறுகளுக்கு நிரந்தரத் தீர்வு யோகா.
7. அமைதியான தூக்கத்தைத் தரவல்லது.
8. படிக்கின்ற பள்ளி, கல்லூரி மாணவர் களுக்கும், பெரியவர்களுக்கும் நினை வாற்றலை அதிகரிக்கவல்லது யோகா.
9. ஆரோக்கியமான இளைஞர்களுக்கும் சிறந்தது யோகா.
10. செக்ஸ் குறைபாடுகளுக்கு முழுமை யான தீர்வு யோகா.
11. வேலைக்கு போகும் ஆண், பெண் அனைவரின் உடல், மனப் பிரச்சினைகளுக்கு தீர்வு யோகா.
12. யோகாசனத்தில் பிரணாயாமம் கற்பதால் நுரையீரலும், இதயமும் சரிவர இயங்குகின்றது.

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)

NO MEDICAL INSURANCE
No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!
Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.
• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.
• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்
KABIS
KABIS & ASSOCIATES INC.
உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com
La Capitale Financial Group
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA



# அத்தனைக்கும் ஆசைப்படு.

## சத்குரு வாசுதேவ்

உங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க அரசியல்வாதிகள் மட்டுமல்ல.. ஜோசியர்களும், சாமியார்களும்கூட ஆசைப்படுகிறார்கள். தங்கள் அன்பினால் உங்களைக் கட்டுப்படுத்த தெரியாமல், உங்களுக்குள் ஒரு பயத்தையும் குற்ற உணர்ச்சியையும் உண்டுபண்ண, பாவம்-புண்ணியம், நல்லது - கெட்டது என்றெல்லாம் சொல்லி, உங்களைக் குழப்பி வைத்திருக்கிறார்கள். 'உங்கள் வெற்றியையும், தோல்வி யையும் நிர்ணயிப்பது உங்கள் தலையெழுத்துத்தான்! என்று அடித்துச் சொல்லி, உங்களை நம்பவைத்திருக்கிறார்கள்.

விரும்பியது உங்களுக்குக் கிடைக்கவில்லையென்றால், அதற்கு முழுக் காரணம், நீங்கள்தான். வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை நீங்கள்தான் கவனமில்லாமல் தீர்மானித்திருக்கிறீர்கள். ஆசைப்பட்டதற்கு உரியவராக உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளவில்லை. அது உங்கள் தவறுதானே தவிர, விதியின் விளையாட்டல்ல!

தன் கம்யூட்டர் முன் அமர்ந்து, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்டு இருப்பதைத்தவிர, கடவுளுக்கு வேறுவேலை இல்லையா, என்ன? இந்தக் கதைகளை எல்லாம் நம்ப, நீங்கள் என்ன சிறு குழந்தையா?

பிறப்பின் காரணமாக, வளர்ப்பின் மூலமாக, சில அடிப்படைக் குணங்களை நீங்கள் விரும்பியோ, விரும்பாமலோ பெற்றுவிட்டீர்கள். அந்தக் குணாதிசயங்கள்தான் உங்கள் பாதையைத் தீர்மானிக்கின்றன. அதுகூட ஓரளவுக்குத்தான், மற்றப்படி, கவனத்தோடு செயல்பட்டால், தலையெழுத்து என்று ஒன்று இருந்தாலும், அதை உங்கள் விருப்பப்படி திருத்தி எழுதிக்கொள்ள முடியும்.

தனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லிக்கொண்ட ஓர் அறிவுஜீவியிடம் சங்கரன் பிள்ளை வந்திருந்தார்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

'எனக்கு அழகான மகள் இருக்கிறாள். எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகிறாள். ஆனால் அவளுக்கு ஒரு பிரச்சினை. காலையில் எழுந்ததும் மந்தமாக இருக்கிறாள். சாப்பிட்டதையெல்லாம் வாந்தி எடுத்துவிடுகிறாள். இதற்கு என்ன காரணம்?' என்று கேட்டார்.

அறிவுஜீவி கண்மூடிச் சற்று நேரம் யோசித்துவிட்டுக் கேட்டார்...

'உன் மகள் பால் குடிப்பதுண்டா?'

'உண்டு. சிறந்த பசுவிடமிருந்து சுத்தமாகக் கறக்கப்படும் மிகத் தரமான பாலை மட்டும்தான் அவளுக்குக் கொடுக்கிறோம்' என்றார் சங்கரன்பிள்ளை.

'அங்கே தான் பிரச்சினை' என்றார் அறிவுஜீவி. 'வயிற்றுக்குள் போனதும், பால் தயிராகிவிடும். இரவு படுக்கையில் உன் மகள் புரளும்போதும், அந்தத் தயிர் கடையப்பட்டு வெண்ணெய் திரளும். உடம்புச் சூட்டில் அந்த வெண்ணெய் உருகி நெய்யாகிவிடும். அந்த நெய் இரசாயன மாற்றத்தால் சர்க்கரையாகிவிடும். அந்தச் சர்க்கரை இரத்தத்தில் கலக்கும்போது ஒரு போதை பிறக்கும். காலையில் அந்தப் போதை தெளிவதற்குள் எழுந்திருப்பதால்தான், உன் மகளுக்கு அந்தப் பிரச்சினை!

புரிந்துகொள்ள முடியாத சூழ்நிலைகளுக்கெல்லாம் விதியின் மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்வதும், இந்த அறிவுஜீவி சொன்ன காரணத்தைப் போல அர்த்தமில்லாததுதான்!

எல்லாமே விதிப்படிதான் நடக்கும் என்று சில பெரியவர்கள் சொல்வதை நம்பி, உங்கள் பார்வையைக் குறுக்கிக் கொள்வீர்களா? உங்கள் உறுதியை மழுங்கடித்துக் கொள்வீர்களா?

யாருக்கும் வெளிச்சூழ்நிலை எல்லாத்தருணங்களிலும் நூறு சதவிகிதம் விரும்பியபடி அமைந்துவிடுவது இல்லை. மாற்ற முடியாத சூழ்நிலையை எதிர்த்து நின்றால், அமைதி காணாமல் போகும். மூளை ஸ்தம்பித்து நிற்கும். மாறாக அதை உள்ளபடி ஏற்றுக கொண்டுவிட்டால், அடுத்து என்ன செய்வது என்று புத்திசாலித்தனமாக யோசிக்க முடியும். இதற்காகத்தான் விதி என்று சொல்லி வைத்தார்கள். ஆனால் நீங்களோ, விதி என்றால் எதையும் சகித்துக்கொண்டு செயலற்று இருப்பது என்று தவறாகப் புரிந்து கொண்டுவிட்டீர்கள். நான் உங்களை எந்தச் சூழ்நிலையிலும் சகித்துக் கொள்ளச் சொல்லவில்லை. சகித்துக் கொள்வது என்பது விருப்பத்தோடு செய்வதல்ல. கட்டாயத்தால் செய்வது. எனவே அதை விடுத்து, எதையும் அமைதியாக ஏற்றுக்கொண்டு, விதியை உங்களுக்கேற்ப மாற்றிக் கொள்வது எப்படி என்று யோசித்துச் செயலாற்றுங்கள் என்கிறேன்.

நீங்கள் வளர வேண்டுமானால், விதி பற்றிய பயமுறுத்தல்களிலிருந்து முதலில் வெளியே வர வேண்டும். 'கடவுளே வந்து சொனாலும், என் விதியை நான்தான தீர்மானிப்பேன்' என்கிற உறுதி உங்களுக்கு வரவில்லை என்றால், உங்கள் வாழ்க்கை அதன் போக்கில்தான் நடக்கும். விரும்பியதை அடைய வேண்டும் என்ற தீவிரம் உங்களுக்கு இருந்தால், உங்கள் விதியைக் கடவுளிடமிருந்து பறித்து, நீங்களே அதை கையாள முடியும்.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

சிலருடைய தலையெழுத்தை மாற்றவே முடியாது என்கிறார்களே!'

'மழை மலை மீது பொழிகிறது. அருவியாக வீழ்கிறது. கிளை நதிகளாகப் பிரிந்து, ஆழங்களைத் தேடி, ஓடி, இறுதியில் கடலில் கலக்கிறது.

பிறந்த நிமிடத்திலிருந்தே, நதி கடலுடன் சேர விரும்பிப் பயணம் செய்கிறது என்று சொல்வது கவிதைகளுக்குத்தான் உதவுமே தவிர, அது நதியின் தலையெழுத்தல்ல. வழியில் அணை கட்டித் தடுத்தால், கடலுடன் சேர முடியவில்லையே என்று நதி தற்கொலை செய்து கொள்ளப் போவதில்லை.

நதியை விட, கடலின் மட்டம் சற்று உயர்ந்து அமைந்துவிட்டால், கடல் நதியைத் தேடி வருமா, நதி கடலைத் தேடிப் போகுமா?

ரசிதப்பதற்காகத்தான் மிகைப்படுத்தப்பட்ட கதைகளும், கவிதைகளும். அவற்றையே விதிமுறைகளாக நினைத்தால், முட்டாளாகிப் போவீர்கள். விதி பற்றிய கட்டுக் கதைகள் வீசியெறிந்துவிட்டு, எதையும் விழிப்பு உணர்வுடன் கவனித்து, கையாளும், திறமை உங்களுக்கு வந்துவிட்டால், அப்புறம் எந்த விதியாலும் உங்களை அசைக்க முடியாது!'

## ஒவ்வொரு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

13. இதயத்திற்கு இதமளிப்பது யோகா மட்டுமே.



14. ஆஸ்துமாவை அடியோடு விரட்டுவது யோகா.
15. யோகா பயிற்சி நாட்பட்ட மூட்டுவலி, இடுப்புவலி, வயிற்றுவலி, குடற்புண் ஆகியவற்றைக் குணப்படுத்துகின்றது.


### நோய்கள் - மூலகாரணம்

அவற்றை போக்கும் வழிகள்:


ஒதுக்கின்ற மலக்கூட்டை ஒழிய வைத்தால்
உடலிலுள்ள வாதையெலா மொடுங்கி போகும்
தாதுற்ற சிறுநீரைத் தெளிய வைத்தால்
சடலத்திலுள்ள வேகமெல்லாந் தணிந்து போகும்
கோதுற்ற உமிழ்நீரை முறிய வைத்தால்
கூட்டிலுள்ள பகையெல்லாங் குலைந்து போகும்
கோதடர்ந்த இவை மூன்றும் களங்கமற்றால்
கொல்ல வந்த காலனையும் வெல்லலாமே.
(அகத்தியர்)







# நெஞ்செரிச்சல் - காரணங்கள், விளைவுகள், தீர்வுகள்




சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## HEARTBURN

இளையோர் முதல் முதியோர்வரை வெகுவாக பாதிக்கும் உடல்நல பிரச்சினை நெஞ்செரிச்சல் என்பதாகும். இரவு நித்திரைக்கு செல்வதற்கு முன்பதாக ஒருவகை பயத்துடன் இவர்கள் செல்வது வழக்கமானதொன்று. நித்திரை கொள்ள முடியாது அவஸ்தைப்படும் இவர்கள் பல்வேறு தீர்வுகளை மேற்கொள்வது அன்றாட நிகழ்வு. தண்ணீர் பருகுபவர்கள், பால் குடிப்பவர்கள், காரத்திரவம் (Acid) குறைப்புக்கான மருந்துகளை பாவிப்பவர்கள், தலையணை உயர்த்திப் போட்டு உறங்குபவர்கள் எனப் பல்வேறு செயல்களை மேற்கொள்வர். விடிய விடிய இவ்வாறு செய்தால் வேலைக்கு எப்படி செல்வது என்ற குழப்பம் ஒருபுறம் இருக்கும். அருகில் படுத்திருப்பவர்களையும் இது குழப்பி விடுகிறது.

பொதுவாக நெஞ்செரிச்சல் நோயினை ஆங்கிலத்தில் (Heartburn, Acid reflux, gastroesophageal reflux, Gerd) எனப் பல பெயர்களில் அழைக்கின்றனர். பொதுவாக குணம்குறிகள் ஒரேமாதிரியாவே இருக்கும். மிகவும் சாதாரணநிலை முதலாக படுமோசமான விளைவுகளை இந்நோய் தருவதால் சராசரி வாழ்வினை அனுபவிக்க முடியாமல் பலர் தவிப்பதனை அவதானிக்கலாம். எந்த ஒரு சமூகத்திலும் சராசரி 20 வீதத்திற்கு மேற்பட்டவர்களுக்கு இப்பிரச்சினை உள்ளதாக அறியப்படுகின்றது. உலக அளவில் இப்பிரச்சினை அதிகரித்து வருவதனையும் அறிய முடிகிறது.

நாகரிக உணவுப் பழக்கம் என்ற பெயரில் நம் உணவு முறை மாறிவரும் இக்கால கட்டத்தில் உணவைச் சாப்பிட்டதும் நெஞ்செரிச்சல் ஏற்படுவதாக பலர் கூறுவர். இதுவும் ஒரு காளான் போல் அவ்வப்போது ஏற்படும் நிகழ்வாகும். ஆங்கிலத்தில் Heartburn என்றாலும் இது நெஞ்சுமுழுவதும் ஏற்படும் நோவல்ல. உண்மையில் இதயத்திற்கும் இதற்கும் சம்பந்தமும் இல்லை. உணவுக்குழாயில் ஏற்படும் நோய் இதுவாகும். எனவே நெஞ்செரிவு ஏற்பட்டால் அது இதயநோய் ன எண்ணிவிடக்கூடாது. சிலர் இதனையே Gastric பிரச்சினை என்பர். உச்சரிப்பதற்கு சுலபமாக மருத்துவர்கள் 'Gerd' என்பர். இதனை தமிழில் மொழிபெயர்த்தால் அமிலப்பின்னொழுக்கு நோய் (Gastroesophageal reflux disease) எனவரும். இவ்வாறான நெஞ்செரிச்சல் ஏற்படும் முறைபற்றி நோக்கினால் எமது வாயில் இடப்பட்ட உணவு உமிழ்நீருடன் கலந்து, முதற்கட்ட செமிபாடு முடிந்ததும், அதை இரைப்பைக்கு கொண்டு சேர்ப்பது முக்கால் அடி நீளமான உணவுக்குழாய் ஆகும். இதன் உள்பக்கம் சளிச்சவ்வு (Mucous Membrane) உள்ளது. இது உணவுக்குழாய்க்கு ஒரு கவசம்போல் உள்ளது. உணவுக்குழாயின் மேல் முளையிலும் கீழ்முளையிலும் சுருக்கு தசையால் ஆன இரண்டு கதவுகள் உள்ளன. மேல்முனையில் இருக்கும் கதவு, நாம் உணவை விழுங்கும்போது அது மூச்சுக்குழாய்க்குள் செல்வதை தடுக்கிறது. கீழ்முளையில் இருக்கும் கதவு, இரைப்பையில் சுரக்கும் அமிலம் உணவுக்குழாய்க்குள் நுழையவிடாமல் தடுக்கிறது. இந்தக் கதவு உணவுக்குழாய்க்கும் இரைப்பைக்கும் இடையில் ஓர் எல்லைக்கோடா செயல்படுகிறது.




இரைப்பையில் சுரக்கும் திரவமானது (அமிலம்) இந்த எல்லைக்கோட்டை கடந்து உணவுக்குழாய்க்குள் தேவையில்லாமல் நுழைவதுதான் இந்த நெஞ்செரிச்சலுக்கு காரணமாகும். உணவுக்குழாய் காரம் நிறைந்த, சூடான, குளிர்ச்சியான உணவுகளை தாங்குமே தவிர, அமிலத்தின் வீரியத்தை தாங்கும் சக்தி அவற்றிற்கு இல்லை. இந்த அமில அலைகள் அடிக்கடி மேலேறி வரும் போது அங்குள்ள திசுப்பகுதியை அழித்து புண்ணாக்கி விடும். இதனால் நெஞ்செரிச்சல் ஏற்படுகிறது.

நெஞ்செரிச்சலுக்கான காரணிகள் பலவாகும். முக்கியமானவை காரமான உணவு வகைகள் ஆகும். இதனால் ஏற்படும் அழற்சி (Inflammation) முக்கியமாகும். இரண்டாவது காரணி ஒருவரின் வயது என்பதாகும். மூன்றாவது காரணி ஒருவரின் அதிக எடையும் கொழுப்பு மிகையுமாகும். அடுத்துள்ள காரணி உண்ணும் பெருமளவு உணவு என்பதாகும். மேலும் சில மருந்துகள் பாவிப்பது, கூடிய உடற்பயிற்சி செய்வது, மக்னீசிய குறைபாடு என்பனவும் மேலதிக காரணிகளாகும்.

வயிற்றில் ஏற்படும் அழுத்தம், கர்ப்பிணிகளின் கருப்பை அழுத்தம், இறுக்கமான உடை, வயிற்றில் உள்ள கட்டி என்பனவும் இந்த நெஞ்செரிச்சல் ஏற்பட மேலதிக காரணிகளாகும். சிலருக்கு உணவுக்குழாயில் ஏற்படும் பிதுக்கம் (Hiatus Hernia) என்பதும் இதற்கு காரணமாகும். இதனால் உணவுக் குழாய் ஊடாக இரைப்பை அமிலம், உணவு என்பன தொண்டைவரை வந்து விடுகிறது. இரவு வேளையில் மல்லாந்து படுப்பதும் நெஞ்செரிச்சலுக்கு ஒரு காரணமாகும்.

நெஞ்செரிச்சலால் ஏற்படும் நிகழ்வுகள் மிகவும் மோசமானவை. நெஞ்சில் எரிவு, வாய்க்குள் கசப்பான சுவை, தொண்டையிலிருந்து வெளியேறும் அமில உணர்வு, நடுஇரவில் ஒருவகை இருமலுடன் எழும்பும் நிலை, வரட்சியான வாய், முரசுவலி, மோசமான சுவாசம், வயிற்று குமட்டல், சில வேளை இரத்தத்துடனான வாந்தி, கறுப்பான மலம் வெளியேறல், ஏவறை விடுதல், விக்கல் ஏற்படல், உணவு விழுங்க கஷ்டம் ஏற்படல், உடல் மெலிதல், உணவுக்குழாய் சுருங்குதல், படுப்பதில் கஸ்டம் ஏற்படுதல், தொண்டை எரிவு, வரட்சி ஏற்படல் போன்ற பல உள. இந்த நெஞ்செரிச்சல் மட்டும் தொடர்ந்து ஏற்பட்டால் வாழ்வே கசந்து விடுகிறது.

நெஞ்செரிச்சல் ஏற்பட நாமே காரணம் என்பதனை பலர் மறந்துவிடுகிறார்கள். முதலாவதாக எமது உணவுப் பழக்கமே முக்கியமாகும். அவசரமான உலகில் மிகவும் அவசரமாக உணவு உண்பவர்களே அதிகம். வேலைக்கு நேரம் போய்விட்டதென அப்படியே உணவை வாய்க்குள் அடைத்துக் கொண்டு ஓடுபவர்களே பலராவர். வாயில் வைத்து மென்று சாப்பிடுவதால் சீரணம் சுலபமாகிறது. எவ்வாறு இது இலகுவாகிறதோ அந்த அளவுக்கு செமிபாடு கூடுகிறது.

அடுத்துள்ள எமது பிரச்சினை உணவுமுறை பற்றியதாகும். எம்மவர்கள் வாய்க்கு ருசியான உணவையே விரும்புவர். அதாவது ஆங்கிலத்தில் இதனை Spicy Food என்பர். காரம் நிறைந்த உணவுகளே அதிகமாகும். மிளகாய்த்தூள், மிளகு போன்ற காரமான வாசனை திரவியங்கள் அதிகமாக நாம் பயன்படுத்துகிறோம். அளவுக்கு பயன்படுத்தினால் ஆபத்து எதுவும் இல்லை. இது மட்டுமல்ல பொரித்த உணவு, சிற்ரஸ் கொண்ட பழவகைகள், தக்காளி போன்ற பழவகைகள் பிரச்சினையானவை. சிலர் அதிகம் தேநீர், கோப்பி அருந்துபவர்களாவர். மதுவை அதிகம் எடுத்துவிட்டு தூங்குபவர்கள் இந்த அமில பிரச்சினைக்கு உட்படுபவராவர். சிகரெட் பிடிப்பது கூட இவ்வகையான நெஞ்செரிச்சலுக்கு காரணமாகலாம். சிகரெட் பிடிப்பதால் தசைகளில் ஏற்படும் பிரச்சினை நெஞ்செரிவுக்கு காரணமாகலாம். பலர் இதனை பழகியபின்பு விட முடியாமல் தவிக்கின்றனர். சிலர் சிகரெட் பிடிப்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என எண்ணுகிறார்களை. ஆனால் நெஞ்செரிச்சலுக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

மருந்துப்பாவனை கூட நெஞ்செரிச்சலுக்கு காரணமாகலாம். பல மருந்துகள் ஆபத்தான பக்கவிளைவுகள் உள்ளவை. சில மருந்துகள் தசைகளை தளர்வடையச் செய்பவை. இதனால் அசிட் உற்பத்தியிலும் மாறுதல் நிகழலாம். ஆஸ்துமா, சிறுநீரகப் பிரச்சினைகளுக்கான மருந்துகள் இதில் முக்கியமானவை. இந்த விளைவுக்காக மருந்துவரை அணுகுதல் வேண்டும்.

கர்ப்பம் தரித்தவர்களுக்கு இந்தவகையான நெஞ்செரிச்சல் அதிகமாகும். ஹோர்மோன் சத்துக்களில் ஏற்படும் மாற்றங்களும் இதற்கு காரணமாகும். தசைகளின் இயக்கத்தினை இவை தடுப்பதால் அமிலம் கூடுதலாக ஏற்படுகிறது. அத்துடன் குழந்தை வயிற்றில் உள்ளவேளை அழுத்தம் கூடி இவ்வாறான பிரச்சினை ஏற்படுகிறது. பெண்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் அஜீரணம் ஏற்படுவதாலும் இப்பிரச்சினை எழலாம்.

அதிக எடையுள்ளவர்களுக்கும் இவ்வாறான நெஞ்செரிச்சல் ஏற்படுகிறது. எடை கூடியவர்களுக்கு வயிறு பெரிதாகிறது. இது குடல்களை அமுக்குகிறது. இதனால் அசிட் உணவுக்குழாய்க்குள் செல்கிறது. நேரடியாக இதனால் பாதிப்பு குறைவு எனினும் நெஞ்செரிச்சல் உள்ளவர்களுக்கு இது தீவிரமான காரணியாகும்.

பரம்பரை கூட (Hereditary Factor ) இந்த நெஞ்செரிவுக்கு காரணமாகலாம். ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த அமிலம் பிரச்சினையும் நெஞ்செரிவும் உள்ளவர்கள் இருக்கவே செய்கிறார்கள். காரணம் ஒரேவிதமான உணவை உண்பவர்களாகவும், ஒரேவிதமான சீரண சத்துக்களை உள்ளவர்களாகவும் இவர்கள் இருப்பதனால் ஆகும். பெற்றோர்கள் இப்படியான பிரச்சினையுள்ளவர்கள் என்றால் பிள்ளைகளும் இதில் கவனம் கொள்ளவேண்டும்.

பதற்றம் (Anxiety) கூட நெஞ்செரிச்சலுக்கு காரணியாகும். இன்று எல்லோரும் இதனாலேயே பாதிப்புறுகின்றனர். இதுகூட இவ்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

FOOD HANDLERS CERTIFICATION
Are you serving in a restaurant? or PSW or ECA
உங்களுக்கு Food handler certificate தேவைப்படலாம். Are you serving in a bar?
உங்களுக்கு Smart serve certificate தேவைப்படலாம்.
For Food handler certificate & Smart serve exam prep. Experience Instructor
Call கலா: 647.624.2314/kalasarvaa@gmail.com

# வடக்கின்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

போதிலும், விக்னேஸ்வரன் இன்று முதலமைச்சராக இருப்பதற்கு காரணமான சம்பந்தனின் தனித்த முயற்சியினை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்காக விக்னேஸ்வரன் எவ்வித பங்களிப்பினையும் மேற்கொள்ளவில்லை என்பது முரண்பாடுகள் தோன்றக் காரணமாக அமைந்தது. கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்து ஒரு அறிக்கையைக் கூட முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளியிடவில்லை. மாகாணசபைத் தேர்தல் பிரச்சார செலவுகளுக்காக புலம்பெயர் நாடுகளுக்குச் சென்று நிதி திரட்டும் நடவடிக்கைகளில் சுமந்திரன் போன்ற கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது ஈடுபட்டனர். நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது விக்னேஸ்வரனை புலம்பெயர் நாடுகளுக்கு சென்றுவருமாறு கூட்டமைப்பினர் கேட்ட போது, தனது உடல்நிலை சரியில்லாததால் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை என்று கூறிவிட்டு விக்னேஸ்வரன் அதனை தவிர்த்தார். இதனை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அடிக்கடி சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அந்த தேர்தல் காலத்தில் அவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினை மறைமுகமான ஆதரித்தார் என்கின்ற குற்றச்சாட்டை மறுதலிக்க முடியாது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி, சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.



எல்.எப் ஆகியவற்றுடன் சில சிவில் சமூகத்தினரும் இணைந்து உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பின் தலைவராகவும் விக்னேஸ்வரன் பொறுப்பேற்றார். தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரான அமைப்பாகவே இது உருவாக்கப்பட்ட போதும், இது ஒரு அரசியல் கட்சியாக மாற்றமடையாது என்று அவர் கூறினார்.

வட மாகாணசபையில் இனப்படுகொலை தொடர்பான பிரேரணையொன்றை விக்னேஸ்வரன் கொண்டு வந்து நிறைவேற்றிய மையும் சம்பந்தன் தரப்பிற்கும், விக்னேஸ்வரனுக்குமிடையிலான முரண்பாடு அதிகரிக்க காரணமாக அமைந்தது. மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சிக் காலத்தில் இதனை நிறைவேற்றியிருந்தால் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. தமிழ் மக்களின் ஆதரவுடன் நாட்டில் மஹிந்த ஆட்சி தோற்கடிக்கப்பட்டு, புதிய அரசாங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டமை சிக்கலான நிலைமையை ஏற்படுத்தும் என்பதால் அவரது இந்த நடவடிக்கையை சம்பந்தன் தரப்பினர் கடுமையாக விமர்சித்தனர்.

இவ்வாறானதொரு பிரேரணையை கொண்டு வருவதற்கு முன்னர் சம்பந்தன் உள்ளிட்ட தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு விக்னேஸ்வரன் செய்யவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பின்னர் வட மாகாண சபையிலும் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள், விக்னேஸ்வரன் ஆதரவாளர்கள் என இரு குழுக்கள் தோன்றி பல சர்ச்சைகளும் ஏற்பட்டமை தெரிந்த விடயமே. அரசியலில் நீண்ட அனுபவமுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், அரசியலில் அனுபவமற்றவராக இருந்தாலும் ஓய்வு பெற்ற நீதியரசரான, சட்டம் தெரிந்த விக்னேஸ்வரனும் இணைந்து தமிழ் மக்களுக்கான தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், இவர்கள் இருவரும் இணைந்து செயற்பட முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் அல்ல என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்தி விட்டது. தான் மீண்டும் களமிறங்க ஆயத்தமாவதாக விக்னேஸ்வரனும் அறிவித்து விட்டார். புதிய கட்சியொன்றை விக்னேஸ்வரன் தொடங்குவரா? அல்லது கஜேந்திரகுமாரின் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவாரா? தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக மாற்றமுறுமா? என்றெல்லாம் இப்போது கேள்விகள் எழுகின்றன.

தற்போது நடந்து முடிந்துள்ள உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் சரிவு நிலை ஏற்பட்டிருந்தாலும் கூட்டமைப்பே இன்று தமிழ் அரசியல் களத்தில் பிரதான இடத்திலுள்ளது. இந்த நிலையில் கூட்டமைப்பை எதிர்த்துக் கொண்டு இன்னொரு கட்சியில் நின்று போட்டியிட்டு விக்னேஸ்வரன் வெல்ல முடியுமா என்பது சந்தேகமே.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் விக்னேஸ்வரனுக்கு பதிலாக யாரை களமிறக்கப் போகின்றது என்பதும் சிக்கலான கேள்வியாகவே எழுகின்றது. கடந்த தடவை கைநழுவிப்போன வாய்ப்பினை வழங்குவதற்காக மாவை சேனாதிராஜாவை களமிறக்கினால் அது பொருத்தப்பாடானதாக இருக்கப் போவதில்லை.

அரசியல்வாதிகளை விடவும் சிறந்த நிர்வாகி ஒருவர் முதலமைச்சராக இருப்பதே பொருத்தமானது. போரின் பின்னர் கிடைக்கப் பெற்ற ஓர் அமைப்பாக வடமாகாண சபை உள்ளது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சிறப்பு வேலைத் திட்டம் ஒன்றை வடக்கு முதலமைச்சர் வகுத்து நடைமுறைப்படுத்திருக்க வேண்டும். அவ்வாறு எதுவும் செய்யப்படவில்லை. அதிகாரம் தரப்படவில்லை என்று கூறியே காலம் கடத்தப்பட்டுவிட்டது. இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்திக்கூட எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதுவே பாதிக்கப்பட்ட மக்களின் இன்றையமன நிலையாகவுள்ளது.

அரசியல் அனுபவம் பெரிதாக இல்லா விட்டாலும், நேர்மையான, நிர்வாகத் திறமையுடைய ஒருவரே வடக்கின் முதலமைச்சராக வரவேண்டும். அவ்வாறான ஒருவரையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேட வேண்டியுள்ளது.


TUTORING

Math / Science / English

Over 8 years of Experience (M.Sc., Mathematics)

Param Jyothi Academy is a Tutoring Centre located in Markham. We are very passionate about ensuring that our students understand their Math problems by breaking them down into simple problems. The secret to success for achieving high scores in Math is by practice. That is why we ensure that our students do several problems. We also work with IEP students, ADHD Students and low mark students by catering our skills, experience and knowledge to meet their needs.

FREE
ONE HOUR MATH CLASS

Call today to find out more!

- Grade 1-8: Math/Science/English
- Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
- Principles of Mathematics. Calculus. Vectors.
- Functions. Advanced Functions.
- University: Calculus-1, Calculus-2, Calculus -3

PARAM JYOTHI ACADEMY

Param Jyothi Academy

7393 Markham Road . Door #90

647.426.6329

Param Jyothi Academy


# சம்பந்தனின்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

(Alternative government) எனக் குறிப்பிடுகின்றார்கள்.




அரசாங்கத்தின் நல்ல விடயங்களுக்கு ஆதரவளிப்பதோடு தவறுகளை சுட்டிக்காட்டி, அதற்கு எதிர்ப்பு தெரவித்து அரசாங்கத்தை வழிநடத்தும் பொறுப்பு எதிர்க்கட்சிக்கு உள்ளது. அதனால்தான் எதிர்க் கட்சியை மாற்று அரசாங்கம் என்று குறிப்பிடுகின்றனர். எனவே, தற்போதைய அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் எதிர்க்கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் எதிரிக் கட்சியாக செயற்பட வேண்டும் என்று நினைப்பது தவறானதாகும்.

இதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாட்டின் எதிர்க்கட்சியாகவும், அதன் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பது தொடர்பில் அக்கட்சியினர் பெருமையடையலாமே தவிர இதனால் தமிழ் மக்களுக்கு பயன் கிடைக்கும் என்று கருதவியலாது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

'நல்லாட்சி' என்ற மகுடத்தில் அரசாங்கத்தை பொறுப்பேற்று நடத்தும் கூட்டரசாங்கத்திற்கே இதனால் அதிக பயனுள்ளது. தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள் என்று கூறப்படுகின்ற ஒரு நாட்டில் பிரதான தமிழ்க் கட்சியை எதிர்க்கட்சியாக இடமளித்துள்ளோம் என சர்வதேச மட்டத்தில் தமக்கு சாதகத் தன்மையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

தமது 'நல்லிணக்கத்தை' இதன்மூலம் வெளிப்படுத்தும் வாய்ப்பினை இந்த அரசாங்கம் பெற்றுள்ளது. ஆகவே தற்போதைய அரசாங்கத்திற்கே இதனால் அதிக பயன் கிட்டியுள்ளது. இதன் காரண மாகவே சம்பந்தனின் எதிர்க்கட்சித் தலைமையை எவ்விதத்திலேனும் காப்பாற்றப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிக்கின்றது.

எனவே, எதிர்க்கட்சித் தலைமை தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டாலும் கூட அதற்காக தமிழ் மக்கள் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. இதனால் எவ்வித அவமானங்களும் தமிழர்களுக்கு ஏற்படப் போவதுமில்லை.




# கனடாவில் வாகன காப்புறுதியினை எவ்வழிகள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்?

## கனடிய தகவல் தொடர் 289

சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999



தமிழர் அதிகமாக வாழும் ஒன்ராரியோ மாகாணத்தில் பின்வரும் வழிகள் மூலம் வாகனக்காப்புறுதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை அரசின் நிர்வாக பிரிவான **'ஒன்ராரியோ நிதிகள் சேவைகளின் சபை'** (FSCO - Financial Services Commission of Ontario) அவர்களின் இணையதள செய்திகள் மூலம் வழிகாட்டியுள்ளனர்.

1. குறிப்பிடப்பட்ட ஒரு கம்பனியின் விற்பனை பிரதிநிதிகள் மூலம் (Insurance Agent) WWW.IBC.Ca என்னும் 'இன்சூரன்ஸ் பீயுரோ ஒவ் கனடா' (Insuranc e Bureau of Canada - IBC) என்னும் அதிகாரபூர்வமான அரச இணையதளத்தில் வாகன காப்புறுதி தொடர்பான விபரங்கள், தனிப்பட்ட கம்பனிகளின் விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக வாகன காப்புறுதியினை சந்தைப்படுத்தும் கம்பனிகளுக்கு உதாரணமாக பின்வருவனவற்றினை குறிப்பிடலாம்.

- State Farm Insurance Company
- The Co Operators Insurance Company
- Allstate Insurance Company

இங்கு கம்பனி முகவர் நேரடியாக உதவுவார்.

2. ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கம்பனிகளோடு பணி புரியும் முகவர்கள் 'இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அசோசியேசன் ஒவ் ஒன்ராரியோ' (Insurance Brokers Association of Ontario - IBAO) 'www.ibao. org' என்னும் இணைய தளத்தில் இவ்வழி தொடர்பான தகவல்கள் பூரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. 'www.myinsuranceshopper.ca' என்னும் இணையதளத்தினுள் சென்று, கனடாவில் ஒருவர் எந்த இடத்தில் வாழுகின்றாரோ, அந்த இடத்தின் தபால் குறியீட்டினை (Postal Code) பதிவு செய்யும் போது, அந்த முகவரிக்கு அருகில் உள்ள வாகன காப்புறுதியினை சந்தைப்படுத்தும் முகவர் நிறுவனங்களின் முகவரிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்கு முகவரும், அவரது அலுவலகமும் நேரடியாக உதவுவார்கள். காப்புறுதி கம்பனிக்கும் வாடிக்கையாளர் ஒருவருக்கும் இடையில் இம் முகவர் அலுவலகம் இயங்குவதால் காப்புறுதி தொடர்பான எந்தவொரு விடயத்தினையும் அவர்களினூடாக நடைமுறைப்படுத்தாலம்.

3. நேரடி முகம் காட்டாது தொலைபேசி மூலம் அல்லது இணையதள தொடர்புகள் மூலம் வாகன காப்புறுதி பெறுதல். (Direct writer)

'கனடியன் அசோசியேர்ஸன் ஒவ் டிறக் றிலேர்ஸன்சிப் இன்சூரர்ஸ்' (Canadian Association of Direct Relationship Insurers) என்னும் நிறுவனத்தின் www.cadri.com இணையதளம் இவை தொடர்பான தகவல்களை வழங்குகின்றது.

**கனடாவில் எங்கள் ஒவ்வொருவரின் நிலைமைக்கு ஏற்றமாதிரி மலிவான வாகன காப்புறுதி கம்பனி ஒன்றினை எப்படிக் கண்டுபிடிப்பது?**

'Three ways to compare auto Insurance quotes' (வாகன காப்புறுதியின் விலைகளை அறிந்து கொள்ள மூன்று வழிகள்) என்னும் தலைப்பில் கனடாவின் பிரதான ஆங்கில தினசரி பத்திரிகையான 'த குளோப் & மெயில்' கடந்த மே 12, 2011 இல் விரிவானதொரு தகவல் கட்டுரையினை வெளியிட்டிருந்தது.

அக்கட்டுரையில் பின்வரும் மூன்று இணைய தள முகவரிகள் குறிப்பிட்டு அவை மூலம், ஒவ்வொருவரின் நிலைப்பாட்டிலும் மலிவானது எது என்பதும் எவ்வளவு மாத கட்டுப் பணம் என்பதனையும் அண்ணளவாக புரிந்து கொண்டு காப்புறுதி உடன்படிக்கை யினை பூரணமாக முடித்துக்கொள்வதற்கு இம் மூன்று நிறுவனங்களும் வழிகாட்டுகின்றன.

அவையாவன:

1. KANETIX.CA
2. INSURANCEHOTLINE.COM
3. CARINSURANCE.CA

உங்களின் தகவல்களை கேட்கப்படும் ஒழுங்குகளில் பதிவு செய்துகொண்டு போகும்போது உங்களின் நிலைப்பாட்டில் மலிவான கம்பனிகள் மூன்றினை சிபார்சு செய்யும். அங்கு மாத, வருட கட்டுப்பணம் எவ்வளவு என்பதினை ஒரு மதிப்பீட்டில் அண்ணளவாகக் காட்டும். தொடர்ந்து உடன்படிக்கையினை எப்படி முடித்து வாகன காப்புறுதியினை பெற்றுக்கொள்ளும் வழிகளும் இவ் இணையதள தகவல்கள் மூலம் வழிகாட்டப்படுகின்றன.

**கம்பனியில் இருந்து நேரடியாக முழுவதும் வங்கிக்கடனில் வாங்கிய ஒருவரது விலை உயர்ந்த புதிய வாகனம்** (Brand new vehicle) இரு

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)

## யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்.

# அந்த மூன்று நிமிடங்கள்

## (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் அழகியற் கதை)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



9. அந்த மூன்று நிமிடங்களின் பின்.

அந்த முதல் மூன்று நிமிடங்களின் பின்னராக நீண்ட காலத்திற்குப் பேரண்டத்தின் உள்ளே பாரிய மாற்றங்கள் ஏதும் நிகழவில்லை. தேவையான மாற்றங்கள் எல்லாமே 'அந்த மூன்று நிமிடங்கள்' உள்ளேயே நடந்து விட்டன. இனி, பேரண்டம் பெருத்துக் கொண்டுபோக அதன் வெப்பநிலையும் குறைந்து கொண்டே போனது. பிக்பாங்கின் பின்னர் ஒரு மணித்தியாலம் ஆகியதும் அணுக்கருக்கள் தோன்றுவதும் நின்று விட்டது. இலத்திரன்களும் பொசித்திரன்களும் முற்றாகவே பொருளழிவுக்குள்ளாகி போட்டோன்கள் ஆகிவிட்டன. எவ்வளவு புரோத்தோன்கள் இருந்தனவோ அவ்வளவு இலத்திரன்கள் மாத்திரமே பேரண்டத்துள் இருந்தன. போட்டோன்களின் எண்ணிக்கையோ இப்போது அதிகமாகி விட்டது. சக்தியடர்த்தி வகையில் 69 வீதம் போட்டோன்களும் 31 வீதம் நியூற்றினோக்களுமே பேரண்டத்தை நிரப்பியிருந்தன. இவற்றுடன் தோன்றியிருந்த அணுக்கருக்களும் எஞ்சியிருந்த புரோத்தோன்களும் இலத்திரன்களும் இருந்தன. ஆனாலும் பேரண்டம் இன்னமும் இட நெருக்கடியான இடமாகவே காட்சியளித்துக் கொண்டிருந்தது.

பேரண்டத்தின் சடங்கள் எல்லாம் பிளாஸ்மா நிலையிற்றான் இருந்தன. அதிக அளவு போட்டோன்கள் இருந்தாலும், அவை இன்னமும் நேர்கோட்டில் வெல்ல முடியாத நிலையிற்றான் இருந்தன. தோன்றியிருந்த அணுக்கருக்களும் இலத் திரன்களும் சக்தி மிக்கவையாக இருந்ததினால் அவற்றினால் போட்டோன்கள் கவரப்பட்டு, அவற்றுடன் மாறிமாறி மோதுப்பட்டுக் கொண்டே இருந்தன. மாறிமாறி ஏற்பட்டுக் கொண்டே இருந்த மோதுகைகளினால் போட்டோன்களின் இயக்கம் குறிப்பிட்ட இடத்துக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டு விட்டது. அவை தமது முழுமையான வேகத்தில் இயங்க முடியவில்லை. இதனை நாங்கள் கதிரவனின் நடுப்பகுதியில் தோன்றும் ஒரு போட்டோனின் இயக்கத்துடன் ஒப்பிலாம்.

கதிரவனின் மையத்தில், ஐதரசன் அணுக்கருக்களின் உருகலின் போது போட்டோன்கள் தோன்றுகின்றன. இப்போட்டோன்களில் ஒன்று புவியினை எவ்வாறு வந்தடைகிறது எனப் பாருங்கள். முதலில் இப்போட்டோன் கதிரவனின் உள்ளே இருக்கும் ஏராளமான பிளாஸ்மா நிலைச் சடங்களுடன் மாறி மாறி மோதுண்டு, கடைசியில் கதிரவனின் மேற்பரப்பை வந்தடையும். இதற்கு அப்போட்டோனுக்கு எடுக்கும் காலம் எவ்வளவு தெரியுமா? கிட்டத்தட்ட மில்லியன் வருடங்கள் எடுக்கும். அதன் பின்னர் கதிரவனின் மேற்பரப்பில் இருந்து அப்போட்டோன் நெடுந்தொலைவில் இருக்கும் எங்களது புவியினை வந்தடைவதற்கு எட்டு நிமிடங்களை எடுத்துக் கொள்ளுகிறது. இப்படியாக வருகின்ற போட்டோன்கள் தான் புவியிற்கு வெளிச்சத்தையும் வெப்ப சக்தியையும் கொண்டு வருகின்றன.



ஆக, கதிரவன் எங்களுக்கு ஒரு ஒளிர்வுள்ள பொருளாகத் தெரிந்தாலும், போட்டோன்களை அவற்றின் இயல்பிற் செல்ல விடாத பொருளாக இருப்பதனால், அதுவோர் ஒளிபுகாப் பொருளாகவே இருக்கின்றது. இவ்விதமேதான் எங்களது ஆரம்பப் பிஞ்சுப் பேரண்டமும் அதனுள் இருக்கின்ற துணிக்கைகள் வெப்பத்தால் ஒளிர்ந்தாலும் ஒளியினைக் கடத்த முடியாதநிலையே இன்னமும் இருந்தது. அதாவது, பேரண்டம் அப்போது ஒளியினைப் புகவிட முடியாத ஊடகம் (Opaque) போன்று இருந்தது.

இந்தநிலையானது பேரண்டத்தின் வயது, மூன்று இலச்சம் (300,000) ஆண்டு வரும் வரையிலும் நிலைத்திருந்தது. இந்த 300,000 ஆண்டு என்ற காலக்கணிப்பு விஞ்ஞானிக்கு விஞ்ஞானி மாறுபட்டாலும் மாற்ற நிலை வருவதற்கு நெடுங்காலம் எடுத்தது என்பதனைத் தெரிந்து கொள்வோம். மூன்று இலச்சம் ஆண்டு வயதுக்கு வந்த பேரண்டம் கணிசமான அளவுக்குப் பெருத்திருந்தது. அதன் வெப்பநிலையும் கிட்டத்தட்ட 3000 பாகை கெல்வினாகி விட்டது. இவ்வெப்பநிலையிக்கு பேரண்டம் வந்ததும் இலத்திரன்களினால் முன்னர் போலச் சுயாதீனமாக இயங்க முடியவில்லை. மின்விசையின் காரணமாக, நேரேற்றம் கொண்ட, புரோத்தோன்களையும் ஈலியம் அணுக்கருக்களையும் சுற்றத் தொடங்க, முதன் முதலின் பேரண்டத்துள் சுயாதீன அணுக்கள் தோன்றத் தொடங்கின. ஒவ்வொரு ஈலியம் அணுக்கருவையும் இரண்டு இலத்திரன்கள் வலம் வரத் தொடங்க ஈலியம் அணு உருவானது. ஒவ்வொரு புரோத்தோன்களையும் ஒவ்வொரு இலத்திரன்கள் சுற்றிவர, ஐதரசன் அணுக்கள் தோன்றின. இதனால், பேரண்டத்துள் 20 வீத ஈலியம் அணுக்களும் 80 வீத ஐதரசன் அணுக்களும் நிறைந்தன. அத்துடன் சில இலிதியம் அணுக்களும் போரியம் அணுக்களும் அங்காங்கு தென்பட்டன.

பேரண்டத்தின் 3 இலச்சம் வயதானது இன்னொரு விதத்திலும் முக்கியமானதாக மாறி விடுகிறது. இப்போது இலத்திரன்கள் அணுக்கருக்களுடன் இணைந்து சுயாதீன அணுக்களை உண்டாக்கி விட்டன. இதனால் போட்டோன்களின் இயக்கத்திற்குத் தடைகள் ஏதுமில்லாது போய்விட்டது. தம்மியல்பிலே இயங்கத் தொடங்கிவிட்டன. அதாவது போட்டோன்கள் நேர்கோட்டில் பயணிக்கத் தொடங்கி விட்டன. அதனால் பேரண்டம் இப்போது ஒளிபுகவிடு ஊடகமாகி விட்டது. ஆனால், பேரண்டத்தின் குறைந்த வெப்பநிலையால், அங்கே ஒளிரும் பொருட்கள் இல்லாது போய் விட்டது. அதாவது பேரண்டம் இப்போது முழுதாக இருளில் மூழ்கி விட்டது.

பேரண்டத்திற்கு வயது 300,000 ஆண்டாக வந்ததும் அது இருளிள் மூழ்கி விட்டது என்று அறிந்து கொண்டோம். இவ்விருண்ட பேரண்டத்துள் எப்படி, எப்போது வெளிச்சம் வரத் தொடங்கியது என்பதனை அடுத்துப் பார்ப்போம். வெளிச்சக் காரணிகளாகப் போட்டோன்கள் இருப்பதனால் எமது நோக்கத்திற்குத் துணையாக முதலில் பேரண்டத்துள் பெருமளவில் இருக்கும் போட்டோன்கள் பற்றித் தெரிந்து கொள்வோம்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிக்பாங்குடன் பிறந்த சூடான பேரண்டத்தின் வெப்பத்தை இப்போட்டோன்கள் கதிர்வீச்சாகக் காவுகின்றன. பேரண்டத்தின் வெப்பநிலையுடன் எப்போதும் இவை வெப்பச் சமநிலையில் இருக்கின்றன. போட்டோன்கள் துணிக்கைகளாக இருப்பினும் அவற்றிக்குஅலையின் இயல்புகளும் உண்டு என்பது எங்களுக்குத் தெரியும். இவ்விருமை இயல்பானது போட்டோன்களின் நடத்தையை எப்படி ஆக்குகின்றது எனப் பாருங்கள்.

போட்டோன்கள் துணிக்கைகளாக இருப்பினும் அவற்றின் இருமை இயல்பினால் ஒவ்வொரு போட்டோன் துணிக்கையும் அலைவடிவில் இருப்பது அலைகளின் சிறப்புக் கூறுகளான அலைநீளம், அதிர்வெண் என்பவற்றைக் கொண்டனவாக இருக்கின்றன. எல்லா வெப்பநிலையிலும் போட்டோன்கள் என்ற பெயரினைக் கொண்டிருந்தாலும் வெவ்வேறு வெப்ப நிலைகளில் வெவ்வேறான அலை நீளங்களையும் அதிர்வெண்களைக் கொண்டவையாக மாறுகின்றன, இருக்கின்றன. மின் காந்த அலைத் துண்டுகளான போட்டோன்களின் அலைநீளம் வெப்பநிலை குறைந்து கொண்டுவர அதிகரித்துக் கொண்டு செல்லும். அவ்வலைநீள அதிகரிப்பே வெவ்வேறான இயல்புடைய மின்காந்த அலைகளைத் தருகிறது. அவ்வகையில் தான் ஒளியும் மின்காந்த அலைவரியையில் ஒரு குறுகிய வீச்சினைப் பெற்று எல்லா நிறங்களாகவும் காட்சியளிக்கிறது. பேரண்டம் பிக்பாங்குடன் தோன்றியபோது வெளி விடப்பட்ட சக்தியை கதிர்வீச்சுக் சக்தியாகப்

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

தமிழ்நாடு சுற்றுலா

தமிழ்நாட்டில் உங்களுக்கு விரும்பிய வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மற்றும் சுற்றுலா இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு A/C car அல்லது A/C van உடன் டிரைவர் மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு:

C. Karthick

(தெய்வமகள் சீரியலில் Samuel Raja வாக நடித்தவர்)

(+91) 805.601.8855

# செஞ்சிலுவை சங்கம் உருவான கதை!

## மே 08ம் நாள் செஞ்சிலுவை சங்க தினம்



சுந்தரம் இந்திரராஜா

### The Birth of an Idea-Red Cross

உலகின் பெரும்பாலான பகுதிகளில் இயற்கையும், செயற்கையும் துயரங்களை விளைவிக்கும்போது விரைந்து சென்று உதவிக் கரம் நீட்டும் ஓர் உன்னத அமைப்புத்தான் செஞ்சிலுவை சங்கம். இந்த மனிதநேய அமைப்பு உருவான வரலாறு ஒரு சுவாரசியமான கதை.


1828ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் சுவிட்சர்லாந்தில் ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்தார் ஜீன் ஹென்றி டுனாண்ட் (Jean Henri Dunant). பெற்றோர்கள் மதபற்று கொண்டவர்களாக இருந்ததால் இயற்கையிலேயே ஜீன் மதபற்றில் அதிக ஈடுபாடு காட்டினார். உயர் நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்காமல் வெளியேறிய அவர் சிறிது காலம் ஜெனிவாவிலுள்ள வங்கியில் வேலை செய்தார். 26 வயதானபோது அவர் வர்த்தகத் துறையில் அடியெடுத்து வைத்தார்.
அல்ஜீரியாவுக்கு (Algeria) சென்று சுவிஸ் கொலனியான செட்ரீவ் (Setif) என்ற இடத்தில் ஒரு நிலத்தை வாங்கினார். அதில் விவசாயம் செய்தும், பண்ணை நடத்தியும் தன் தந்தையைப்போல் பெரும் செல்வந்தராக வேண்டும் என்று அவர் விரும்பினார்.



அந்தப் பண்ணைக்குத் தேவையான தண்ணீரை குழாய் மூலம் கொண்டு வர வேண்டியிருந்தது. பக்கத்திலிருந்த நிலப் பகுதியோ பிரெஞ்சு கொலனி. பிரெஞ்சு அரசாங்கத்துக்கு சொந்தமான பகுதி. எனவே அங்கு குழாய் போட பிரெஞ்சு அரசாங்கத்தின் அனுமதியை அவர் பெற வேண்டியிருந்தது. பலமுறை பிரெஞ்சு அதிகாரிகளை சந்தித்தும் பலன் கிட்டாததால் அப்போது பிரான்சை ஆண்டு வந்த மன்னன் மூன்றாம் நெப்போலியனை நேரில் சந்தித்து அனுமதி பெற முடிவெடுத்தார் ஜீன்.

1859ஆம் ஆண்டு ஆஸ்திரிய (Austria) படைகளை இத்தாலியிலிருந்து துரத்தியடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது பிரெஞ்சு இராணுவம். அந்த இராணுவத்தை வழிநடத்திப் போரில் ஈடுபட்டிருந்தார் மூன்றாம் நெப்போலியன். இத்தாலியில் அமைந்திருந்த நெப்போலியனின் போர்த்தலைமையகமான சொல்பிரினோ (Solferino) முகாமுக்கு நேரடியாக சென்றார் ஜீன். போகும் வழியிலேயே போரின் அவலங்கள் அவரின் கண்களில் பட்டன. பாதைகள் துண்டிக்கப்பட்டிருந்தன, பாலங்கள் தகர்க்கப்பட்டிருந்தன. எப்படியோ ஒரு மாட்டு வண்டி துணையுடன் சொல்பிரினோக்கு அருகிலுள்ள காஸ்டிக்லியோன் (Castiglione) என்ற சிற்றூரை அடைந்தார். அந்த சிற்றூரிலிருந்த ஒரு மலை உச்சியிலிருந்து அவர் கண்ட காட்சிகள் அவரை கலங்கடித்தன. போர்க்களத்தில் பத்தாயிரம் பேர் மடிந்தனர், பதினைந்தாயிரம் வீரர்கள் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். அந்த அவலங்களைக் கண்ட ஜீனுக்கு வந்த வேலை மறந்து மனிதநேயம் எழுந்தது. காயமடைந்த வீரர்களில் சுமார் 500 பேர் அந்த சிற்றூரிலிருந்த தேவலாயத்துக்கு கொண்டு வரப்பட்டனர். அங்கு விரைந்த ஜீன் எந்தவித மருத்துவ அனுபமும் இல்லாதிருந்தும்கூட முதலுதவி செய்து காயங்களை சுத்தம் செய்யத்தொடங்கினார். அந்த ஊரிலிருந்த இரண்டு மருத்துவர்களை அழைத்து வந்து மருத்துவம் பார்க்க சொன்னார். இறக்கும் தருவாயில் இருந்த வீரர்கள் கூறிய விபரங்களை எழுதி வைத்துக்கொண்டு அந்தந்த குடும்பங்களுக்கு செய்திகளை அனுப்ப ஏற்பாடு செய்தார். தான் கொண்டு வந்திருந்த பணத்தை வைத்து உணவு ஏற்பாடு செய்ததோடு இன்னும் கூடுதல் மருத்துவர்களை வரவழைத்து மருத்துவம் பார்க்க உதவினார். ஒரு மாதம் அங்கேயே தங்கி வீரர்களை கவனித்தார் ஜீன். இறுதியில் நூறு வீரர்கள் மடிந்தனர், நானூறு வீரர்கள் அவரது முயற்சியால் குணமடைந்து தமது இல்லம் திரும்பினார்கள். பின்னர் சுவிட்சர்லாந்து திரும்பிய ஜீன் தன்னுடைய அல்ஜீரியா பண்ணையைப் பற்றி முற்றிலும் மறந்து போனார். இரவு பகலாக போர்க் காட்சிகளே அவர் கண்முன் தோன்றின. எத்தனை போர்க்களங்களில் எத்தனை வீரர்கள் கவனிப்பின்றி இறந்திருப்பார்கள் என்று நினைத்து கலங்கினார். இனி எதிர் காலத்தில் உலகில் எந்த மூலையில் போர் நிகழ்ந்தாலும் அதில் காயம்படும் வீரர்களுக்கு முதலுதவி வழங்கி அவர்களின் உயிரை காப்பாற்ற ஓர் அனைத்துலக அமைப்பை உருவாக்க வேண்டும் என்று நினைத்தார்.

பின்னர் ஐரோப்பா முழுவதும் பயணம் செய்து அப்படி ஒரு அமைப்பு உருவாக்கப்படுவதற்கு ஆதரவு திரட்டினார். அவரது அயராத உழைப்பால் 1864ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22ஆம் நாள் பன்னிரெண்டு நாடுகள் கூடி ஜெனிவா உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. அனைத்துலக செஞ்சிலுவை சங்கம் உதயமானது. அந்த சங்கம் சுவிட்சர்லாந்தில் உருவானதால் அந்த நாட்டுக் கொடியின் வண்ணங்கள் தலைகீழாக மாற்றப்பட்டு அதுவே செஞ்சிலுவை சங்கத்தின் கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்த சங்கத்தின் தோற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் தனது சொத்தையெல்லாம் செலவழித்து மிகுந்த ஏழ்மைக்குள்ளானார் ஜீன். உலகிற்கு மிகப்பெரிய அமைப்பை உருவாக்கிக்கொடுத்தும் அவரிடம் பணம் இல்லாமல் போனதால் உலகம் அவரை ஒட்டுமொத்தமாக மறந்து போனது. சில சமயங்களில் அடுத்தவேளை உணவு கூட இல்லாமல் அவர் சிரமப்பட்டதாக சில வரலாற்றுக்குறிப்புகள் கூறுகின்றன.



சுமார் முப்பது ஆண்டுகள் ஒதுங்கியே வாழ்ந்த அவரை 1895ஆம் ஆண்டு அடையாளம் கண்டு உலகிற்கு அறிமுகப்படுத்தினார் ஒரு பத்திரிக்கையாளர். அதன் பிறகு 1901ஆம் ஆண்டு அமைத்திக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கி கௌரவித்தது நோபல் குழு. தாம் ஏழ்மையில் இருந்த போது கூட அந்த நோபல் பரிசுத் தொகையை பயன்படுத்தவில்லை. தன் மரணத்திற்கு பிறகு அந்தப் பரிசுத்தொகையில் ஒரு பாதியை சுவிட்சர்லாந்து ஏழைகளுக்கும், மறு பாதியை நோர்வே ஏழைகளுக்கும் கொடுத்து உதவ ஓர் அறக்

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)




# வைகோ...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

நடப்பேன் என்கிறார். இவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஏன் அமைக்கவில்லை? திமுக, அதிமுக இரண்டு கட்சிகளுமே மக்களை ஏமாற்றுகின்றன. எனவேதான் தமிழக மக்களிடம், "பாஜக, காங்கிரஸ், அதிமுக, திமுக கட்சிகளை புறக்கணிக்க வேண்டும். மாற்றுக் கட்சிகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்" என்று வலியுறுத்துகிறோம்.

**அரசியலில் நிரந்தர பகைவனும் இல்லை. நிரந்தர எதிரியும் இல்லை என்பார்கள். இன்று நீங்கள் விமர்சிக்கும் திமுக, அதிமுக போன்ற பெரிய கட்சிகளுடன் கூட்டணி அமைக்க வேண்டிய வாய்ப்பு வந்தால் என்ன செய்வீர்கள்?**

ஒவ்வொரு தேர்தலின்போதும் பெரிய கட்சிகளிடம் இருந்து எங்களுக்கு அழைப்புகள் வந்துகொண்டேதான் இருக்கிறது. ஆனால், எல்லாம் ஊழல் கட்சிகள். அவர்களுடன் எந்த அடிப்படையில் கூட்டணி வைக்க முடியும்? தமிழகத்தில் இன்று நாளுக்கு நாள் பிரச்சினைகளும் போராட்டங்களும் வெடித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் திராவிடக் கட்சிகள்தான். அவர்களுடன் எதிர்காலத்திலும் கூட்டணி



வைக்கமாட்டேன்.

**இந்தியாவில் உங்களுக்கு பிடித்த அரசியல் தலைவர் யார்?**

சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங். அரசியல் தலைமையில் இருந்தவர்களில் வி.பி சிங், லால்பகதூர் சாஸ்திரி, தமிழகத்தில் சிங்காரவேலர், ஜீவானந்தம், வ.உ.சி, அயோத்திதாசர், ரெட்டைமலை சீனிவாசன், காமராஜர், கக்கன், முத்துராமலிங்க தேவர் போன்றோரை பிடிக்கும்

**அயோத்திதாச பண்டிதரை திராவிட இயக்கங்கள் மறைத்துவிட்டதாக தொடர்ந்து சொல்லி வருகிறீர்களே?**

உண்மைதானே. 'தமிழன்' என்று அடையாளம் கொடுத்த தாத்தா அயோத்தி தாசர், ரெட்டைமலை சீனிவாசனுக்கு இங்கு எங்கு சிலை உள்ளது? வ.உ.சிக்கு சிலை எங்குள்ளது? தமிழ்நாடு என்று பெயர் வைத்ததாக சொல்கிறார்கள். அதற்காக போராடிய சங்கரலிங்கனாருக்கு சிலை எங்குள்ளது? தமிழர்களின் வரலாற்று பெருமைகள் அழிக்கப்பட வேண்டும் என்பதுதான் இவர்களின் நோக்கம்.

நாங்கள் வந்தபிறகுதான் தாத்தா அயோத்திதாச பண்டிதருக்கு சுவரொட்டிகள் வைப்பது, கூட்டங்கள் கூட்டுவது போன்ற செயல்பாடுகளை முன்னெடுக்கிறோம். ஒரு திராவிடக் கட்சியாவது ரெட்டைமலை சீனிவாசனுக்கோ, அயோத்திதாச பண்டிதருக்கோ மாலை போட்டதாகச் சொல்லுங்கள்?

**கமல்ஹாசனை விமர்சித்தீர்கள் ஆனால், அவர் கட்சி தொடங்கியதற்கு நேரில் போய் வாழ்த்தினீர்கள். சரத்குமார்கூட, "கமல்ஹாசன் வேண்டுமென்றால் என்னை வந்து சந்திக்கட்டும். நான் அரசியலில் மூத்தவர்" என்று சொன்னார்?**

கமல்ஹாசன் என் ஊர்க்காரர். மேலும், என் சிறு வயதிலிருந்தே கமல்ஹாசன் படங்களைப் பார்த்து ரசித்தவன் நான். இந்நிலையில், அவர் கட்சி தொடங்கியபோது என்னை வந்து சந்திக்கிறேன் என்றார். அது நாகரிகமாக இருக்காது என்பதால் நானே நேரில் போய் வாழ்த்துத் தெரிவித்தேன். இதில் என்ன தவறு இருக்கிறது? ஆனால், கூட்டணி என்று வந்தால் என் கொள்கை, என் பாதை, என் வழி எல்லாமே தனி வழி. எங்கள் ஆட்சி முறையை ஏற்றுக்கொள்பவர்களுடன்தான் கூட்டணி வைப்போம்.

**இனி படங்கள் இயக்குவீர்களா?**

'பகலவன்' என்ற படத்தை இயக்க நீண்ட நாட்களாக திட்டமிட்டு வருகிறேன். விரைவில் இயக்குவதற்கான பணிகள் போய்க் கொண்டிருக்கிறது. தற்போது ஒரு படத்தில் நடிக்கவும் உள்ளேன்.

# யாவரும்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

போட்டோன்கள் பேரண்டத்துள்காவுகின்றன. பேரண்டத்தின் வயது 3 இலச்சமாகத் தொடங்கியதும் தான் போட்டோன்கள் அண்டவெளியுள் பயணப்படத் தொடங்குகின்றன. ஆனால் அந்நேரத்தில் பேரண்டத்தின் வெப்பநிலை 3000 பாகை கெல்வினாக இருக்க, அதற்கு ஒத்ததான அலைநீளத்தைப் போட்டோன்கள் கொண்டிருந்தன. அவ்வலை நீளம் சாதாரண ஒளிகற்றைகளின் அலைநீளத்தை விடவும் பெரியதாக இருந்ததால் அப்போதிருந்த போட்டோன்கள் ஒளியலைகளாக இருக்கவில்லை. (அதனால்தான் அவ்வேளையிற் பேரண்டம் இருளில் சிக்கிக் கொண்டது.) பதிலாக, மின்காந்த அலை வரிசையின் நுண்அலைகளாக அதாவது மைக்குரோ அலைகளாக, வெப்பத்தை பேரண்டத்துள் காவித்திரிகின்றன. இதனைத்தான் அகிலப் பின்புலக் கதிர்வீச்சு (Cosmic Background Radiation) என்கிறார்கள். ஆக, 3 இலச்சம் ஆண்டு வயதிலேயே அகிலப் பின் புலக் கதிர்வீச்சு பேரண்டத்துள் எல்லா இடங்களையும் நிரம்பிக் கொள்ளத் தொடங்கியது. இது பேரண்டத்தின் சரித் திரத்திலேயே முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகின்றது. இப்பொழுதும் இந்த மைக்குரோ அலைகள் பேரண்டம் முழுவதும் நிரம்பியுள்ளது. எல்லாத் திசைகளில் இருந்தும் அவற்றின் கதிர்வீச்சினை உணர முடியும். ஆனால் இப்பொழுது அலை நீளம் முன்னரையும் விட மிகவும் பெரிதாக இருக்கின்றது. பேரண்டத்தின் தற்போதய வெப்பநிலையான 2.7 பாகை கெல்லினுக்கு ஒத்ததான மிகப் பெரிய அலைநீளத்தை இக்கதிர்கள் கொண்டுள்ளன.

இப்போது வலிமை குறைந்து அண்டவெளியெங்கும் காணப்படும் இந்த அகிலப் பின்புலக் கதிர்வீச்சினைக் கொண்டே, பிக்பாங் நிகழ்வின் உண்மைத் தன்மையை விஞ்ஞானிகள் உலகினருக்குக் காட்டுகின்றார்கள்.

அடுத்து, பிக்பாங்கின் பின் 3 இலச்சம் ஆண்டின் பின்னராகத் தோன்றிய அணுக்கள், காலப்போக்கில் ஈர்ப்பினால் ஒன்று திரண்டு முதல் நுண்கலக்சிகளை ஆக்கின. அணுக்கள் ஈர்ப்பினால் ஒன்று திரள்வதற்குப் பேரண்டத்துள் இருக்கும் பெருமளவு இருண்ட சடங்களின் திணிவு முக்கிய காரணியாக இருந்திருக்கிறது. இவ்வாறு ஒன்று திரண்ட அணுக்களினால், பேரண்டத்தின் வயது கிட்டத்தட்ட 3 மில்லியன் ஆண்டுக்கும் 5 மில்லியன் ஆண்டுக்கும் இடையில் இருக்கையில் முதல் விண்மீன்கள் தோன்றின. இம்முதல் விண்மீன்களே பேரண்டத்துள் வெளிச்சத்தைக் கொண்டு வந்தன. அடுத்து வந்த சில மில்லியன் ஆண்டில் இந்த முதல் விண்மீன்கள் சுப்பநோவா வெடிப்புக்குள்ளாகி இறந்துபோயின, சுப்பாநோவா வெடிப்பின்போது ஏராளமான தூசுக்களையும் பாரமான அணுக்களையும் அந்த முதல் விண்மீன் கள் பேரண்டத்துள் தள்ளிவிட, அத்தூசுக் களும் பாரமான அணுக்களும் ஈர்ப்பினால் ஒன்று திரள, முடிவாக இரண்டாம் தலை முறை விண்மீன்கள் பேரண்டத்துள் தோன்ற, இதன் தொடர் விளைவாக மூன்றாம் தலை முறை விண்மீன்களும் பேரண்டத்துள் காலப்போக்கில் தோன்றின. இவையெல் லாம் நடந்து கொண்டிருக்கப் பேரண்டமும் விரிவடைந்து கொண்டு போனது, இப்பவும் விரிவடைந்து கொண்டு போகிறது.



இந்நிலையில் பேரண்டத்தின் மூன்றாம் தலைமுறை விண்மீன்களில் ஒன்றாக எங்களது கதிரவன், இற்றைக்கு 4500 மில்லியன் ஆண்டு முன்னராகத் தோன்றியது. கதிரவனின் ஒரு கோளான புவியில் பௌதீக, இரசாயன, உயிரியற் பரிணாம மாற்றங்களினால் உயிரினங்கள் தோன்றின என விஞ்ஞானம் கூறுகிறது. அவ்வுயிரினங்களின் பரிணாம வளர்ச்சியால் மற்ற உயிரினங்களுடன் மனித இனமும் தோன்ற, அம்மனித இனத்தில் இருக்கும் நாங்கள் இப்புவியில் இப்பொழுது வாழுகின்றோம்.

பேரண்டத்தின் முதல் மூன்று நிமிடங்கள் பற்றி அந்த 3 நிமிடங்கள் எனும் தலைப்பில் நாங்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் இத்துடன் முடிவடைகின்றன.
அடுத்த தடவையில் இன்னொரு சுவாரசியமான பகுதியுடன் வருகிறேன். அதுவரையில் நன்றியுடன் விடைபெறுகிறேன்,

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து,
- முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

*WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:*

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

***HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING***

| | | | |
|---|---|---|---|
| *Cough* | *Gout* | *Diabetes* | *Stumatitis* |
| *Flu* | *Arthritis* | *Cystitis* | *Colitis* |
| *Depression* | *P.M.S* | *Cancer* | |
| *Anxiety* | *Leucorrhea* | *Prostatitis* | |
| *Asthma* | *Migraines* | *Obesity* | |
| *Tonsillitis* | *Hair Loss* | *Hemorrhoids* | |

*Also other Acute & Chronic Problems*
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

*5200 Finch Ave, East Suite 210*
*At Middle Field, Scarborough, M1S 4Z4*

# இன்னல் நீக்கும் இயற்கை - 24

- அகணி -
authorakani@gmail.com



தேரையர் காப்பியத்தில் வருகின்ற பாடல் ஒன்றிலிருந்து இன்றைய உரையாடலைத் தொடங்குவோம்.

"ஆமல கந்தனை ஆகுநல் லூறுகாய்
நேமமாய்க் கொண்டிட நிலையாது பித்தநோய்
கடுவெனு மரிதகிக் காயையு மேற்படி
கொடுதின வாதநோய்க் கூட்டமெல் லாமறும்
அப்பொடி குடிபுனல் ஆயினு மாகுமே"

நெல்லிக்காயை ஊறுகாயாக்கி உணவுடன் உட்கொண்டு வந்தால் பித்தம் காரணமாக ஏற்படும் நோய்கள் அனைத்தும் உடலை விட்டு நீங்கும் என்றும், கடுக்காயை உண்டு வந்தால் வாதநோய்கள் அனைத்தும் நீங்கும் என்றும், கடுக்காயை பொடியாக்கி அல்லது குடிநீராக்கி உட்கொண்டு வந்தால் வாதநோய் நீங்கும் என்றும் இந்தப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

கடுக்காயின் மருத்துவப் பயன்பாடு பற்றி நாங்கள் ஏற்கனவே விரிவாக ஆராய்ந்துள்ளோம். நெல்லிக்கனி பற்றி இந்தக் கட்டுரையில் முன்பு குறிப்பிட்டிருந்தாலும் மேலும் விரிவாக உரையாடிக் கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். பல வருடங்களுக்கு முன்பிருந்தே நெல்லிக்கனியின் மருத்துவப் பயன்பாடு பற்றி பேசப்பட்டு வந்திருக்கின்றது. நெல்லிக்கனி வாதம், பித்தம், கபம் போன்ற மூன்று தோஷங்களையும் போக்கிக் கொள்ளக்கூடியது. சித்தர்கள் நெல்லிக்காயின் மருத்துவச் சிறப்பைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். உடலில் உள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்யும் தன்மை நெல்லிக்கனிக்கு உண்டு. இனிப்பு, கைப்பு. புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு போன்ற ஐந்து சுவைகளும் நெல்லிக்கனியில் உண்டு. நெல்லிக்கனியில் விட்டமின் ஏ, பி, சி ஆகிய மூன்றும் உள்ளன. பித்த மயக்கம், சமிபாட்டுக் குறைபாடு, கண்நோய், காமாலை, இரத்த சோகை போன்ற நோய்களுக்கு நெல்லிக்கனி மருந்தாகும்.

நெல்லிக்கனி ஊறுகாய் சாப்பிட்டு வந்தால் உடலில் பித்தம் குறையும். சமிபாட்டுக் குறைபாடு சீரடையும். உடலில் புண்கள் ஏற்பட்டால் நெல்லிக்கனியால் மாற வாய்ப்பு உண்டு. உடலில் ஏற்படும் பூச்சிகளை அழிக்கக் கூடியது. கர்ப்பிணிப் பெண்கள் முதல் மாதம் முதல் ஒன்பது மாதம்வரை நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால் வாந்தி நிற்கும். பசி ஏற்படும். குழந்தைகளுக்கு நெல்லிக்காய்ச் சாறு கொடுத்து வருவதால் சீரான ஆரோக்கியம் ஏற்படும். நினைவாற்றல் அதிகரிக்கும். பற்களின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.



நீண்ட ஆயுளைக் கொடுக்கவல்ல நெல்லிக்கனியை அதியமான் தான் உண்ணாது ஔவையாரின் சேவையைப் பாராட்டி அவருக்கு பரிசாக வழங்கினான் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நாள்தோறும் வெறும் வயிற்றில் நெல்லிக்காய்ப் பானம் செய்து குடித்து வந்தால் உடல் எடை குறையும். உடற்சருமத்தின் அழகு மெருகூட்டப்படும். உடலில் உள்ள சூட்டைக் குறைக்கும். நெல்லிக்காயில் தேன் கலந்து சாப்பிட்டால் ஆஸ்துமா நோய் குணமடையும். சிறுநீர் கழிக்கும் பொழுது ஏற்படும் எரிச்சலைக் குறைக்கும். நினைவாற்றல் அதிகரிக்கும். சிவப்பணுக்கள் அதிகமாகும். நெஞ்சில் ஏற்படும் எரிச்சலைக் குறைக்கும். அப்பிளைவிட அதிகளவு உயிர்ச்சத்து நெல்லிக்கனியில் உண்டு. தொற்றுநோய்கள் ஏற்படாது தடுக்கும். சிறுநீரகம் வலுவடையும். உடல் வளர்ச்சிக்கு வேண்டிய அமிலங்கள் நெல்லிக்கனியில் உள்ளன. இதயக்கோளாற்றைக் குணமாக்கும். தோடம்பழத்தை விட 20 மடங்கு விட்டமின் சி நெல்லிக்கனியில் உள்ளது.

ஒரு கப் பாகற்காய்ச் சாற்றுடன் ஒரு மேசைக்கரண்டி நெல்லிக்கனிச் சாறும் கலந்து தினமும் இரண்டு மாதங்களுக்கு அருந்தினால் நீரிழிவு உள்ளவர்களின் இரத்தத்தில் சர்க்கரை அளவு குறையும். கண்பார்வை சீராக இருப்பதற்கு ஒரு கப் நெல்லிக்கனிச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி தேனையும் சேர்த்துக் காலையிலும் மாலையிலும் ஏழு நாட்களுக்கு அருந்திய பின்பு தினமும் ஒரு வேளை அருந்த வேண்டும்.

கீல் வாதம் குறைய நெல்லிக்கனி உதவும். நெல்லிக்கனி இதயத்தை வலுப்படுத்தும். தலைமுடி வளர உதவும். நரம்புகள் பலமடையும். தலைமயிர் நரைப்பதைத் தடுப்பதற்கு இலந்தைப்பழம், நெல்லிக்கனி ஆகியவற்றைச் சாப்பிடலாம். நெல்லி மர இலைகளை அரைத்துத் தலையில் பூசிப் பின்பு கழுவி வருவதாலும் நரையைக் குறைக்கலாம். நெல்லி இலையை நீரில் கொதிக்க வைத்து ஆறவிட்டு கொப்பளிக்க வாய்ப்புண் குணமாகும். புற்று நோயையும் தடுக்கும் தன்மை கொண்டது. சளி, இதய நோய்களைக் கட்டுப்படுத்தும். இருமலைக் குறைக்கும்.

நெல்லியை நீரில் ஊறவைத்த பின்பு அந்த நீரினால் கண்களை கழுவ கண்நோய் குணமாகும். அரைத்த நெல்லியை நெற்றியில் பூசினால் தலைவலி குறையும். நெல்லிச் சாற்றுடன் தேன் கலந்து குடிக்க தும்மல், சளி ஆகியவை நீங்கும். நெல்லிச்சாற்றுடன் சந்தனம் கலந்து உட்கொண்டால் வாந்தி தடைப்படும். நெல்லிப் பூவை மென்று சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும். இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்புக்களை நீக்கும். நெல்லியில் விற்றமின் கொம்பிளக்ஸ் உண்டு. தோல் சுருக்கம் நீங்கும். நெல்லிக்கனியில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்பு ஆகியவை உண்டு. 100 மில்லி லீற்றர் வெந்நீரில் இரண்டு தேக்கரண்டி நெல்லிச்சாறும், இஞ்சிச்சாறும் கலந்து சாப்பிட்டால் இரத்தத்தில் உள்ள கெட்ட கொழுப்புக்கள் குறையும். தலையில் நெல்லிச்சாறு தடவிவந்தால் தலையில் உள்ள பொடுகு நீங்கும். மனவழுத்தம், நித்திரையின்மை ஆகிய பிரச்சினைகள் நீங்கும்.

கருநெல்லி என்ற மூலிகை பற்றி இலக்கியப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது. ஔவையார் பாடலிலும், புறநானூறு, சிறுநானாற்றுப்படை ஆகியவற்றிலும் கருநெல்லி பற்றிய கருத்துக்கள் வருகின்றன. பல சங்க இலக்கியப் பாடல்களில் பெருநெல்லி பற்றிய கருத்துக்கள் உள்ளன. பெருநெல்லி பெரும்பாலும் பாலைநிலத்தில் வளரக்கூடியது. கருநெல்லி மலைப்பகுதிகளில் காணப்படும். பெருநெல்லி எளிதாகக் கிடைக்கக் கூடியது. கருநெல்லி கிடைப்பது மிகவும் அரிது. கருநெல்லி மரணத்தை நீக்கும் அளவுக்கு சிறப்பான மருத்துவத் தன்மை கொண்டது.

நெல்லிக்காய்ச் சாதம் என்பது நெல்லிக்காயைத் துருவல் கொண்டு செய்யப்படும் உணவாகும். நல்லெண்ணெய் கொண்டு தாளிக்க வேண்டும். உழுத்தம் பருப்பு, பெருங்காயம், முந்திரிப்பருப்பு, செத்தல் மிளகாய், கடலைப்பருப்பு, கடுகு, அரிசி ஆகிய பொருட்கள் கொண்டு செய்யலாம். நல்லெண்ணெயை தாச்சியில் ஊற்றி கொதிக்க வைத்து கடுகைத் தாளிக்க வேண்டும். கடுகு வெடித்ததும் கடலைப் பருப்பு, உழுத்தம் பருப்பு, முந்திரிப்பருப்பு, பெருங்காயம், செத்தல் மிளகாய் ஆகியவற்றை ஒவ்வொன்றாகப் போட்டு வதக்கி நெல்லிக்காய்த் துருவல் சேர்த்து வதக்கி உப்புச் சேர்த்து சமைத்த அரிசியைச் சேர்த்து நெல்லிக்காய்ச் சாதம் செய்து கொள்ளலாம். நெல்லிக்காயைச் சாப்பிட விரும்பாத பிள்ளைகளுக்கும் நெல்லிக்காயை உண்ண வைப்பதற்கு இந்த சமையல் குறிப்பு உதவியாக இருக்கும். அம்லா ரைஸ் என்ற பெயராலும் அழைக்கப்படும் நெல்லிக்காய்ச் சாதம் பற்றி வெவ்வேறு விதமான சமையல் குறிப்புக்களை இணையத்தில் இருந்து பெற்றுக் கொள்ளுங்கள். நாளாந்தம் ஏதோ ஒரு வகையில் நெல்லிக்காயை உட்கொண்டு வந்தால் மிகவும் நல்லது.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**
இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat

Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# நெஞ்செரிச்சல்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி


வகையான அமில சுரப்புக்கு காரணமாகிறது. இத்துடன் நாம் அணிகின்ற இறுக்கமான ஆடைகள் கூட சிலருக்கு நெஞ்செரிச்சல் ஏற்பட காரணமாகலாம். இறுக்கமான ஆடைகள், பெல்ட் கட்டுதல் என்பனவும் இவ்வகை பிரச்சினைக்கு காரணம் எனலாம். மேலும் இனிப்பு வகைகளை அதிகம் உண்பவர்களுக்கும் இவ்வகையான நெஞ்செரிச்சல் ஏற்பட வாய்ப்புண்டு. சொக்கிளேற் உண்பதால் தசைகள் ஓய்வு பெறுகிறது. இதனால் திரவம் கூட உற்பத்தியாகி உணவுக்குழாய்க்கு செல்கிறது. இன்று இளம் பிராயத்தினர் கூடுதலாக இவ்வாறான உணவுகளையே அதிகம் உண்ணுகின்றனர். இதனாலேயே இன்று வயது வேறுபாடின்றி நெஞ்செரிச்சலால் துன்பம் அடைகின்றனர்.

எவ்வாறு இதனை அறிந்து கொள்வது என்பதும் எவ்வாறு பரீட்சிப்பது என்பதும் முக்கியமாகும். பலருக்கு முதலில் செய்யப்பட வேண்டியது நிழலுரு (Xray) பரீட்சையாகும். இரைப்பையையும், உணவுக்குழாயுடைய நிலைமையையும் அறிய வேண்டியுள்ளது. அடுத்து இன்னுமொரு பரிசோதனையும் செய்ய வேண்டியுள்ளது. உணவுக்குழாய் சோதனையிடப்பட வேண்டும். இதனை Endoscopy எனலாம். இதன்போது உணவு குழாயின் உள்ளேயுள்ள திசுவை எடுத்து ஆய்வு செய்ய வேண்டும். அத்துடன் வயிற்றில் ஏற்படும் திரவத்தை (Acid) எடுத்து அதன் தன்மையையும் ஆய்வு செய்ய வேண்டும். இதற்கு சில கருவிகள் உள்ளன. மேலும் உணவுக்குழாயில் உள்ள இயக்கம் பற்றியும் அளவிடவேண்டும்.

தற்போது இப்படியான நெஞ்செரிச்சலுக்கு நூற்றுக்கணக்கான மருந்துகள் வெளிச்சந்தையில் விற்பனையாகின்றன. இவை திரவமாகவும், வில்லைகளாகவும் விற்கப்படுகின்றன. குறிப்பாக Tums Ultra Strength 1000 சாதாரண நெஞ்செரிச்சலுக்கு பாவனையில் உளது. சாதாரண நெஞ்செரிச்சலுக்கு Zantac 150 மருந்தும், 24 மணிநேர கடுமையான நெஞ்செரிச்சலுக்கு Nexium 24 Hr. மருந்தும் உள்ளது. இவை வைத்தியர்களின் மருந்து சீட்டு இன்றி பெறமுடியும். எப்படி பார்த்தாலும் அசிட்டை குறைக்கும் Antacids மருந்துகளே எல்லாம். கூகிளில் போய் தேடினால் Fast Relief of Heartburn, Heartburn relief என்ற பெயரில் எத்தனையோ மருந்துகள் விற்பனையில் உள. இவையெல்லாம் இதனை நிறுத்தும் என்பதில் உத்தரவாதம் இல்லை. ஆனால் இதனை குறைக்க பல ஆலோசனைகளை பெறமுடியும்.

எம்மால் செய்யக்கூடிய சில எளிய முறைகளை முதலில் செய்துபார்க்க வேண்டும். முதலாவது முயற்சி எளியமுறையில் உணவுகளை தயார்செய்தலும், நெஞ்செரிச்சலை ஏற்படுத்தாத உணவுகளை உண்பதுமாகும். காரம் குறைந்த உணவு, பொரிக்கப்படாத உணவு, எளிதில் செமிபாடு அடையும் உணவு சிறந்தது. உணவுமுறை என்னும் போது காபனேற் குடிபானங்கள், சீனிச்சத்துள்ள குடிபானங்கள், செயற்கையான இனிப்பூட்டிகள் என்பன தவிர்க்கப்பட வேண்டியவை. பதிலாக தயிர், ஒலிவ் எண்ணெய், இஞ்சி பாவனை சிறந்ததாகும்.

அடுத்த செயல்பாடு உணவு உண்ட பின்பு குறைந்தது இரண்டு மணிநேரத்திற்கு முன்னர் படுக்கைக்கு செல்லக்கூடாது என்பதாகும். காரணம் உணவு செமிபாடு அடைய போதியளவு நேரம் தேவையாகும். அத்துடன் தலையணையை உயரமாகப் போட்டு படுக்க வேண்டும். அத்துடன் சரிந்து படுத்து கொள்வது நலம் தரும்.




இன்று பலர் இப்பிரச்சினைக்கு உட்படுவதற்கு மதுப்பாவனையும், சிகரெட் பிடித்தலும் முக்கிய காரணி என்பதால் அதனை நிறுத்திவிட வேண்டும். அடிக்கடி நிகழும் இரவு விருந்துகளில் நேரம் தப்பி உணவு உண்பது, காரமுள்ள உணவு உண்பது, பொரித்த உணவினை உண்பது எம்மவர் வழக்கமாகும். அதோடு சேர்த்து மதுவையும் எடுப்பதால் இரவு முழுவதும் இந்த நெஞ்செரிச்சலால் அவதியுற நேர்கிறது. சிகரெட் பாவனைகூட சலைவா (Saliva) என்னும் உமிழ்நீர் சுரப்பினை குறைப்பதாகும். பாவிக்கும் ஏனைய மருந்துகளில் கவனம் வேண்டும். அஸ்பிரின், உயர் இரத்த அழுத்த மருந்துகள், ஆஸ்துமா மருந்துகள் என்பன. நெஞ்செரிச்சலை கூட்டுவதால் அதுபற்றிய அவதானம் தேவையாகும். அத்துடன் சில வைத்தியர்கள் குறைந்த அளவான உணவை பல தடவை உண்ண வலியுறுத்துகின்றனர். நாம் ஒரேயடியாக அதிக உணவை உண்ணுகின்றோம். அதனை தவிர்க்கலாம்.

உடல் எடையைக் குறைத்தல், உடல் பருமனைக் குறைத்தல் முக்கியமாகும். தேவைக்கு மேலான எடையை தவிர்ப்பது நலம். கூடவே ஆடைகளையும் இறுக்கமின்றி அணிய வேண்டும். மனதினை ஓய்வாக வைத்துக்கொள்ள வேண்டும்.

சிலருக்கு சத்திரசிகிச்சையும் தேவைப்படுகிறது. இதனை Fundoplication என்பர். இதன்மூலம் உணவுக்குழாய் அடிப்பகுதியை பலப்படுத்த முடியும். இதனை ஒரு சத்திர சிகிச்சை நிபுணரே செய்வார். சிலருக்கு Endoscope மூலம் மெல்லிய குழாயை தொண்டையூடாக செலுத்தி அங்குள்ள குறிப்பிட்ட Sphincter என்னும் வழியினை இறுக்கமாக்க முடியும். இதனால் அமிலம் மேல் வருவது தடுக்கப்படுகிறது.

நெஞ்செரிச்சல் ஏற்படும்போது ஒரு கிளாஸ் சூடான பால் குடிப்பது பலன் தரும் என்பது வைத்தியர்களது கருத்து. இது சிறிய விடயம் எனினும் மிகுந்த பலன் வாய்ந்தது. எனினும் கடுமையான சூடாக அல்ல. மெல்லிய சூடான பால் பலன் தரும். இது நிரந்தரமானதல்ல. நிரந்தரமாவதற்கு வாழ்க்கை முறையில் மாற்றம் தேவையாகும்.


# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

மேற்படி கூட்டம்: **திகதி:** மே 05, 2018, சனிக்கிழமை, **நேரம்:** பிற்பகல் 3:00 மணி

**இடம்:** *GTA Square (Second Floor) 5215 Finch Ave. E., #224*
*Scarborough, ON M1S 0C2*

இக்கூட்டத்திற்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அவர்களின் தலைமுறைகள் அனைவரையும் தவறாது வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

தேவாரம், மௌன அஞ்சலி, சென்ற பொதுக்கூட்ட அறிக்கை வாசித்தல், செயலாளரின் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல், பொருளாளரின் நிதியறிக்கை சமர்ப்பித்தல் பிரேரணைகள், தலைவர் உரை, வேறு விடயங்கள், நன்றி உரை, கல்லூரி கீதம்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் உடன்தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:** **416.301.1733 / 416.616.4386**
**905.294.9670 / 416.291.9956**




# அவுஸ்திரேலியா



ஞா. ஆரணி

அவுஸ்திரேலியா உலகின் தெற்கு அரைக் கோளத்தில் அமைந்துள்ளது. உலகில் ஐந்தாம் பெரிய நாடானாலும், இங்கு ஒரு சதுர கிலோமீட்டருக்கு 2.6 மனிதர் மட்டுமே வாழ்கின்றனர். இந்நாட்டின் நிலப்பரப்பில் 91% தாவரங்களைக் கொண்டது. உலகிலேயே உயிருள்ள மிகப்பெரிய 'கட்டிடம்' அவுஸ்திரேலியாவின் Great Barrier Reef



ஆகும். கங்காரு மற்றும் ஈமுவும் அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகங்கள் ஆகும். அவற்றினால் பின் நோக்கி நடக்க முடியாது. ஆனால், அவற்றைச் சிலர் கொன்று உண்பார்கள். இந்நாட்டில் உள்ள பல மிருகங்கள், தாவரங்களை வேறு நாடுகளில் காண முடியாது. அத்தோடு அவுஸ்திரேலியா தென் துருவத்திற்கு அருகே இருப்பதால் அங்கே பென்குவீன்களைக் காணலாம்.



40,000 ஆண்டுகளுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் முதற்குடிமக்கள்தான் வாழ்ந்தனர். பின்னர் 1,400களில் அவர்கள் சீனருடன் வியாபாரம் செய்தனர். 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வந்தனர். இப்போது 25% அவுஸ்திரேலியர்கள் வெளிநாடுகளில் பிறந்தவர்கள். அங்கே 200இற்கு மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுட் சில: ஆங்கிலம், சீனம், கிரேக்கம், அரேபிக். இப்போதும் பல ஆதிவாசிகள் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றனர்.


அவுஸ்திரேலியா, கனடாவை போன்ற ஒரு நாடாகும். அதாவது இரு நாடுகளும் ஒரு காலத்தில் ஆங்கிலேயரால் அரசாட்சி செய்யப்பட்டன. எனவே நாடு நடத்தப்படும் முறையில் ஒற்றுமைகள் பல உண்டு. ஆனாலும் இரு நாடுகளுக்கும் இடையே நிறைய வித்தியாசங்களும் உண்டு. இவை இடம், மக்கள், கலாசாரம், காலநிலை என்பவற்றால் முற்றிலும் புதிதான அனுபவமாக இருக்கும்.

தொடர்புகளுக்கு: **647.545.2632**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**

**Pay top dollars.**

Contact: **416.835.3475**

## *COOK WANTED*

East of Oshawa, Town of Cobourg Restaurant looking Full or Part time Lunch, Breakfast Cook. Long hours, Good Pay.

***BOB: 905.269.4033***

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31, 32

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

**PURE WATER**

**NIAGARA LEAF**

2525 Pharmacy Ave., Scarborough. Demineralized Water by reverse osmosis. Non-Carbonated with 5 p.p.m fluoride ions.

**416.495.7135 / 647.922.6281    Ratna : 416.670.8571**

## JOB JOB JOB

### PRK DOORS & WINDOWS

***(MARKHAM & PROGRESS AVE)***

தொழிற்சாலைக்கு மரவேலை செய்வதற்கும் மற்றும்

Iron welding, Grinder

Exterior door glass installer

(With own vehicle)

Design glass Making and sealing

அனுபவமுள்ள நிரந்தர வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

**(416)875.4119**

## GUEST HOUSE AVAILABLE

### SHORT TERM RENTAL

Price starts from :179/day

Location 1: Meadowale/401

Location 2: Markham/16th

Available Immediately

Good for Birthdays or Special occasions.

**Pls call: Anton**

**416.575.5055**

# உலகின் அரசியல் பொருளாதார மேலாதிக்கம் அமெரிக்காவிலிருந்து சீனாவுக்கு செல்கின்றதா?

- பேராசிரியர் மா. சின்னத்தம்பி -

**அறிமுகம்** - உலகில் புதிய மாற்றங்கள் வெளிக்கிளம்புகின்றன. இவை மற்றொரு உலக ஒழுங்கமைப்பு நோக்கிய சமிக்ஞைகளை வெளிப்படுத்துகின்றன. உலகின் எல்லா நாடுகளின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பன அரசியல் மற்றும் பொருளாதார எண்ணங்கள், அணுகுமுறைகள் மற்றும் நடைமுறைகளின் நோக்கிலும் போக்கிலும் தங்கியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி 'மீண்டும் அமெரிக்காவை உன்னதமாக்கல், முதலிடத்தில் அமெரிக்கா, அமெரிக்கப் பொருட்களை கொள்வனவு செய்தல்' போன்ற கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

பிரித்தானியா ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறியுள்ளது. 1989-1991 காலப்பகுதிகளில் சோவியத் யூனியனின் கட்டமைப்பு சிதைந்தது. இதனடிப்படையில் உலகமயமாதல் அல்லது கோளமயமாதல் (Globalization) என்ற உலக கொள்கை வளர்ச்சி பெற்றிருந்தது. உலகமயமாதல் சார்ந்த தற்போதைய கொள்கைகள் மற்றும் அணுகுமுறையை அமெரிக்கா, பிரித்தானிய போன்ற நாடுகள் மாற்றுவதற்கு முயற்சிக்கின்றன.

1944 இல் இரண்டாம் உலகயுத்தத்துக்கும் பின்பு உலக வங்கி (World Bank) சர்வதேச நாணய நிதியம் (IMF) போன்றன அமெரிக்காவில் உள்ள பிறெற்றன்வூட்ஸ் (Bretton-woods) எனுமிடத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்டன. இது 'பிறெற்றன்வூட்ஸ் ஒழுங்கமைப்பு' எனப்பட்டது. 44 நாடுகள் இதில் பங்கேற்றன. இந்த சர்வதேச அரசியல் பொருளாதார முறைமையில் (System of Political Economy) உடைவுகளும் முரண்பாடுகளும் தற்போது ஏற்பட்டுள்ளன.




மறுமுனையில் சீனமக்கள் குடியரசு பொருளாதார வளர்ச்சியில் அதிதுரித முன்னேற்றத்தை பெற்றுள்ளது. அதில் அன்னிய செலவாணி ஒதுக்குகள் (Foreign Exchange Reserve) அதிகரித்தன. உலகில் வளர்ச்சிக்காக உதவிகளை எதிர்பார்க்கும் பல நாடுகளுக்கு நிதி உதவிகளையும், நன்கொடைகளையும் வழங்குவதில் மிகப் பெரிய பங்கினை உலகரீதியில் சீனா வகிக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்துக்கு பதிலீடுகள் போல பல சர்வதேச உதவி வழங்கும் பிராந்திய நிதியியல் நிறுவனங்களை தாபிப்பதிலும் அது அதிக முனைப்பு காட்டி வருகின்றது.

இத்தகைய அரசியல் அபிலாஷைகளுடன் பிணைக்கப்பட்ட சர்வதேச பொருளாதார அதிர்வுகள் அதிக கவன ஈர்ப்பைப் பெறுகின்றன.

ஹரோல்ட் ஜேம்ஸ் (Harold James), ஈஸ்வர் பிரசாத் (Eswar Prasad) போன்ற சர்வதேச பொருளியல் நிபுணர்களது கட்டுரைகள் பல உலக வங்கியின் ஆய்வு இதழ்களில் அடிக்கடி வெளிவருகின்றன. இவை கவனத்தில் கொள்ளப்பட்டு இங்கு கருத்தாடல்களுக்கு வழங்கப்படுகின்றது.

2. - • பழைய 'பிறெற்றன்வூட்ஸ் அமைப்பு' உடையத் தொடங்கி விட்டதா?

• உலக தலைமைத்துவம் அமெரிக்காவிலிருந்து சீனாவுக்கு நகரத் தொடங்கிவிட்டதா?

• புதிய மாதிரியில் உலகவங்கியையும் சர்வதேச நாணய நிதியத்தையும் சீராக்கம் செய்ய வேண்டுமா?

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)



# சத்குரு



நா. க. சிவராமலிங்கம்

குரு இல்லா வித்தை பாழ் என்பர். கல்வியையும், கலைகளையும் கற்றுக் கொள்வதற்கு குரு மிகவும் அவசியமாவார். குருவின் தரத்திற்கேற்பவே வித்தையின் கணம் அமையும். எனவே தான் தாரமும் குருவும் தலையில் எழுத்து எனக் கூறப்பட்டது போலும். சத்குரு ஒருவர் வாய்க்கப் பெறுவது அதிஷ்ட வசமானது. விவேகானந்தருக்கு ஒரு இராம கிருஷ்ணர் கிடைத்தார். முன் செய்த புண்ணியத்தினாலேயே சத்குரு கிடைக்கப் பெறுவார். மேலும் மனிதன் தனக்குள்ளே இருக்கும் இறைத்தன்மையை அறியவும் ஒரு குருவின் உறுதுணை அவசியமாகும். ஒரு மனிதனின் உடலில் வலி ஏற்பட்டாலே அந்த வலி ஏன் ஏற்படுகின்றது என்றும் கண்டறிய ஒரு மருத்துவர் தேவைப்படுகின்றார். எனவே மனிதன் தன்னுள் இருக்கும் இறைத் தன்மையை குருவின் துணையுடனேயே கண்டறியமுடியும். பார்வையாலும் பரிசத்தினாலும் குரு சிஷ்யனை ஆட்கொள்கின்றார். குருவின் முன்னிலையில் விடுதலையைத் தேடாத உயிர் வலையில் அகப்பட்ட மான் போல் மாயைக்குள் சிக்குண்டு தடுமாறும் என்பது ஔவைக் குறள்

தலைப்பட்ட சத்குருவின் சன்னதியில் அல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம்

இறைவன் அருவமும் உருவுமாகவும் அருவுருவாகவும் விளங்கினாலும் சில சந்தர்ப்பங்களில் குருவடிவாக வந்து அருள் பாலித்துள்ளான். குருவே சிவம் எனக் கூறினன் நந்தி என்கின்றார் திருமூலர்.

விநாயகரை வழிபடும் ஔவையார் தனது அகவலில்

குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் இதுவென
தத்துவ நிலையினைத் தந்தெனை ஆளும்
வித்தக விநாயக விரைகழல் சரணே

என்று பாடுகின்றார்.

முருகனை குருவாக வந்து தனக்கு அருள் புரிய வேண்டும் என்று வேண்டுகின்றார் அருணகிரியார்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

என்று கந்தரனுபூதியில் பாடுகின்றார்.

மணிவாசகப் பெருமானுக்கு இறைவன் குருந்தமர நிழலில் குருவடிவாக காட்சி தந்தான் என்பது வரலாறு. இறைவனை இடைவிடாது சிந்தித்த அருளாளர்களுக்கு ஒரு குருவின் முக்கியத்துவத்தை உணர்ந்ததிற்கு இது அடையாளமாகும்.

மக்களை ஆட்கொள்வதற்கு இறைவன் மானிடச் சட்டை போட்டு மண்ணுலகிற்கு வருகின்றான் என்று கூறுகின்றது திருவருட் பயன்.

பார்வையென மக்களை முன்பற்றிய பிடித்தற்காம் போர்வையெனக் காணார் புவி ஒரு குருவின் தேவையோ, குருவைத் தேடிக் கொள்கின்ற விருப்பமோ ஆன்மாக்களுக்கு ஏற்படாதிருந்தாலும் அருள் பழுத்த நிலையில் அல்லது தேவையின் நிமித்தம் அத்தகைய ஒரு தேடல் உணர்வு ஏற்படவே செய்யும். சில வேளைகளில் குரு தானாகத் தேடி வந்து தன்னிலொரு துளியை உணர்த்தி பின்பு தன்னைப் பின்தொடர வைக்கும் பெருங்கருணை குருவினுடையதாகும்.

இதனை உணர்த்தும் வள்ளலாரின் வார்த்தை இதுவாகும்.

நாம் தேடாமுன்னம் நமைத்தேடிபின்புதனை
நாம் தேடச் செய்கின்ற நல்தாய் காண்



ஒரு குருவின் அண்மை நம்மை புடம் போட்ட பொன் போலாக்கி தேசசு பெருகச் செய்கின்றது. சத்குரு நாதனின் சன்னதி வந்ததும் சஞ்சலம் மறைந்திடுகின்றது. சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள், தவசிரேட்டர்கள், 'சத்'குரு ஆகியோரின் வார்த்தை அன்புதான். இந்த அன்பு அடியவரை அணைத்துக்கொள்கின்றது, ஆட்கொள்கின்றது. நான் உன்னோடிருக்கின்றேன் என்பதைக் காட்டவே இறைவன் ஞான சம்பந்தருக்கு அம்மை அப்பனாகவும், சுந்தரருக்கு கிழ வேதியனாகவும் அப்பருக்கு கைலாச வாசகனாகவும், மணிவாசகருக்கு குருந்தமர நிழலில் ஞான குருவாகவும் காட்சி தந்தான். தமது அன்பர் சோதனை க்கும் வேதனை க்கும் ஆட்படும் போது ஆண்டவன் தேடி வந்து, நாடி வந்து ஆட் கொள்கின்றான்.

குருவின் தோற்றத்தினாலும் குளிர்ந்த பார்வையினாலும் நாம் தாயன்பை அனுபவிக்கின்றோம். அது நமதுள்ளத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி நம்மை ஒரு புனித நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

திசை அனைத்தும் அரவணைக்கும் அன்பு தானே நம் மதம். தாய்மை தேடி வரும் எவர்க்கும் தோள்கொடுக்கச் சம்மதம். கசிந்திருக்கும் கண்கள் தானே கடவுள் வாழும் ஆலயம். கனிவுபொங்கும் வார்த்தை தானே உலகின் இன்பகாவியம் குருபக்தி பெரும்பேறு. - குருசீட பரம்பரை வழிவழி யாக வருவது. அது மக்களை நல்வாழ்வு வாழவைப்பது. ஆத்ம சாதகனை அறியாமை இருளில் ஆழ்த்திடும் ஐம்புலன்கள் போதிய விழிப்பு நிலையை எட்டும் போது விளக்கு களாக மாறி ஆன்மீகப் பாதையில் ஒளி வீசும்.

கள்ளப் புலன் ஐந்தும் காலமணிவிளக்கே.

இது திருமூலருக்கு மட்டுமன்றி ஞானிகள் அனைவருக்குமே ஏற்பட்ட அனுபவம். சிறந்த குருவாக திகழ்ந்தவரின் தவவலிமை அவர்கள் உயிருடன் இருந்த போதே ஒப்பற்றதாய் விளங்கியதுடன் அவர்கள் உடலை உதறிய பின்னரும் அவர்களது சமாதிகள் அதிர்வோடு விளங்குவதைக் காணலாம். சமாதிக் கோயில்களும் வழிபாட்டுக்குரியனவாக விளங்குகின்றன.



## Math tutorial363

Answers to tutorial 362

1)Let h represent the other root ,then h-7=-1 , h=6The product of roots= -7x6= -2k ,

-2k = -42 , k=-21

2)Since |x-|x|| is always positive ,then $\frac{|x-|x||}{x}$ is positive when x >0

Since x>0 , |x| ≥ 0 , |x-|x|| =|x-x| =0 ,but 0/x=0 ,therefore there are no values for x for $\frac{|x-|x||}{x}$ which is a positive integer

3)f(x) =$\sqrt{x+11}$

Average rate of change from x= 5 to x= 5+h

$\frac{f(5+h)-f(5)}{h}$

=$(\sqrt{16+h}-\sqrt{16})/h$

4)y=16/x$^2$ – 1

Dy/dx=-32/x$^3$, slope of the line is 4 ,therefore -32/x$^3$ =4

X=-2,so y=3 ,Point is at (-2, 3).The point of intersection of the line and curve also ( -2 ,3 ) Therefore this line is a tangent to the curve

Tutorial363 Questions

1)A spherical balloOn is being filled with helium at a rate of 8cm$^3$/s. At what rate is the radius increasing when the radius is 12 cm

2)Find the equation of the tangent to the graph of y$^3$ -3xy -5 = 0at the point (2 , -1 )

3)How many possible seven digits telephone numbers are there within a given area code suchthat the first digit is 3 ,5 or6

4)Six different dice are rolled.What fraction of all the possible outcomes have

a)at least one repeated value

b)two 2s,two 4s ,and two 6s

5)A random walks on the xy –plane starts at the point (0 ,0 )and moves at each step one unit right or one unit upwards.How many walks end up at the point (5 ,3 )

By Mr S.F XAVIER (TEACHER)TEL6473409490

# உலகின்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

போன்ற கேள்விகள் உலக அரசியல் மற்றும் பொருளாதாரம் தொடர்பாக வலுவடைந்து வருகின்றன. இவ்வினாக்களுக்கு விடை காணும் நிலைமைக்கான பரிசீலனைகள் இங்கு முக்கியமானவை.

**பழைய பிறெற்றன்வூட்ஸ் அமைப்பு**

1944இல் இரண்டாம் உலகயுத்தம் முடிவடைந்த பின்பு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளை புனரமைப்பதற்காக புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி (International Bank for Reconstruction and Development -IBRD) உருவாக்கப்பட்டது. இது உலக வங்கி (World Bank) எனப் பொதுவாக அழைக்கப்பட்டது. அமெரிக்காவில் பிறெற்றன்வூட்ஸ் எனுமிடத்தில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. இதே காலத்தில் 1945இல் ஐக்கிய நாடுகள் தாபனமும் (United Nations) உருவாக்கப்பட்டது.

அமெரிக்காவும் பிரித்தானியாவும் இதில் தலைமைத்துவத்தைக் கைப்பற்றின. உலகுக்கான கொள்கையை அவர்கள் வடிவமைத்தனர். அமெரிக்காவின் அந்நிய செலவாணி மிகைகள் பாதிக்கப்பட்ட மற்றும் அபிவிருத்தியில் பின்தங்கிய நாடுகளுக்கு உதவிகளாக வழங்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது. இது மாஷல் திட்டம் (Marshal Plan) என்ற பெயரில் நடைமுறைக்கு வந்தது.

3. - உலக நாணய மற்றும் நிதியியல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தவும் கண்காணிக்கவும் சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund - IMF) என்ற வலிமை வாய்ந்த நிறுவனமும் உருவாக்கப்பட்டது. 1945இல் பல நாடுகள் (44) இதனை ஏற்றன. ஆனால் சோவியத்யூனியன் அமெரிக்க தலைமைத்துவத்தில் சந்தேகம் கொண்டு இப் பிறெற்றன்வூட்ஸ் ஏற்பாட்டை ஏற்கவில்லை. இதனால் உலகரீதியில் இரண்டு முகாம்கள் உருவாகின.



1. அமெரிக்காவை தலைமையாகக் கொண்ட முதலாளித்துவ முகாம்.
2. சோவியத் யூனியனை தலைமையாகக் கொண்ட சோசலிச முகாம்.

1989-1991இல் சோவித் யூனியன் சிதைவடையும் வரை இந்த இரண்டு முகாம்கள் உலக அரசியல் பொருளாதார ஓட்டங்களில் ஆதிக்கம் செலுத்தியிருந்தன.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஜேர்மனி மற்றும் ஜப்பானின் கைத்தொழில் கட்டமைப்பு சிதைந்து போயிற்று. அமெரிக்கா யுத்தம் முடிவுற்றதும் தனது கைத்தொழில்துறையை யுத்த தளபாட உற்பத்தியிலிருந்து பொறியியல் மற்றும் இயந்திர உற்பத்தித்துறைக்கு நகர்த்தியது. பல்வேறு நாடுகளுக்கான உணவு விநியோக பலத்தையும் அமெரிக்கா பெற்றுக் கொண்டது. அந்நிய நாடுகள் பலவும் தமது நாணயங்களை அமெரிக்க டொலருடன் பிணைத்துக் (Pegging) கொண்டன.

4. இந்த நிலையில் பிறெற்றன்வூட்ஸ் முறையை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்ற பல்வேறு நிலைமைகள் மற்றும் மாற்றங்கள் உலகின் பல்வேறு புவியியல் பிரதேசங்களிலும் நிகழத் தொடங்கின.

4. - 1960களில் அமெரிக்கா தனது அந்நியச் செலவாணி மிகைகளையெல்லாம் இராணுவ செலவினங்களுக்கும், வெளிநாட்டு முதலீடுகளுக்கும் பயன்படுத்தியது. இதன் காரணமாக பணச்சுருக்க விளைவுகள் ஏற்பட்டன. அமெரிக்காவின் அந்நியச்செலவாணி மிகை (Surplus) களும் இல்லாமற் போயின. இது பல அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிடையே அதிருப்தியை வளர்த்திருந்தது.

1960 காலப்பகுதியில் சர்வதேச நிதிமுறை தளம்பத் தொடங்கியது. சீராக்கம் செய்யக் கூடிய நாணயமாற்று விகித பொறிமுறையில் தளம்பல் அதிகரிக்கலாயிற்று. பணவீக்க நிலை அதிகரித்தது, உறுதியற்ற மூலதனப் பாய்ச்சல், ஜனநாயக அச்சுறுத்தல், அரசியல் உறுதியின்மை போன்ற நிலைமைகள் அதிகரிக்கலாயிற்று. பல்பக்க பொருளாதார செயற்பாடுகள் தொடர்பான நெருக்கடிகள் அதிகரிக்கலாயிற்று.

1945இல் பிறெற்றன்வூட்ஸ் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் உறுதியான நாணய மாற்று வீதமானது டொலருடன் பிணைக்கப்பட்ட வகையில் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. டொலரும் தங்கத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த முறைமை 1971-1973 காலப்பகுதியில் உடைந்து போயிற்று. நாணயமாற்றுவீத உறுதித்தன்மை (Stable Exchange Rated)யை பேணமுடியவில்லை. இது சிதைந்து போயிற்று. 1971, ஓகஸ்ற் 15இல் ஐக்கிய அமெரிக்கா ஒரு பிரதான தீர்மானத்தை எடுத்தது. இதன்படி அமெரிக்க டொலருக்கும் தங்கத்துக்குமிடையிலான தொடர்பு துண்டிக்கப்படலாயிற்று.


5. - உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம், ஐக்கிய அமெரிக்கா போன்றன ஒன்றிணைந்து உருவாக்கிய சர்வதேச வர்த்தக, நாணய, செலவாணி முறைமைக்கு பெரிய அறைகூவல் 1973இல் உருவாக்கப்பட்டது. 'ஓபெக்' (OPEC) நாடுகள் மசகெண்ணையின் விலையை முன்னொருபோதும் இல்லாதவாறு உயர்த்தினது. இதனால் உலகில் பல்வேறு நாடுகள் பாதிக்கப்பட்டன. இவற்றில் முன்னேறிய நாடுகளும் வளர்முக நாடுகளும் அடங்கியிருந்தன.

1973இல் அரேபியா - இஸ்ரேலிய யுத்தத்தின் தொடர் நெருக்கடிளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவை உலக நாணய முறையில் பல அதிர்வுகளை உருவாக்கியிருந்தன. அமெரிக்காவின் அரச செயலாளராயிருந்த ஹென்றி கிஸிஞ்சர் (Henry Kissinger) முன்வைத்த மாற்றுத் தீர்வை ஏற்றுக் கொண்டு பல நாடுகள் 1975இல் பிரான்சில் உள்ள றாம்போல்ட் நகரில் ஒன்று கூடின. குழு5 (G5)ஐச் சேர்ந்த அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் இணக்கமாக தீர்மானம் மேற்கொண்டன. இதன்படி எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் எண்ணெய் விலையை உயர்த்தியதால் பெற்ற மேலாதிக்கை பல்பக்க சர்வதேசிய நிறுவனங்களில் வைப்புச் செய்ய வேண்டுமென்றும், அதிலிருந்து எண்ணெய் விலை உயர்வினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிதி உதவி வேண்டுமென்றும் தீர்மானிக்கப்படலாயிற்று. சர்வதேச நாணய நிதியத்தின் இந்தப் புதிய நிதிவசதி உலக ரீதியில் முக்கியமானதாயிற்று. சர்வதேச நாணய நிதியம் மேற்பார்வையாளர் என்ற பதவியிலிருந்து இடர் முகாமையாளராக தன்னை மாற்றிக் கொண்டமை சர்வதேச முறையில் ஏற்பட்ட மிகப்பெரிய மாறுதலாகும்.

6. - உலக பொருளாதார முறைக்கு எதிரான மற்றொரு நெருக்கடி நிலைமை 1982இல் உருவானது. அதிகரித்துச் சென்ற எண்ணெய் விலை காரணமாக ஏற்பட்ட வெளிநாட்டுக் கடன்களை செலுத்தமுடியாமல் பல்வேறு இலத்தீன் அமெரிக்காநாடுகள் சிரமப்பட்டன. இது பல்வேறு பரவல் விளைவுகளை உருவாக்கியிருந்தது. இவற்றை சீராக்க வேண்டிய புதிய பணிபற்றி சர்வதேச நாணய நிதியம் சிந்திக்கலாயிற்று. நிலையான நாணய மாற்றுவிகித கொள்கையை கைவிட தீர்மானித்தது. நாடுகளின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கைகளை சிபார்சு செய்ததுடன் புதிய கடன்களை பல்வேறு வங்கிகளிடமிருந்து அவை பெறுவதற்குரிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த 2008இன் நிதி நெருக்கடிகள் ஐரோப்பிய செல்வந்த நாடுகள் பலவற்றையும் பாதித்தது.

(தொடரும்)

# மேதின விழா





வியர்வை என்னும் உவர் நீரில் குளித்து
வினாக்குறி போல் நித்தம் வளைந்து நாட்டின்
உயர்வுக்காய் துணைநிற்கும் தொழிலாளர் தம்
ஊதியத்தை ஏப்பமிடும் கயவர்களைக் கண்டித்து
கடும் உழைப்புத் தொழிலாளிகளுக்கு வாழ்வழிக்க
கடைசி நேரம் கை கொடுத்ததினமே மேதினம்

மேதினி போற்றும் மேதின விழாவில் தம்மில்
மேலவர் கீழவர் இல்லை என்று தோழர்கள்
நீதி நெறியினை நினைத்து யாவரும் இணைந்து
நல்லதோர் முடிவினை நலம்பெற எடுத்திட
மாநிலம் காணும் நால்வகை விழாக்களில்
மேதின விழாவினை மேலெனக் கொண்டனர்

எட்டுமணி நேரம் மட்டுமே வேலை எனவும்
ஏழு நாட்களில் நாற்பது மணி நேரம் மட்டும் வேலை
இன்னும் பல சட்டங்கள் எடுக்க உதவியவிழா
இன்று வாழ்க்கைச் செலவு அதிகரிப்பாலே நாட்டின்
நலன்கருதி உழைக்கும் தொழிலாளர்களுக்கு
ஊதியத்தை உயர்த்திக் கொடுக்க உதவியவிழா


ஆலையே ஆனாலும் அரச திணைக்களமாயினும்
அது ஆலயம் போன்றது என்பதை உணர்ந்து
செய்யும் தொழிலே தெய்வமென யாவரும் எண்ணி
செய்திடவேண்டுமென தோழர் தோழிகளோடு
தோழ் கொடுத்து மேதின விழாவை
மேம்பட கொண்டாடுவோம் வாரீர்

உழைப்பின் முன்னே உவகை வைத்தால்
உருளும் உலகின் வாழ்வு தளைத்து தரணி சிறக்கும்
தருணம் இதுவென தவறாமல் யாவரும்
மேதின விழாவில் கலந்திடவாரீர்!



கவிநாதம் பரந்தாமன்

# அன்னை



அள்ளிக் கொடுக்கும்
அன்னை
அன்பை வெல்ல
அகிலமதில்
ஏதும் இல்லை.
"அன்னையை
நாளும் தொழு-
திடு...
அன்பால்
அகிலமதை வென்றிடு..."

- பிரஷா -

# யாழ்ப்பாணத்தில் சின்னமேள ஆடற்கலை 'தொன்மம்'


**- ரதன் -**

ஆய்வறிஞர் விபரம் -

திருமதி. வலன்ரீனா இளங்கோவன்
B.A (Hons), PGD. Edu, M.A(Dist)
முதுதத்துவமாணி பட்ட ஆய்வாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
பேராசிரியர்.மா. வேதநாதன்,
இந்துநாகரிகத்துறை, கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம், இலங்கை.


**அறிமுகம்** - ஈழத்தமிழரின் வரலாற்று அடையாளங்கள் பதிவு செய்யப்பட வேண்டிய இக்காலப்பகுதியில் அவர்களின் கலை, கலாசாரம், பண்பாடு பற்றிய ஆய்வுகள் அவசியமாகின்றன. ஈழத்தமிழரின் கலாசார மையமாகத் திகழும் யாழ்ப்பாணக் குடாநாடு நீண்டகால வரலாற்றையும், தொடர்ச்சியான பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் கொண்ட பிரதேசமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தில் இந்துக் கோயில்களை அடிப்படையாகக் கொண்ட கலைமரபு வளர்ச்சியுற்று வந்துள்ளதை அறிய முடிகின்றது. அவ்வகையில் ஒரு காலகட்டத்தில் கோயில்களில் பக்திபூர்வமாக இறைவனுக்கு நிருத்ததானமாகப் பெண்களால் நிகழ்த்தப்பட்டு வந்த நிகழ்த்துக் கலையே சின்னமேள ஆடற்கலை மரபு ஆகும்.

**சின்னமேளம்** - கோயில் ஆராதனை சார்ந்த நாட்டியத்தில் பெண்கள் மட்டும் ஆடும் நடனமும் கோயில்களில் தேவதாசிகளால் ஆடும் நடனமும் 'நட்டுவமேளம்' என்றும், ஆண்கள் மட்டும் செய்யும்முறை 'நாட்டியமேளம்' என்றும், 'பெரியமேளம்' என்பது டோல், சண்ணாய, தாளம் ஆக-ியவை இணைந்த இசைக்குழு என்றும், சின்னமேளம் என்பது சுருதி, முகவீணை, மிருதங்கம், தாளம் என நிருத்தியத்தில் வாசிக்கும் "இசைக் குழுவினர் கூட்டமே" என்றும் கலைமாமணி எஸ்.என்.ஸ்ரீராம தேசிகன், 'பரதக்கலைக் களஞ்சியம்' எனும் ஆய்வு நூலில் குறிப்பிடுகின்றார். (ஶ்ரீராம தேசிகன், 2001:42)

'சதிராட்டம்' என அழைக்கப்பட்டு வந்த தாசிகளின் ஆட்டமானது சினிமாவின் தாக்கத்தால் 'சதிர்' ஆட்டத்தின் தன்மையற்று ஒரு புதுவித ஆடலாகத் தோன்றியமையால் மக்கள் 'சதிர் ஆட்டம்' என்று அழைக்காது 'சின்னமேளம்' என்று அழைத்திருக்கக் கூடும்.

'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் 'சின்னமேளம்' என்பது சதிர் ஆட்டத்திற்கு வாசிக்கப்படும் தோற்கருவி என்றும், இலங்கையில் திருவிழா போன்றவற்றில் திரைப்படப் பாடலுக்கு ஆடும் நடனம், dance performed to the tunes of film songs (as part of temple festivals) இந்தமுறை திருவிழாவிற்கு மூன்றுசோடி சின்னமேளம் பிடித்துள்ளார்கள். பெரிய மேளக் கச்சேரி முடிந்ததும் சின்னமேளக் கச்சேரி தொடங்கும்" என்றும் குறிப்பிடப்படுகின்றது. (ராமகிருஷ்ணன் 2011:590)

**சின்னமேளத்தின் தோற்றம்** - தமிழர் தம் நாட்டியக் கலையானது ஆரம்ப காலத்தில் 'கூத்து' என்ற பெயருடன் விளங்கியது. இருபதாம் நூற்றாண்டுவரை சதிர் ஆட்டம், தாசியாட்டம், தேவரடியார் ஆட்டம் எனப் பெயர் பெற்று விளங்கியதாகத் தெரிகின்றது. எனினும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் முன்பின்னாக இது 'சின்னமேளம்' என அழைக்கப்படுவது பெருவழக்காக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் செட்டிமார்கள் கட்டிய கோயில்களில் இறைவனுக்கு ஆடற்கிரியை வழங்குவதற்காக இலங்கைக்கு கூட்டி வரப்பட்டவர்கள் தமிழகத்து ஆடல் மங்கையர். இவர்களைப் போல் இலங்கையிலும் ஆடல் மங்கையர் இருந்துள்ளனர். இவ் ஆடல் மங்கையரின் ஆடல்களே 'சின்னமேளம்' என்று அழைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இத்தகையோர் கோயில் ஆடல் மங்கையர்களாகக் கடமையாற்றிய அதேவேளையில் சிறிய நிலமானியப் பொருளாதார முறையை அடியொற்றிய பரத்தைத் தொழில் புரிந்து காதற் பரத்தைகளாக வாழ்ந்து வந்தனர் என்பதனை நட்டுவச்சுப்பையனார் எழுதிய கனகிபுராணம், நாவலர் பிரபந்தத்திரட்டு என்னும் நூல்கள் வாயிலாகவும் உறுதி செய்ய முடிகின்றது.

எனவே தாசிகள் என்ற பரத்தை தொழில் புரியும் குலத்தினர் கோயில்களிலே குறிப்பாக, திருவிழாக் காலங்களிலே நிகழ்த்தி வந்த ஆடற்கலையையே 'சின்னமேளம்' என்று மக்கள் அழைத்ததாக அறிய முடிகின்றது. அரசவைக் களங்களிலும், சில ஆண்டவன் சந்நிதிகளிலும் ஆடப்பட்டு கால ஓட்டத்தில் எல்லாக் கோயில்களிலும் இடம்பெறும் நிகழ்ச்சியாக வளர்ந்தது. அங்கெல்லாம் கோயில் பூசைகளில் நட்டுவ மேளத்தைக் கண்ட மக்கள், தேவதாசிகள் ஆட்டத்திற்குச் சிறிய அளவிலான மேளம் (மிருதங்கம்) பாவிக்கப்படுவதனைக் கண்டு அதனை (சின்னமேளம்) என அழைக்க முற்பட்டு நாளடைவில் அம்மேளம் பாவிக்கும் நாட்டியக் கலையையே 'சின்னமேளம்' என்ற பெயர் கொண்டு அழைக்கும் மரபு தோன்றியது என கலாநிதி பத்மா சுப்பிரமணியம் போன்றவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எனவே ஆரம்பத்தில் சின்னமேளம் என்பது மிருதங்கத்தினைக் குறித்துப் பின்னர் இவ் வாத்தியத்துடன் ஆற்றுகையை நிகழ்த்தும் குழுவினரையே குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இதனால் இந்நடனத்தை ஆடும் பெண்களை 'சின்னமேளக்காரி' என்று அழைக்கும் மரபு யாழ்ப்பாணத்தில் பெருவழக்காக நிலவியது.

'சின்னமேளம்' என்ற பெயர் இருபதாம் நூற்றாண்டில் பிரபல்யம் அடைய ஏனைய பெயர்கள் பின்னடைந்தன. இப்பெயர் தமிழகத்தைவிட யாழ்ப்பாணத்தில் பிரபல்யம்



அடைந்தது. இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இவ் ஆடற்கலை பெருவளர்ச்சி கண்டு மிகப் பிரபல்யமடைந்தமையைப் பற்றி அறிய முடிகின்றது.

**சின்னமேளத்தின் வளர்ச்சி** - பத்தொன்பதாம் நூற்றாண்டில் இருந்த பிரித்தானியார் ஆட்சியே இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிவரை (1948) ஈழத்திலும் இந்தியாவிலும் தொடர்ந்து இருந்து வந்தது. எனவே காலவளர்ச்சிக்கு ஏற்ப யாழ்ப்பாணத் தமிழகத் தொடர்புகள் இக்காலத்தில் நெருக்கமாயின. இதனால் சமய கலை கலாசார ஊட்டம் மேன்மேலும் நெருக்கம் அடைந்தது. தமிழகத்து பல்துறைக் கலைஞர்கள் ஈழத்தினைத் தரிசிக்கும் நிலை ஏற்பட்டது. இவர்கள் ஈழத்திற்கு வந்து செல்வதை புகழ் தரும் நிகழ்வாகக் கருதினர் எனத் தெரிகின்றது.

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தமிழகக் கலையலையில் ஆடல் மகளிர் பலர் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றதாகவும், சிலர் இங்கு நிலையான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது. ஆரம்பகாலத்தில் யாழ். வண்ணார் பண்ணையில் (1900ஆம் ஆண்டில்) புத்துவாட்டி மடுவமே தேவதாசிகளின் முக்கிய வதிவிடமாக இருந்தாகத் தெரிகின்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் "புத்துவாட்டி" குடும்பத்தினரை விட்டு யாழ்ப்பாணத்தின் இசை, நாடக, நடன வரலாறுகளை எழுத முடியாது" என்று கூறியமை இக்கருத்தினை உறுதிசெய்கின்றது. (வலன்ரீனா 2008:17).

ஆரம்பத்தில் கோயில் கலை மரபாக சமயச் சடங்குகளுடன் ஒட்டிய கலையாக விளங்கிய இவ் ஆடற்கலை 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டத்தினைத் தொடர்ந்து நாடக மேடைகளிலும் இடம் பெறலாயிற்று. ஆடல் மகளிர் நாடகங்களில் நடிக்கவும் செய்தனர். இவ்வாறு நடித்தவர் களில் இராஜலக்சுமி, கன்னிகா பரமேஸ்வரி என்பவர்கள் முக்கியமானவர். 1910க்களில் புத்துவாட்டி சின்னத்தம்பி என்பவர் அங்கு ஏற்படுத்திய நாடகக்கொட்டகையில் தமிழக நாடக, ஆடற்கலைஞர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. புத்துவாட்டியார் மடுவத்தில் ஆரம்பத்தில் இருந்த தேவதாசிகளில் செல்லக்கண்டு, இராஜலக்சுமி, இராஜாம்பாள் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகக் கூறப்படுகின்றார்கள்.

**கோவில்களில் சின்னமேள ஆடல் நிகழ்வுகள்** - யாழ்ப்பாணத்து கோவில்களிலே கோயில் திருவிழாக்களின்போது, வசந்த மண்டபத்தில் முதலில் தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் ஆரம்பமாகும். இக் கச்சேரியானது களைகட்டி வாசிக்கப்படும் போது, அடுத்த நிகழ்வாகச் சின்னமேளக் கச்சேரிக்கான ஆயத்தங்கள் நடைபெறும். அதன் முன்னோடியாகச் சின்னமேள நிகழ்ச்சிக்குரிய பக்கவாத்தியக் கலைஞர்களான மத்தளக்காரரும், ஆர்மோனியக்காரரும் தென்படுவார்கள். பார்வையாளர்கள் இவர்களைக் கண்டதும் தவில் நாதஸ்வரக் கச்சேரிகளின் ரசனையை விடுத்து சின்னமேள நிகழ்ச்சியை எதிர்பார்த்து ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிவிழுத்திக் கொண்டு சபையில் அமர்வார்கள். இதனால் தவில் கலைஞர்கள் தங்கள் கச்சேரிகளை இடையில் நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

இந்நிலையைப் பற்றி பல்துறைக் கலைஞரும், நாதஸ்வரக் கலைஞருமான திரு.வி. மாசிலாமணி அவர்களின் மனைவி முத்துலட்சுமி அவர்களின் கீழ் கண்ட செவ்வி எடுத்து விளக்குகின்றது.

"சபையோரின் ஆரவாரத்தினால் களைகட்டி அற்புதமாக வாசித்துக் கொண்டிருக்கும் தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் மேளத்தையும் நாதஸ்வரத்தையும் கட்டிக்கொண்டு எழும்பிச் செல்லவேண்டிய நிலை உருவாகும்.". (வயது 89, 23.03.2017 முத்துலட்சுமி .மா, வீட்டுப்பணி _ நேர்காணல்).

சின்னமேள ஆடல் நிகழ்வானது தவில், நாதஸ்வர நிகழ்வுகளையெல்லாம் பின்தள்ளி முதன்மையான இடத்தைப் பெறுவதற்கு அக்கால சமூக நிலையையும் ஒரு காரணம் என்று பல முதியவர்களின் செவ்விகள் மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அதாவது, அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் வருவது மிகக்குறைவு. பொது இடங்களில் அவர்களைக் காணும் வாய்ப்பு அக்கால இளைஞர்களுக்கு மிகவும் குறைவாக இருந்தமையால் அழகும் கவர்ச்சியும் மிக்க சின்னமேள ஆடல் மகளிரைக் காண்பது இளைஞர்களுக்கு அரிய சந்தர்ப்பமாக அமைந்தது. எனவே எல்லாத் தடைகளையும் தாண்டி வந்து இச்சின்னமேள ஆடல்களை முண்டியடித்துக்கொண்டு வந்து இளைஞர்கள் பார்ப்பதில் வியப்பேதுமில்லை.

அன்றைய காலத்தில் சுவாமி வீதியுலா வரும்போது ஆடல்மகளிர் சுவாமிக்கு முன்பாக நடனமாடிக்கொண்டு சென்றதாகவும் அறியமுடிகின்றது. இவ்வாறு சுவாமிக்கு முன்பாக புனிதமாக தெய்வீக மணங்கமழ சின்னமேள ஆடல் நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன என்பதையும் அறியமுடிகின்றது. இவ்

(தொடர்ச்சி 38ஆம் பக்கம்...)

# யாழ்ப்பாணத்தில்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

றான நிகழ்ச்சிகள் சின்னமேளக் கலைக் குரிய தெய்வீகப் பின்புலத்தை வளமூட்டு வதாக அமைகின்றது.

**சின்னமேளம் ஜனரஞ்சகமடைதல்** - யாழ்ப்பாணத்துக் கோயில்களில் பக்தி பூர்வமாக ஆடப்பட்டு வந்த ஆடல்கலை யானது வெகுவிரைவில் கோயிற்கலையாக இல்லாது வருமானம் தேடுவதற்குரிய கலை யாக மாறியது. 'சின்னமேளம்' என்ற நாமம் யாழ். குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் மனப் பதிவு பெற்றது. கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களின் போது சமய நோக்கிலன் றிக் கேளிக்கைக்குரிய நிகழ்வாக இவ் ஆடற்கலை பெருவளர்ச்சி கண்டது. தவில் நாதஸ்வர நிகழ்ச்சிகளை எல்லாம் பின் தள்ளி முதன்மையான இடத்தைப் பெற்றது.

இந்துக்கோயில் திருவிழாக்களில் இறுதி நிகழ்ச்சியாக சின்னமேளம் நடைபெறும். இக்கருத்தை எடுத்துக்கூறிய முதியவர்கள் பலர் "விருந்திற்கு பாயாசம் போல ஒவ் வொரு கோயில் நிகழ்ச்சிகளிலும் சின்ன மேள ஆடல் சிறப்பான நிகழ்வாக இறுதி யில் இடம்பெறும்" எனக் குறிப்பிட்டுள்ளார் கள். (வலன்ரீனா 2008:18) சின்னமேளம் எந்தெந்த ஆலயங்களில் எல்லாம் நடை-பெறுகின்றதோ அங்கெல்லாம் மக்கள் கூட் டம் அலைமோதியதாக அறியப்படுகின்றது.

**சின்னமேளக் குழுக்கள் உருவாகுதல்** - இந்நிலை 1930களில் உச்சமடைந்து காணப் பட்டதாக அறியப்படுகின்றது. இந் நிகழ்வுகள் வருமானம் தேடும் ஒரு கலை யாக அமைந்ததால் யாழ்ப்பாணத்தில் பல் வேறு பகுதிகளிலும் உள்ள வசதி படைத்த வர்களிற் சிலர் சின்னமேளக் குழுக்கள் (செற்றுக்களை) உருவாக்கினர். இவர்கள் தென்இந்தியாவில் இருந்து தரகர்கள் மூலம் தொடர்புகொண்டு ஆடல் மகளிரை வரவ ழைத்தனர். இச்செற்றுக்களை வைத்திருக் கும் உரிமையாளர்களின் பெயர், ஊர் என்பன சேர்த்து அக்குழுவினர் அழைக்கப் பட்டனர். இவற்றில் புத்தூர் மார்க்கண்டு செற், கொக்குவில் சின்னத்துரை செற், நீர் வேலி வைத்திலிங்கம் செற், இணுவில் சரவணமுத்து செற், விளான் பஞ்சலிங்கம் செற், ஆவரங்கால் யூனியன் செல்லத்துரை செற், கீரிமலை பொன்னுச்சாமி செற், அள வெட்டி ஐயாத்துரை செற், வண்ணார் பண்ணை இராமசாமி செற், வறணி சின்னத் தம்பி செற், கச்சாய் குஞ்சையா செற், நாச்சிமார் கோவிலடி வேணுகோபால் செற், சிறுவிளான் நாகலிங்கம் செற், வடலியடை ப்பு பஞ்சலிங்கம் செற், சுதுமலை மணியம் செற்போன்றவைகுறிப்பிடத்தக்கவை ஆகும்.

அத்தோடு சில குழுக்கள் ஆடல்களை ஆடியவர்களின் பெயர்களாலும் அழைக்கப் பட்டு வந்தன. எடுத்துக்காட்டாக சரசு விசாலினி செற், விஜயா செற், மல்லிகா செற், அம்பிகா செற், ஈஸ்வரி சகோதரிகள் செற், ரூசிஸ்ரேஸ் செற், லக்சுமி சகோதரி கள் செற், இராமலட்சுமி செற், முல்லை சகோதரிகள் செற், நாகேஸ்வரி செற், இந்திராசந்திரா செற் என்பன குறிப்பிடத்தக் கன. இவ்வாறான 40ற்கு மேற்பட்ட செற்றுக் கள் யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்றிருந் தன என்பது அறியப்படுகின்றது.

**தமிழ்நாட்டு நடனமகளிரின் வருகை** -



யாழ்ப்பாணத்தில் பொதுவாக ஆலய உற் சவங்கள் பங்குனி மாதம் முதல் புரட்டாதி மாதம் வரையுள்ள 6 மாதங்களும் நடை-பெறும். இவ் ஆறு மாதங்களுக்கும் நடன விருந்தளிப்பதற்காக தமிழகத்தில் இருந்து ஒப்பந்தம் பேசி நாட்டிய மகளிர் இங்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் யாழ்ப் பாணத்தின் பல்வேறு இடங்களிலும் உள்ள கோவில்களில் ஆடல் நிகழ்ச்சிகளை ஆற் றுகை செய்தார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி, உணவு வசதி, சமையற்காரர் வசதி எல்லாவற்றையும் "செற்" முதலாளி ஏற்படுத் திக் கொடுத்தார் என அறியப்படுகின்றது. செற்றுக்களை வைத்திருந்த முதலாளிகள் இந்நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்திச் செய்வதன்மூலம் ஆடல் மகளிரின் ஒப்பந் தப் பணத்தையும் மற்றும் செலவுகளையும் நீக்கி நல்ல வருமானத்தைப் பெற்றுக் கொண்டார்கள் எனத் தெரிகின்றது. தமிழ் நாட்டில் தஞ்சாவூர், கும்பகோணம், பண்ரு ட்டி, எண்கண், குழிக்கலை, வேதாரணியம் முதலான இடங் களில் இருந்து ஆடல் மகளிர் இங்கு வந்ததாக அறியப்படுகின்றது. இவ்வாறு வந்தவர் களில் தாராபாய், எண் கண் ராஜலக்சுமி, அம்புஜம், செல்லக் கண்டு, கோகிலாப்பட்டு, ஆனந்தவல்லி, கமலகுமாரி, மீனாம்பாள், எண்கண்ணாள், இந்திரா சந்திரா, வேணு பத்மா, யசோதா, சிறிவாஞ்சியம் போன்றோர் பிரபல்யம் ஆனவர்கள் எனக் கூறப்படுகின்றது.

1930ஆம் ஆண்டின் பின் சின்னமேளக் கச்சேரி மேலும் பிரபல்யமடைந்ததற்கான சூழல்கள் ஏற்பட்டன. தமிழகத்தில் "தேவதா சிகள் தடைச்சட்டம்" கொண்டு வரப்பட்டது. எனவே அங்கு தேவதாசிகள் தொழில் இழந்து வருமானம் இழந்து வாழும்நிலை ஏற்பட்டது. இந்நிலைமை அவர்கள் யாழ்ப் பாணத்தை நோக்கி வருவதற்குக் காரணமாக அமைந்தது.

**வெளியரங்குளில் சின்னமேளம்** - ஜனரஞ்சகக் கலையாக வளர்ச்சி கண்ட சின்னமேள ஆடற்கலை கோயில் உற்சவங் கள் திருவிழாக்களில் மட்டுமன்றி திருவிழா க்களின்போது நிறுவப்பட்ட தண்ணீர்ப்பந்தல் கள், திருமணச்சடங்குகள், பொதுநிறுவனங் களின் விழாக்கள், மிருகபலி நிகழ்வுகள் போன்றவற்றிலும் இடம்பெற்று வந்தாகவும், விழாக்களில் இவ் ஆடற்கலையின் தேவையை பூர்த்தி செய்வதற்கு செற்றுக்களின் தொகைபோதா நிலை கூட ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது.

(தொடரும்)

## EDUCATION

### Answer Key : 18-8

➢ **BIOLOGY 12**

**Roles of eukaryotic DNA polymerases...**

**Primer synthesis, repair,**

**mitochondrial DNA replication, leading & lagging strand synthesis, Gap filling on lagging strand.**

➢ **Glucose can be obtained...**

**Muscle glycogen converted directly to glucose - 1-phosphate by glycogen phosphates, which does not consume energy. But the liver glycogen converted into glucose. Therefore, one fewer ATP will be produced when liver glycogen undergoes ATP production.**

➢ **PHYSICS 11 & 12**

**Lets take the time taken to catch speeder is T sec from the time of notice**

**During this period the speeder travelled 40T**

**Reaction time = 1 sec**

**The police car travelled,**


**= 25 ( T- 1) + ½ (4) (T - 1) ²**

**Distances are equal**


**40T = 25 ( T- 1) + ½ (4) (T - 1) ²**

**Solve for T**

➢ **CHEMISTRY 12**



**2-(2,3-dimethylbutyl)-1,4-dimethylbenzene**



**6-methyl-7-(propan-2-yl)cyclodecyne**



**(6E)-oct-6-en-1-yne**



**(2E)-oct-2-en-6-yne**

➢ **CALCULUS & VECTORS**

(A) Find $\lim_{n\to\infty} \frac{\sqrt{x^4+1}-2x^2-1}{x^2}$

$$\lim_{n\to\infty}\left(\frac{x^2\sqrt{1+\frac{1}{x^4}}-2-\frac{1}{x^2}}{x^2}\right)$$

$$\lim_{x\to\infty}\left[\sqrt{1+\frac{1}{x^4}}-2-\frac{1}{x^2}\right]$$

$= 1-2 = -1$

**(B) Given that,** $\vec{P} = \hat{i} - 2\hat{j} + 3\hat{k}$

$\vec{Q} = 2\hat{i} - 3\hat{j} + \hat{k}$

**(i) Find the unit vector in the direction of**

$\overrightarrow{2P} - \overrightarrow{3Q} = 2(\hat{i} - 2\hat{j} + 3\hat{k}) - 3(2\hat{i} - 3\hat{j} + \hat{k})$

$= -6\hat{i} + 5\hat{j} + 3\hat{k}$

Ans : $1/\sqrt{70}\,(-6\hat{i} + 5\hat{j} + 3\hat{k})$

**(ii) Find a unit vector perpendicular to** $2\vec{P} - 3\vec{Q}$

**Eg. Scaler multiple (by -1)** $(6\hat{i} - 5\hat{j} - 3\hat{k})$

Ans : $1/\sqrt{70}\,(6\hat{i} - 5\hat{j} - 3\hat{k})$

**Given that,** $P = \hat{i} - 2\hat{j} + 3\hat{k}$

$\vec{Q} = 2\hat{i} - 3\hat{j} + \hat{k}$

**(ii)Find the unit vector in the direction of** $2\vec{P} - 3\vec{Q}$

**(ii) Find a unit vector perpendicular to** $2\vec{P} - 3\vec{Q}$

REVIEW QUESTIONS
- next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# ஸ்ரீ வெங்கடேஸ்வரா திருமணமாலை
# ஸ்ரீ அபிராமி திருமணமாலை

## கனடாவில் திருமணம் ஆகாத ஆண்கள்

01. 28.07.1986 - அச்சுவினி - High School - Home Renovation in Canada
02. 04.07.1984 - பூரம் 4ஆம் பாதம் - Accountant
03. 15.11.1986 - அச்சுவினி - Bank
04. 27.06.1983 - உத்தராடம் - College, C. Manager
05. 14.03.1990 - சித்திரை 4ஆம் பாதம் - Auto Engineer
06. 29.11.1988 - ஆயிலியம் - Electrical Engineer
07. 23.08.1984 - திருவாதிரை - ST. College - Manager
08. 06.12. 1986 - திருவோணம் - UK - College
09. 05.08.1987 - கேட்டை - No PR
10. 04.08.1990 - உத்தராடம் - வன்கூவர் - அரசாங்க வேலை
11. 14.03.1981 - திருவாதிரை - College - TD Bank
12. 19.07.1991 - சுவாதி - பூ வேலை
13. 28.06.1987 - பூசம் - College - Canada Post
14. 10.05.1982 - கேட்டை - Ireland - A-C, கனடா வர விருப்பம், உயரம் 5'6" - பிறந்த நேரம் 11:34 PM
15. 07.06.01983 - அச்சுவினி - Computer Science
16. 17. 15.07.1982 - பரணி - College Sysco Work
17. 18.09.1979 - மகம் - Global bank
18. 27.07.1982 - சித்திரை - மொன்றியல் - Elite parts company
19. 14.10.1982 - பூரம் - B.Com. - CGA, CPA - ATC
20. 07.06.01983 - அச்சுவினி - Computer Science

## கனடாவில் திருமணம் ஆகாத பெண்கள்

01. 28.08.1983 - அச்சுவினி - University - Store Manager
02. 23.09.1989 - புனர்பூசம் - TD Bank - A-c
03. 12.07.1990 - பூரட்டாதி - 1ஆம் பாதம் - York University
04. 13.09.1990 - University - B.Sc. - Nursing
05. 05.05.1984 - ஆயிலியம் - Government Job
06. 05.04.1991 - மூலம் - Nursing
07. 14.01.1991 - மூலம் - University -Double Degree
08. 06.07.1989 - மகம் - University - Business Administration
09. 14.06.1988 - மிருகசீரிடம் - Double Degree, IMT.DATA
10. 12.07.1988 - திருவாதிரை - Oshawa College - C.P Officer
11. 02. 12.1988 - உத்தரம் - Government Work - D.L Officer.
12. 22.04.1987 - அவிட்டம் 1ஆம் பாதம் - Pharmaceutical - Oshawa
13. 24.09.1989 - விசாகம் - A/C
14. 10.11.1991 - பூராடம் - Ryson University - Master degree
15. 24.01.1992 - உத்தரம் 4ஆம் பாதம் - University - Scotia Bank
16. 21.10.1987 - Christian - RC
17. 11.09.1993 - திருவாதிரை - Oshawa University - 5 years Nursing
18.03.1984 - அத்தம் - University - Softer Company
19. 29.11.1986 - சுவாதி - University - PHD.
20. 22.04.1982 - அவிட்டம் - Diploma in Medical

- இலங்கையில் 1987இல் பிறந்த Civil Engineer ஆகப் பணிபுரிபவர்.
- 1989இல் பிறந்த electric electronic
  இருவரும் கனடாவிலும், ஊரிலும் பெண் தேடுகிறார்கள்.
- ஊரில் விவாகரத்தான 35 வயது பெண்ணுக்கு கனடாவில் வரன் தேடுகிறனர்.

### கனடாவில் விவாகரத்துப்பெற்ற ஆண்கள், பெண்கள்

- 08.1976 - ஆண் - அனுசம் - Toronto - Diploma IT working now
- 05.06.1968 - ஆண் - உத்தரம் - பிள்ளைகள் இல்லை
- 18.08.1979 - ஆண் - Christian R.C. - பிள்ளைகள் இல்லை
- 15.09.1968 - ஆண் - பிள்ளைகள் இல்லை - Government Work
- 31.01.1984 - ஆண் - High School உத்தராடம் 2ஆம் பாதம் - பிள்ளைகள் இல்லை
- 01.06.1979 - ஆண் - ஆயிலியம் பிரான்ஸ் - PR - பிள்ளைகள் இல்லை விரும்பும் நாடு பிரான்ஸ், லண்டன், சுவிஸ், டென்மார்க்
- 12.02.1978 - பெண் - University - Working
- 27.10.1987 - பெண் - பூராடம் - Toronto University - Law Firm
- 25.08.1975 - பெண் - உத்தரட்டாதி 4ஆம் பாதம் - Diploma A-C
- 04.05.1980 - பெண்
- 29.09.1975 - B.Com. - H.N
- 07.04.1980
- 05.09.1979 - UK - London
- 15.07.1977 - Christian R.C.
- 19.11.1978 - Uk - London
- 27.11.1976 - UK - London
- 27.10.1981 - University
- 26.10.1967 - பெண் - Montreal
- 05.06.1968 - ஆண்

**முற்கட்டணம்**
**$25**

### இலங்கையில் திருமணம் ஆகாத பெண்கள், ஆண்கள்

**ஆண்கள்**

- 30.07.1988 - ரோகினி - A/L - பணி - பிரதேசசபையில்
- 27.04.1982 - மிருகசீரிடம்
- 20.09.1986 - குருகுலம்

**பெண்கள்**

- 09.12.1988 - கேட்டை - 7இல் செவ்வாய் - Jaffna University- Classical Dance Teacher - அண்ணன் கனடாவில்
- 09.10.1992 - பூரட்டாதி
- 19.09.1995 - ரேவதி - College
- 27.10.1992 - விசாகம் - A/L

## குழந்தைகள் உள்ளவர்

- 18.10.1986 - Montreal - இரண்டு பிள்ளைகள். 1 ஆண், 1 பெண்

**எங்களிடம் இராகு, கேது, காலசர்ப்ப தோசம், செவ்வாய் குற்றமுள்ள, எந்தக் குற்றமும் இல்லாத ஜாதகங்கள்,** University, College, Engineers **ஆண்-பெண் ஜாதகங்கள் படத்துடன் எல்லா வகுப்பினருடைய சில நூறு ஜாதகங்கள் என்வசம் உள்ளது. நேரில் வரவும்.**

தொடர்புகளுக்கு: **ராம் அலைக்ஸ்சாண்டர்** - ***647.389.4130***
***647.638.5304***

## பிறந்த சிசுக்கள் பராமரிப்பு!


பிறந்த சிசுக்களை தமிழ் மருத்துவ முறையோடு பராமரிக்கத் தெரிந்தவர் 20 வருட அனுபவம் பெற்ற இலங்கைப்பெண்மணி. குழந்தைகள் ஒரு வருடமாகியும் உடல் தேறாமல் இருந்தால் சாப்பாட்டு முறையால் குழந்தைகளை உடல் தேற்றிப் பெறவைக்கக்கூடியவர். குழந்தைகளின் இடுப்புக்குக் கீழ்பகுதிகள் சரியான சக்தி இல்லாத தன்மையால் வரும் சில குறைபாடுகளையும் தீர்த்து வைக்கக்கூடியவர்.

தொடர்புகளுக்கு: ***437.779.4373***

## நகைச்சுவைத் தொடர் 373 ராசம்மா ராச்சியம்




படைத்தல் காத்தல் அழித்தலை மும்மூர்த்திகளான பிரம்மா விஸ்ணு சிவன் பாரபட்சமின்றி செய்கின்றனர். ஆனால் உலகில் தமது கட்டுப்பாட்டிற்குள் ஒரு நாடு வராவிட்டால் அவர்களின் தலைக்கனம் அடக்க அவர்கள் செய்யும் தொழில் அழித்தல். எளியாரை வலியார் வருத்த வலியாரை ......?




அண்மையில் சிரியாவில் தாக்குதல்...கைகோர்த்து நின்ற நாடுகள் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ். பயங்கரமான இரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்கள் தேடி அழிக்கப்பட்டன.



நன்றி மறப்பது நன்றன்று என்பதற்கிணங்க ஆங்காங்கே போசன விருந்து வைபவங்களில் கலந்து கொள்கின்றனர்




உலகண்ணை! சிரியாவிலை எத்தினை பப்பிளிக்பீப்பிள் கில் பண்ணப்பட்டிருக்கினம்? எண்டு சொல்லமுதல் பேஸ்புக் வரதர் சிரித்துக்கொண்டு சொன்னார் உலகண்ணை, வோசிங்ரன் டீ.சியிலை றொனால்ட் ட்றம்ப் சிரியாவைத் தாக்குவம் எண்டு சொல்லி முடிக்குமுன் 105 ஏவுகணைகள்..... விமானப்படையாலும் கடற்படையாலும் ஏவப்பட்டன. விசேட விமானம் தாங்கி கப்பல்களிலிருந்து விமானங்கள் புறப்பட்டு தாக்கிவிட்டு அமைதியாக கடல் கப்பல்களில் வந்து ஆற அமர்ந்துகொண்டன. சில நிமிடங்களுக்கிடையில் பொதுமக்கள் பாலகர் சிறுவர் பெரியோர் முதியோர் தாக்குதலில் கொல்லப்பட்டனர். பொது இடங்கள் மக்கள் வாழும் இடங்கள் நிர்மூலமாக்கப்பட்டன.





ஏதோ சொல்லி வைத்தார்கள்... சாம பேத தான தண்டம். இப்பொழுது முதலில் தண்டம் பிறகுதான் பேச்சுவார்த்தை சமாதானம் சரிபிழைகள் கதைப்பது. ஐ.நா விசாரணை தொடங்கினால் கிட்டத்தட்ட 15 - 20 வருடங்கள் செல்லும். ஆனால் சிரியா - அமெரிக்கா பிரச்சினை... அமெரிக்கா செய்தது சரியா எனவும் இதனை ஐ.நாவில் விவாதிக்கலாமா என தீர்மானிக்கவே சற்று காலம் எடுக்கும்.







மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் (கோமளவல்லி) வழக்கு 15..20...வருடங்கள் இ..ழு..ப..ட..வி..ல் லை..யா. தீர்ப்பின்படி பணம் வசூலிக்க முடியவில்லை.

அதுசரி உலகண்ணை அமெரிக்கா உவ்வளவு கூத்தடிக்குது கேக்க ஒருதரும் இல்லையோ என விரதம் (சித்திரா பௌர்ணமி) சைவ சாப்பாட்டு மயக்கத்திலிருந்த செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்க...வரதர் தொடங்கினார்.


அமெரிக்கா புதிய தலைவர்களை உருவாக்கல்---------படைத்தல்
தாம் விரும்பிய நாடுகளை-----------------காத்தல்
தலைவணங்காவிட்டால் --------------------------அழித்தல்
தங்களுடன் சேர்ந்து சேர்ந்து பாடினால்-----அருளல்.
வறிய நாடுகள் என்றால் செய்திகளை------மறைத்தல்
எல்லாம் அவைதான்.



இவற்றிடையே...உலகர் மனம் எங்கோ சென்றது...
பணம் பந்தியிலே...குணம் குப்பையிலே...
ஒண்ணும் தெரியா ஆளானாலும் பணமிருந்தாலே...
அவனை உயர்த்திப்பேச மனித கூட்டம் நாளும் தப்பாதே!
பாடல் வரிகளை நினைத்துப் பார்த்தார்.



சில நாடுகள் வல்லரசு...
சில நாடுகள் வள்....ளரசு....
ஏன்..முல்லைத்தீவிலை எத்தினை நாடுகள் மறைமுகமாக ராணுவத்தோடை சேர்ந்து அழிச்சவை என வீராவேசத்துடன் இடைமறித்தா ஆட்டிலறி அன்னம்மா.



உண்மையான சம்பவம் தெரிந்தும் தெரியாமலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசியல்வாதிகள் தெரிவிக்கும் பரிதாப வசனம் கேக்க பரிதாபமாக்கிடக்கு.

இது வலிசுமந்த மாதம் எனச் சொல்லும்போது கண்கள் கலங்கிவிட்டன. பல உறவுகள் எங்கென்று தெரியாமல் இன்றுவரை இருக்கின்றனர். பலர் அவர்களை தேடிக்கொண்டேயிருக்கின்றனர். இது வலிசுமந்த மாதமல்லவா?



# பொது மக்கள் மீதான வான் தாக்குதல்

ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி றொறன்ரோ நோர்த் யோர்க் பகுதியில் பாதசாரிகள் மீது ஒருவன் வான் மோதிக்கொண்டு சென்றதில்10 பேர் உயிரிழந்துள்ளனர். 14 பேர் காயமடைந்துள்ளனர்.



வானை ஓட்டிச் சென்ற 25 வயதான Alek minassian என்னும் ரிச்சமண்ட் ஹில் பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



இதனிடையே இந்த தாக்குதலில் இலங்கையைச் சேர்ந்த 46 வயதான ரேனுகா அமரசிங்க என்ற சிங்கள பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளார்.



தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரான Alek minassian மீது 10 பிரிவுகளில் கொலைக்குற்றமும், திட்டமிட்ட கொலை முயற்சி தொடர்பாக 13 பிரிவுகளிலும் வழக்குகள் பதியப்பட்டுள்ளன.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வணக்க நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை Mel Lastman சதுக்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதமர் ஜஸ்ரின் ரூடோ உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.






## வேலை வாய்ப்பு

றொறொன்ரோவில் இருந்து வெளிவரும் பத்திரிகை மற்றும் இணையத்தளத்தில் பகுதிநேரமாகத் தொழில் புரிவதற்கு தகுந்தவர் தேவைப்படுகின்றார். தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, Graphic Design தெரிந்தவர், தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசக்கூடியவர் தங்களது சுயவிபரப் படிவத்தை (Resume)ஐ கீழுள்ள மின்னஞ்சல் (email)இற்கு அனுப்பவும். தெரிவு செய்பவர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

**email: helpwanted.application@hotmail.com**

## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management

All Classes available in Scarborough & Stouffville



Contact: 647.340.9490 / 416.732.2228

# கனவுகள் நான் காண வேண்டும்

கனவுகள் நான் காணவேண்டும் அவை கற்பனை அற்றதாய் வேண்டும்
நிஜங்களாய் மாறிட நிஜ தெய்வங்கள் அருள்தர வேண்டும்
நான் கண்டிடும் கனவுகள் ஒவ்வொன்றாய் தந்திடு இறைவா
யுத்தமற்ற பூமி வேண்டும் அதில் புது மலர்கள் பூக்க வேண்டும் - எதிலும்
குற்றம் காணாத மனிதர் வேண்டும் அதுவும் கற்பனை அற்றதாய் வேண்டும்
புது உலகாய் மா(ற்)றிடவே நன்மக்கள் பிறக்க வேண்டும்
இனியொரு விதி செய்வோம் என்ற கோசம் உரக்க வேண்டும் - இதுவும்
கற்பனை அற்றவைகளாய்

மனிதருக்குள் இருக்கும் மிருகங்கள் இடம் மாற வேண்டும் - அதிலே
மிருககுணம் கொண்டவர்கள் புது மனிதராய் மாற வேண்டும்
சத்தியங்கள் நிலைக்கவேண்டும் புது சத்திரங்கள் பிறக்கவேண்டும் - அதிலே
பசிகொண்ட மனிதர்கள் பசியாறி கண்துயில வேண்டும்
உலகாளும் தலைவர்கள் ஒன்றுசேர வேண்டும்
வரும் காலம் எல்லோர்க்கும் ஒன்றாக வேண்டும்




மனிதருக்குள் இனங்கள் வேண்டாம் வெவ்வேறு குணங்கள் வேண்டாம்
நிறங்கள் வேண்டாம் வெவ்வேறு மொழிகள் வேண்டாம் - அவையும்
கற்பனையற்றதாய் வேண்டும் நிஜ கனவாய் மாற வேண்டும்
யுத்தங்கள் வேண்டாம் குண்டு சத்தங்கள் வேண்டாம் - வீணாய்
இரத்தங்கள் சிந்த வேண்டாம் அதுவும் கற்பனையற்றதாய் வேண்டும்
நான் காணும் கனவுகள் நிஜமாக வேண்டும்
அணு ஆயுதம் வேண்டாம் சிறு அணுவளவும் வேண்டாம்
மனுநீதி காலத்து மனுதர்மம் வேண்டும்
பிறர்மீது வேற்றுமை வேண்டாம் நல் மனிதர்போல் வேடங்கள் வேண்டாம்
தனியாய் எதிர்கொள்ளும் சங்கடங்கள் வேண்டாம்
உனக்குள் ஊர் கூடி தேர் இழுக்கும் மாற்றங்கள் வேண்டாம்
அதுவும் கற்பனையற்ற நிஜமாக வேண்டும்
இவ்வளவும் கேட்ட எனக்கு இன்னுமொரு வரம் வேண்டும்
ஈழம் கண்ட துயர் துடைக்க நீ விரைவாக வரவேண்டும்
அகதியற்ற மனிதர்களாய் தமிழன் மாறவேண்டும்
அவதியற்ற வாழ்வுதனை மாற்றிவிட வேண்டும்
அதுவும் கற்பனையற்ற நிஜங்களாய் விரைவாக வேண்டும்
உலகாளும் நாதா உன்பதில் வேண்டும் எனக்கு.

- கவிஞர் -
தெல்லியூர் தயா -







Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
hotstar
NOW AVAILABLE
ஒருவருடச் சந்தா
$169
மாதச் சந்தா
$16
SET TOP BOX
INCLUDED
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
TENT KOTTA
SUN NXT
hotstar
CRICKET
BADMINTON
KABADDI
SUBSCRIBE NOW
SALES
647 968 1087
CUSTOMER SERVICE
647 694 1215
www.lycatv.tv

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for*
*1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*









**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com

*Some conditions apply

MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca


வீடு வாடகைக்கு பெற்றிட...
Mega Financial Group
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
Buy / Sell / Lease
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


we always care at...
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


Homesby Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
FREE Home Evaluation
FREE Home Staging
FREE Virtual Tour
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
SALES REPRESENTATIVE
647.545.8462


வீடு என்பது நமது கனவு
The Realtor for your Dream House
BUY...
SELL...
LEASE...
INVEST...
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc.
5215 Finch Ave East, #203 Toronto ON M1S 0C2 Tel: 416.321.6969



KOENIG
PROPERTY MANAGMENT LTD
We take the stress out of managing your investment property.
416.895.5000 • 1.800.909.7209


TOP 100 REALTORS IN CANADA (#68 of 21,000)
"கனவு உங்களுடையது
பொறுப்பு என்னுடையது"
Buy / Sell
RE/MAX
All-Stars Realty Inc.
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்


வீடு, நிலம், வர்த்தகநிலையங்கள்
வாங்க, விற்க, வாடகைக்கு விட அழையுங்கள்...
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
Bus: 905.201.9977
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4NB
*Independently Owned & Operated


அகத்தின் அழகு முகப்பில் தெரியும்....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com


BUYING OR SELLING
வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416.716.1540
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


BALACHANDRAN LAW
LITIGATION
எங்களுடன் தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்
AGHI BALACHANDRAN
Web: www.balalaw.ca
E-mail: aghi@balalaw.ca
East Office: 3852 Finch Avenue East, Suite#302, Scarborough ON, M1T 3T9
West Office: 151 City Centre Drive, Suite 201, Mississauga, ON, L5B 1M7
Tel: 647-466-2444
Fax: 647-494-5474


HOMES AND CONDOS FOR SALE
MARKHAM $999,800
Bedrooms:4+2 Washrooms:4
Scarborough $339,000
Bedroom: 1 Washroom: 1
TORONTO $249,000
Bedroom: 2 Washroom: 1
Whitby $375,000
0.75 Acres
Bedrooms:3 | Washrooms:1
Kawartha Lakes $389,900
Bedrooms:3 | Washrooms:2
Oshawa $399,900
Bedrooms:2+1 | Washrooms:1
மேலும் பல விற்பனைக்கு உண்டு.
1st, 2nd Mortgages Available up to 1 Million
A. ANTON JEEVA
Broker
Dir: 416.575.5055
RE/MAX
ROYAL PROPERTIES
Office: 416.321.0110
Fax: 416.321.0150